
# மலையக இலக்கிய தளங்கள்



சு. முரளிதரன்

மலையக இலக்கிய தளங்கள்

# மலையக இலக்கிய தளங்கள்
(கட்டுரை தொகுதி)

சு.முரளிதரன்

சாரல் வெளியீட்டகம்
7, ரொசிட்டா பல்கூட்டுச் சந்தை
கொட்டகலை

# Malayaga Ilakiya Thalangai

***(Collection of Literary Essays)***

**by**

**S.Muralitharan**

B.Sc (Hons), Dip in Ed, M.Ed (York),SLEAS

President

Sripada National college of Edúcation,

Patana .

First Editition: November 2001

Publication No - 05

Published by:

**Saral Publishers**

**7, Rosita Shopping Complex**

**Kotagala**

Tel : 051-24145

Printed by:

**New Green Leaf Print House**

87, Katugastota Road,

Kandy.

Price: 130/=

ISBN No: 955- 8589-01-2

# பதிப்புரை

இலக்கிய முயற்சிகளை நூலாக்கும் பணிகள் இன்று இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெறுகின்றன. எம் பதிப்பகத்தின் மூலம் தன்னுடைய நூலொன்றை வெளியிட சம்மதம் தெரிவித்த சு. முரளிதரன் ஏற்கனவே வெளி உலகுக்கு அறிமுகமானவர். ஆவரது மூன்று நூல்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன.

முப்பத்தேழு வயதிலேயே கல்வித் துறையில் முன்னணி வகிக்கும் முரளிதரன் தனது இளம்பராயத்தில் விஞ்ஞான மாணவனாக இருந்தாலும் இலக்கிய அம்சங்களில் கொண்டிருந்த ஈடுபாடு அவரது விசாலித்த இலக்கியப் புலமையை இந்த நூலில் வெளிப்படுத்துகிறது.

எமது பதிப்பகம் மலை நாட்டு எழுத்துக்களை அச்சேற்றுவதையே தனது பிரதான நோக்காகக் கொண்டது.

பதிப்பு முயற்சிகளில் ஈடுபடுவதற்கு மலையகம் தன்னைத் தயார் பண்ணிக்கொண்டு விட்டது என்பதை வெளிப்படுத்துவதற்கு இந் நூலும் ஒரு சான்றாக அமைகின்றது.

நிர்வாகி.
சாரல் வெளியீட்டகம்,
7, ரொசிட்டா பல்கூட்டுத் தொகுதி,
கொட்டகலை.
1.11.2001.

# என்னுரை

எனது எழுத்துத் துறை பிரவேசம் 1979-ல் நிகழ்ந்தது. கவிதைகள் எழுதுபவனாக அறியப்பட்ட நான், பின் மலையக இலக்கிய முயற்சிகள் குறித்து எழுதும் அணியினரோடு நெருக்கமாக இணைந்து கொண்டேன். எழுதுவதை விட எழுத்தாளர்களை நேசிப்பவனாகவும் இலக்கிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்பவனாகவும் அதிகம் செயற்பட்டிருக்கின்றேன். இதற்கு பெரிதும் பின்னணியாக இருந்தது அந்தனி ஜீவாவை மூலச்செயற்பாட்டாளனாகக் கொண்ட மலையக கலை இலக்கிய பேரவை.

''மலையக இலக்கிய தளங்கள்'' என்ற இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகளில் பெரும்பாலானவை தொண்ணூறுகளின் முற்கூறில் எழுதப்பட்டவை. இக்கட்டுரைகள் இலக்கிய கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்டவைகள். அன்று ஆய்வுக்குரிய விடயங்களாக தொட்டுக் காட்டப்பட்டவைகளில் சில புதிய தலைமுறைகளால் தொடர்ந்து ஆய்வுக்குட்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்நூல் வெளிவந்தே ஆகவேண்டும் என்பதில் என்னில் சாரல்நாடன் ஏற்படுத்திய நெருக்கடியும் அந்தனி ஜீவாவின் உந்துதலும் கொட்டகலை இலக்கிய உறுப்பினர்களின் ஆதரவும் (குறிப்பாக மொழிவரதன், மு. சிவலிங்கம், சற்குருநாதன், மல்லிகை சி.குமார், அருணா பொன்னம்பலம்) வெற்றியளிப்பது நிறைவாக இருக்கின்றது. தூரத்தே இருந்தாலும் எனைத் தூண்டி அரவணைக்கும் நண்பர்களான அகளங்கன், பெ.முத்துலிங்கம், ந.இரவீந்திரன் மற்றும் வ.செல்வராஜா அனைவரையும் இத்தருணத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்.அத்தோடு கலாநிதி அ.யோகராசா(கி.ப), கலாநிதி க. அருணாசலம் (பே.ப), கலாநிதி துரைமனோகரன்(பே.ப), பேராசிரியர் எஸ். தில்லைநாதன் (பே.ப) முதலானோரை நன்றியுடன் நினைக்கின்றேன்.

சாரல் பதிப்பகம் அதன் முதலாவது வெளியீடாக நான் தொகுத்த மலையக இளங்கவிஞர்களின் *விருட்சப் பதியங்கள்* வெளியிட்டிருந்தது. அதன் ஐந்தாவது வெளியீடாக *மலையக இலக்கிய தளங்களை* வெளியிடுவதனூடாக எனது நன்றிக்குரியதாகின்றது.

சு.முரளிதரன்

10.10.2001

# முன்னுரை

மலையக இலக்கியத்தில் ஆக்க இலக்கிய முயற்சிகள் 1930 களுக்கு பின்னரே முகிழத் தொடங்கின. இதற்கு வித்திட்ட பெருமை தோட்ட மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டிய தேசபக்தன் கோ. நடேசய்யரையே சாரும். இவரைத் தொடர்ந்து ஐம்பதுகளிள் மக்கள் கவிமணி சி.வி.யின் எழுத்துக்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவந்தன.

இதனால் மலையக மைந்தனின் எழுத்துக்கள் ஏனைய சமுகத்தினர் மத்தியிலும் பேசப்பட்டன. மலையக எழுத்துக்களுக்கு ஓர் அடித்தளமிடப்பட்டது. பேராசிரியர் கைலாசபதி பேன்றவர்கள் இவரை எழுதும்படி ஊக்குவித்தார்கள்.

அறுபதுகளில் மலையகத்தில் படித்த இளைஞர்கள் மத்தியில் ஓர் அபரீதமான ஆர்வமும், எழுச்சியும் ஏற்பட்டது. மண்ணின் மக்களைப்பற்றியும் அவர்களின் வாழ்வியலை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டும் படைப்புகளை படைக்க வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட்டது.

இதன் பின்னனியில் என். எஸ். எம். இராமையா, தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், மரியதாஸ், தமிழோவியன், மு.சிவலிங்கம், குறிஞ்சி தென்னவன், குமரன், மல்லிகை காதலன், என ஒரு பட்டாளமே அணி திரண்டது. இவர்களின் படைப்புகள் தேசிய ஏடுகளிலும், சிறு சஞ்சிகைகளிலும் மலர்ந்தன.

இந்த காலகட்டத்தில் தமிழகத்திலிருந்து வெளிவந்த திராவிட இயக்க பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், மகாகவி பாரதியாரை விட புரட்சிகவிஞர் பாரதிதாசனின் படைப்புகள் நன்கு அறிமுகமாகின்றன. அறிஞர்அண்ணா, கலைஞர்கருணாநிதியின் எழுத்துக்கள் கருத்துக்கள் மலையக இளைஞர்களிடையே வேகமாக பரவுகின்றன.

மலையக இளைஞர்களிடையே மண்ணின் மைந்தர்கள் என்ற உள்ளடக்கத்தின் காரணமாக மலையக மக்களின் பிரச்சினைகளை தங்கள் இலக்கிய படைப்புகளினூடாக வெளிப்படுத்தினார்கள. ஏனைய பிரதேச படைப்புகளிலிருந்து மலையக படைப்புக்கள் தனித்துவமாக திகழ்ந்தது. மலையக இலக்கிய வளர்ச்சியில் எழுபதுகளில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது. பின்னர் எண்பதுகளில் புதிய தலைமுறையினர் புதுமையான சிந்தனைகளுடன் கவிதை, சிறுகதை, கட்டுரை ஆக்க இலக்கிய படைப்புகளில் ஈடுபட்டனர்.

எண்பதுகளின் நடுப்பகுதியில் தனது வீரியமிக்க கவிதா வரிகளுடன் கல்லூரி மாணவனாகிய சு.முரளிதரன் அறிமுகமாகிறார். அவருடைய ''தியாகயந்திரங்கள்'' என்ற கவிதைத் தொகுதி அவரை திரும்பிப்பார்க்க வைத்தது. ''கூடைக்குள் தேசம்'' எனற ஹைக்கூ தொகுதி அலை கடலுக்கு அப்பால் இவரை அறிமுகப்படுத்தியது.

மின்னாமல் முழங்காமல் இவர் தன் கல்விப்பணியுடன் கலை, இலக்கிய பணியினையும் தொடர்ந்தார். அத்துடன் இளந்தலைமுறையினருக்கு ஆசானுமாக இருந்து வருகிறார். ஆற்றல் மிகுந்த சு.முரளிதரனிடமிருந்து மலையக இலக்கிய உலகு நிறைய எதிர்பார்க்கிறது.

மலையக ஆய்வாளர் மு. நித்தியானந்தனுக்குப் பிறகு தடம் புறலாமல் கனதியான ஆய்வு கட்டுரைகளை சு. முரளிதரன் எழுதியுள்ளார்.

சமுக வரலாற்றுக்கான மண் வாசனை நாவல்கள் என்ற தலைப்பில் மத்திய மாகாண சாகித்திய விழா மலரிலும், தொகுத்து பார்க்கையில் துயர வரலாறு சொல்லும் மலையக நாவல்கள், பேராதனை பல்கலைக்கழக வெளியீடான ''இளங்கதிர்'' இதழிலும் எழுதிய ஆய்வுக்கட்டுரை மலையக நாவல்கள் பற்றி ஆய்வுகள் செய்ய விரிவான தளத்திற்கு இட்டுச் சென்றது.

''மலையக இலக்கிய தளங்கள்'' என்ற தலைப்பில் வெளிவரும் இந்ந நூலை சாரல் வெளியீட்டகத்தின் மூலம் வெளியிடுவது பாராட்டக்கூடியது. கடந்த காலங்களில் மலையக கலை இலக்கிய பேரவையுடன் இணைந்து முனைப்பாக செயல்பட்டவர்களில் சாரல் நாடனும், முரளிதரனும் முக்கியமானவர்கள். பேரவையின் இரு தசாப்த கால பணிகளில் இவர்கள் இருவருக்கு பெரும்பங்குண்டு.

கவிஞரும், கல்விமானும், கட்டுரையாளருமான சு. முரளிதரன் இந்த நூலில் இதுவரை வெளிச்சத்திற்கு வராத பல தகவல்களை தந்துள்ளார். இவர் எழுதிய மலையக நாட்டாரியல் பற்றிய கட்டுரைகளும் நூலுருவில் வெளிவருவது காலத்தின் தேவையாகும்.

அந்தனி ஜீவா.
செயலாளர்,
மலையக கலை இலக்கிய பேரவை.

த.பெ.இல. 32
கண்டி

## பொருளடக்கம்

1 மலையக இலக்கிய பின்னணி.................................... 09

2 மலையக நாவல்கள் காட்டும் மக்கள் வரலாறு......... 23

3. மலையகமும் நாடகத்துறையும் .............................. 54

4. மலையகமும் கைலாசபதியும்................................. 67

5. ஐம்பதுகளில் மலையக சிறு சஞ்சிகை சூழல்............... 74

6. ஐம்பதுகளுக்கு பின் இலங்கை தமிழ் கவிதை
இலக்கியம் .............................................................. 86

7. மலையக இலக்கியத்தின் இரு கூறுகள்........................ 96

8. சமூக மாற்றத்துக்கான ஆசிரியத்துவமும் மலையகமும்.. 100

# மலையக இலக்கிய பின்னணி

இன்றைய இலக்கியச் சூழ்நிலையில் மலையக இலக்கியமென்பதால் உணர்த்தப்படுவது கூலிகளாக தமிழகத்திலிருந்து இலங்கையின் மத்திய பிரதேசத்துக்கு வெள்ளையர்களால் உழைப்புக்காக அழைத்துவரப்பட்ட இந்திய வம்சாவளி தொழிலாளர்கள் குறித்தெழுகின்ற படைப்புகளாகும். வெள்ளையர்களால் 1824ம் ஆண்டு முதல் காலந்தோறும் அழைத்து வரப்பட்ட இவ்விந்தியத் தமிழர்கள் புலம் பெயர்ந்த நிலையில் கிராமியமுறையிலிருந்து வேறுபட்ட பெருந்தோட்ட முறைக்கு தம்மை இயைபு படுத்திக் கொண்டு வாழத்தொடங்கி இந்நாட்டின் கணிக்கப்பட வேண்டிய தனித்துவமான இனக்குழுவாக தம்மை நிலைநாட்டிக் கொள்ள பிரயத்தனப்படுவது வரையுமான ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டு கால வரலாற்றுப் பின்னணியையொட்டி மேற் கிளம்புகின்ற இலக்கிய முயற்சிகள்

அதன் காத்திரம் கருதி கவனயீர்ப்பு பெற்ற பெருமை மலையக இலக்கியத்தைச்சாருமென்பர்.

இந்திய தோட்டத் தெழிலாளர்களை பெரும்பான்மை சமூகத்தினர் பல்வேறு அர்த்தங்களில் நோக்குகின்றனர். கள்ளத் தோணிகளாக, தம் காணிகள் பறிபோவதற்கு காரணமானவர்களாக, பார்ப்போரும் தென்னிந்திய படையெடுப்புகளோடு இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்களின் தொடர்ச்சியாக இவர்களை நோக்கி அச்சப்படுவோரும் இருப்பதைக்காணலாம். அவ்வாறானவர்களின் கண்ணோட்டத்திற்கு ஏற்ப இலங்கையில் இந்தியவம்சத்தினரின் இலக்கியங்கள் குறித்து பார்ப்போமாயின் அதற்கும் சில ஆதாரங்கள் இருக்கின்றன. கி.பி 14ம் நூற்றாண்டில் கேகாலைப் பகுதியின் கோட்டகமவில் கல்வெட்டில் பொறித்த வெண்பா காணப்படுவதும் குருணாகல் மாவட்ட தம்பதெனியவில் நாலாம் பராக்கிரமபாகு காலத்தில் தெவிநுவரவில் வாழ்ந்த புலவரான பேராசான் ஆக்கியதும் நமக்கு இலங்கையின் முதல் தமிழ் நூல் எனவும் கொள்ளப்படுவதுமான சரசோதிமாலை அரங்கேற்றப்பட்டதும் கவனத்துக்குரியன. இவ்வாறான தமிழர்களும் கயபாகுமன்னனால் அழைத்து வரப்பட்டு மாத்தளையை அண்டிய பகுதியில் குடியமர்த்தப்பட்ட தமிழர்களும் காலவோட்டத்தில் என்னவானார்கள்? அவர்களின் எச்ச சொச்சங்கள் வெள்ளையர்களால் கொணரப்பட்ட தமிழர்களோடு கொண்டிருந்த உறவுகள் ஏதாவது இருந்தனவா? என்பன ஆராய்ச்சிக்குரிய விடயங்களே.

இலங்கையின் மன்னராட்சி காலத்தில் வாணிப நிமிர்த்தம் வந்த பின் இஸ்லாத்தை தழுவிய அரேபியர்கள் மலையகப் பகுதியில் நிரந்தர குடிகளானமை அவர்கள் தமிழ்ப் பேசுபவர்களாக இருந்தமை பின்னர் தென்னிந்திய பகுதிகளிலிருந்து வந்த தமிழ் இஸ்லாமியர்களோடு கலந்தமை என்பவைகளுக்கு ஆதாரங்கள் உண்டு.

இவ்வாறு இடம்பெயர்ந்து தமிழகத்தினின்று

தொழிலாளர்களாக, கூலிகள் என்ற அடையாளத்தோடு பல்வேறு நாடுகளுக்கு வெள்ளையர்களால் அழைத்து செல்லப்பட்டவர்களை பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் நாடுகளின் சமூக கலாசார சூழல்களை அடிப்படையாகக் கொண்டு வகுத்து பின்வருமாறு பகுப்பார்.

1. இரு கலாசார நாடுகள் (மொறிஸியஸ், பிஜி, கயானா போன்றன)
2. ஆசிய பெரும்பான்மை சமூகங்கள் (இலங்கை, பர்மா, மலேசியா)
3. ஆபிரிக்க பெரும்பான்மை சமூகங்கள் (கென்யா, உகண்டா, தன்சானியா மற்றும் சம்பியா)
4. நவ காலனித்துவ நாடுகள் (தென்னாபிரிக்கா மற்றும் ரொடீசியா)

இதில் கயானா, பிஜி, மொறிஸியஸ் ஆகிய நாடுகளில் இந்தியர்களின் சனத்தொகை 50 சதவீதத்துக்கு அதிகமாகவும் ஏனைய நாடுகளில் 10 சதவீதத்துக்கு குறைவாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறு உலகளாவிய பெருந்தோட்டங்கள் பலவற்றில் காணக்கூடிய ஒருங்கமைவுகளான: இந்தியாவிலிருந்து (தமிழகத்திலிருந்து பெரும்பான்மையாக) குடிப்பெயர்ந்த தொழிலாளர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருத்தல், நிர்வாக அமைப்பு, பயிற்சி நுட்பமில்லா தொழிலாளர்கள், உற்பத்தியோடு இணைந்த சமூக அமைப்பு, புவியல்ரீதியாக தனிமைப்படுத்தப் பட்டிருந்ததால் பெருந்தோட்டத்திற்கு வெளியே திருமண மற்றும் பாலுறவுகளுக்கான தொடர்பு அதிகமில்லாத நிலையில் உள்ளுறவுகளால் ஆன சமூக தோற்றம் என்பதாக பெருந்தோட்டம் அமைகிறது. தோட்டமென்பது தொழிலாளி வேலை செய்யுமிடமாக அமையாமல், வசதிகளிருந்து வழிபாடுகள் வரை அங்கேயே முடக்கிக் கிடப்பதுவே வாழ்க்கையாக அமைவதால் தாம் சுமந்து

சென்ற நாட்டுப்புற அம்சங்களை எச்சங்களாகக் கொண்ட தோட்டப்புறங்களாக அவர்களின் சூழல்கருதப்படுகின்றது. இதனாலேயே கே. எஸ்.ராஜு பெருந்தோட்ட சமூகம் குறித்து தோட்டப்புறவியல் என்ற கருத்துருவாக்கத்தின் கீழ் தமிழில் ஆராயப்படவேண்டும் என வலியுருத்துவதும் கலாநிதி க. அருணாசலம் 'மலையக தோட்டத்தொழிலாளியியல் என்பதை முன்வைப்பதும் காணக்கிடைக்கின்றது.

இவ்வாறான அடிப்படையில் சர்வதேச தோட்டத் தொழிலாளர்களை முதன்மைப்படுத்தி பிறந்த இலக்கியங்களை ஒருங்கே நோக்க வேண்டும் என்ற அவாநிலையுற்ற கருத்து தோன்ற வேண்டியிருக்கின்றது. ஆனால் அது குறித்த பரஸ்பர பரிமாரல்கள் ஏற்ப்படுத்தப்படவில்லை. எனவே எல்லா இடங்களிலும் இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை எனக் கொள்ளப்பட வேண்டியதாகின்றது. இரு கலாசார நாடுகளில் குடிபெயர்ந்த தமிழர்கள் அங்குள்ள சமூகங்களோடு கலந்து விட்டமைகாரணமாகவும் பர்மாவில் இருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டமைக் காரணமாகவும் நாம் மலேசியாவோடு மட்டும் ஒப்பிட்டு பார்க்க வேண்டியதாகின்றது.

ஆனால் 'மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு அரை நூற்றாண்டு வரலாறு தான் உண்டெனினும் இலங்கை மலையக தமிழ் எழுத்தாளர்கள் போன்று ஒரு தனி மரபை இன்னும் அவர்கள் உருவாக்கிக் கொள்ளவில்லை.

இலங்கை மலையக தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை படிக்கும் போது அவை மலையக மண்ணுக்குச் சொந்தமானவை என்பது பளிச்சென தெரிந்துவிடும். ஆனால் மலேசியத் தமிழ் படைப்புக்கு தனி முத்திரை இல்லை என மலேசிய இலக்கியவரலாறு எழுதிய மா. இராமையா குறிப்பிடும் போது மலையக கனதி வெகுவாக அதிகரிப்பதோடு அதனை தனித்து நின்று நோக்குவதற்கான அவசியம் வேண்டப்படுவதாகின்றது.

மலையக தொழிலாளர் சார் இலக்கியத்தை நோக்குதற்கு

புக முன்னர் மற்றுமொரு அம்சத்தையும் கவனத்திற் கொண்டு தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும். அது புலம்பெயர் நிலை அற்று பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இருப்பவர்களை நோக்கியது. தமிழகத்து நீலகிரி பகுதிகளின் பெருந்தோட்டங்களில் பணிபரிபவர்கள் குறித்து ஆக்கப்பட்ட இலக்கியங்களும் தாயகம் திரும்பி அப்பகுதியில் மீள்வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் குறித்து எழுந்த இலக்கியங்களும் மலையக இலக்கியத்தோடு தொடர்பு படுத்திப் பார்க்கப்பட வேண்டியதாகின்றது. மற்றுமோர் அம்சமாக கொள்ளப்பட வேண்டியது. இலங்கை பெருந்தோட்ட இன அடையாளத்தை தவிர (சில சமயங்களில் வாய்ப்புகள்) ஏனைய அம்சங்களில் ஒருமை காட்டும் ஒரு லட்சமளவிலான சிங்களத் தோட்டதொழிலாளர்கள் குறித்து எழுந்த படைப்புகளாகும். ஆனால் இரு மொழியுறவுகள் இன்றும் தீவிரமாக நிலைப்படுத்தப்பட்டு பொது குணாம்சங்களை இனங்காணும் பாரம்பரியம் இலங்கையில் இன்னும் சரிவர தோன்றாத காரணத்தால் கேகாலை. இரத்தினபுரி. களுத்துறை பகுதிகளில் பெருந்தோட்ட சிங்கள இளைஞர்களின் படைப்புக்கள் நமக்கு அறிமுகமாதல் பூச்சிய நிலையிலேயே இருக்கின்றது.

அத்தோடு ஆங்கிலத்தில் உருவாகும் படைப்புகளையும் சேர்த்துக்கொள்ளலாம். எனவே நாம் இலங்கை மலையக தமிழ் இலக்கியமென இலக்கியப் படைப்பிலிருந்து ஒரு நுண்கூறினை எடுத்தே பகுத்தாய வேண்டும்.

அவ்வாறு மலையக தமிழ் இலக்கியமென கொள்ளும் போது இஸ்லாமிய எழுத்தாளர்களின் படைப்புகளை அதனுள் உள்வாங்கி கொள்வதில் புரிந்துணர்வோடு, புறத்தள்ளலின்றி, படைப்பு ரீதியாக ஒரு வடிகட்டல் பொறிமுறையை பயன்படுத்தி கணிசமான மலையக முஸ்லிம் எழுத்தாளர்களைக் அங்கிகரித்ததாக மலையக இலக்கியம் திகழ்கின்றது.

அவ்வகையில் தெல்தோட்டை பகுதியில் வாழ்ந்த வித்துவதீபம் அப்துல் காதிறுப் புலவரை (1866-1918), அவர் சமயம்

சார்ந்த கவிதைகளை முதன்மையாக படைத்தாலும், மலையக தொழிலாளர் குறித்து அவராக்கிய கவிதைகளை இனங்கண்டு மலையக கவிதை முன்னோடி என ஏற்றுக் கொள்ளுவதோடு மலையக இலக்கியத்திற்கு ஒரு புலமை சார் பின்பலம் இருப்பதையும் நிரூபித்து கொண்டுள்ளோம். 1918லிருந்து மலையகத்தில் ஊற்றெடுத்து பிரவாகித்த பாடல் மரபு பாவலர்களின் படைப்புகளில் கணிசமானவை கதிர்காம யாத்திரை போன்ற பக்தி மார்க்கமானவை என்பதை இவ்விடத்தில்மனங்கொள்ள வேண்டிய தாகின்றது.

இவ்வாறான ஒரு முன்னோட்டத்துடனும் தெளிவுடனுமே மலையக தமிழ் இலக்கியம் தொடர்பான அணுகுதல்களை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான சாத்தியமான சில அணுகுமுறைகள் குறித்த சிந்தனைகள் இங்கு சுருக்கமாக முன்வைக்கப்படுகின்றன.

1924ம் ஆண்டு தொடக்கம் கோப்பி பயிர்ச்செய்கைக்காகவும் தேயிலைப் பயிர்ச்செய்கைக்காகவும் சுதேசிகளைப் பயன்படுத்தி, தொழிற் கொள்வதன் சங்கடங்களை மனதிற் கொண்டு வெள்ளையர்கள் தமக்கு அனுகூலமான ஒரு தொழிற்படையை இறக்குமதி செய்ததாக தமிழகத்திலிருந்து மலையகம் வந்த தமிழ் தொழிலாளர்கள் அமைகின்றார்கள். இவர்கள் அந்த நூற்றாண்டின் முதல் தசாப்தம் வரை தமக்கென எவ்வித எழுத்து மூலமான சிருஷ்டி ஆக்கங்களை கொண்டிருந்தனரா என்பது நிச்சயிக்கப்படவில்லை. அது வரை இடப்பெயர்வின் போது சுமந்து வந்த ஒரே சொந்தமான சொந்த கிராமத்து நாட்டார் வடிவங்களில் நாட்டார் பாடல்கள், உள்ளபடியும் புதுச் சூழலுக்கு ஏற்ப திரிபு கொண்டும் எழுதா இலக்கியங்களாக பயின்றுவந்திருக்கின்றன. அவர்களின் கவலைகளும் அனுபவங்களும் கனவுகளும் ஜீவனிழக்காத வகையில் பிரதிசெய்யப்பட்டு இன்றும் அவர்களிடையே கிடைக்க கூடியதும் தொகுக்கப்பெற்றதுமான நாட்டார் பாடல்களில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

அது மட்டுமல்லாது நாட்டார் பாடல்களே இவர்களின் எழுத்து இலக்கிய வடிவத்தில் முதல் தோன்றிய பாடல் இலக்கிய மரபினையும் தோற்றுவித்திருக்கின்றது என்பதை அக்காலப் பாடல் பிரசுரங்களில் காண்பதோடு அத்தனிப்பாடல்கள் பல பிற்காலத்தில் இம்மக்களின் நாட்டார் பாடல்களாகவும் உள்வாங்கி கொள்ளப்பட்டதிலிருந்து உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. சாரல்நாடனின் ஆய்வின் படி 1918ம் ஆண்டு *கும்மியோ கும்மி கோப்பிக்காட்டு கும்மி* என்ற வில்சன் என்பாரின் பாடல்கள் அடங்கிய சிறுபிரசுரம் மலையகத்தின் முதல் இலக்கிய ஆவணமாக கொள்ளப்படவேண்டி இருக்கின்றது. அதனைத் தொடர்ந்து அறுபதுகள் வரை வெளியான 122 பாடல் நூல்களின் பிரசுரங்களானது இம்மக்களின் நாட்டார் தன்மையை முதலீடாக கொண்டவையே எனலாம்.

மலையக இலக்கியத் தொடர்பில் நோக்க வேண்டிய மற்றொரு அம்சம் அதன் வளர்ச்சிப் போக்கினை காலப்பகுப்பு செய்வதாகும். சுமார் எண்பது ஆண்டுகள் எழுத்து மரபு இலக்கியம் பயிலும் மலையக இலக்கிய வளர்ச்சியை வெறுமனே ஆண்டு வாரியாக காலப்பகுப்புச் செய்வது அர்த்தபுஷ்டியாக அமையாது. கவனிக்கத்தக்க சமூக மாற்றப் போக்குகள் இலக்கிய உள்ளடக்கத்தில் ஏற்ப்படுத்திய தாக்கங்களை வைத்து பல்வாறாக அவற்றை காலந்தோறும் இனங்காண வைக்கின்றது.

தமிழ் இலக்கிய வரலாறு குறித்து பல்வேறு ஆசிரியர்களின் கணிப்பில் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கு சங்ககாலத்துக்கு முன்னிருந்து கட்டம் கட்டமாக நோக்கப்பட்டிருக்கின்றது. ஈழத்து பூதன் தேவனார் பங்களிப்பும் அவரை இலங்கையராக சிலர் கருதுவதும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியையும் சங்க கால முதல் தொடங்குவர். பேராசிரியர் சிவதம்பி ஈழத்து வளர்ச்சியை யாழ்ப்பாண இராட்சியம் தொடங்குவதற்கு முன்பதான காலம், யாழ்ப்பாண இராடசிய காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், பிரித்தானியர் காலம் என வகுத்து பிரித்தானியர் காலத்தை உப பிரிவுகளாக பிரித்துள்ளார். இதிலே பிரித்தானியர்

காலப்பகுதியிலேயே மலையக இலக்கியம் தொடக்கமுறுகின்றது என்பது தெளிவு.

மலையக இலக்கிய வளர்ச்சியை பாகுபாடு செய்வதில் திருப்திகரமான முதல் முயற்சியை மேற்கொண்டவர் கலாநிதி க. அருணாசலம் ஆவார். அவர்

1.ஆரம்ப காலம் (1825-1920)

2.விழிப்புணர்ச்சி காலம் (1921-1950)

3.எழுச்சிக் காலம் (1960-முதல்)

எனப் பகுப்பது, இலகுவாக மலையக இலக்கிய போக்கினை மேலெழுந்த வாரியாக நோக்குவதற்கு போதுமானதெனினும், மலையக சமூகத் தொடர்பில் விழிப்புணர்ச்சி, எழுச்சி எனக் கொள்ளப்படுதல் தொழிற்சங்க அரசியல் கண்ணோட்டங்கள் அடிப்படையில் வேறுபடுவனவாகும். எனவே காலப்பகுப்பு முயற்சிகளின் போது கவனத்திற் கொள்வதற்கு சில முக்கியமான அம்சங்கள் உள்ளன.

இலக்கியமென்பது காலத்தின் உற்பத்தி. அது காலத்தையும் உற்பத்திக்கின்றது என்ற அடிப்படையில் இலக்கிய வளர்ச்சிக் கட்டங்களை இனங்காண்பது அவசியமாகும். படைப்புகள் குறித்து, படைப்பாளிகள் குறித்து, படைப்புப் பிறப்புச் சூழல் குறித்து அல்லது சமூக மாற்ற பின்னணி குறித்து இணங்கான வேண்டிய தேவை இலக்கிய வரலாறு குறித்து ஆய்வோருக்கு அவசியமாக இருக்கின்றது.

1824ம் ஆண்டு தொடக்கம் 1918ம் ஆண்டு வரை முதன்முதல் மலையக பிரசுரமென அடையாளங் காணப்பட்டுள்ள கும்மியோகும்மி கோப்பிக்காட்டு கும்மி வெளிவந்த காலம் வரையான பகுதியை வாய்மொழி இலக்கிய காலமாகவும், அதற்கு பின்னரான காலத்தை எழுத்துவழி இலக்கிய காலமாகவும் கொள்ளலாம். இந்த எழுத்து வழி இலக்கிய காலத்தை பகுப்பு செய்ய ஈழத்து இலக்கிய வளர்ச்சியை மதிப்பீடு

செய்வோர் நாவலர், பாவலர் துரையப்பாப்பிள்ளை போன்றோரை முதன்மைப்படுத்தி நோக்குவதற்கொப்ப மலையக இலக்கியப் போக்கில் முனைப்புடன் செயற்பட்ட முன்னோடிகளான கோதண்டராமநடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை, கே.கணேஷ், என்.எஸ். எம்.இராமையா போன்ற சரியாக இனங்காணப்பட்ட ஆளுமைகளை அடிப்படையாகக் கொள்ளலாம்.

நடேசய்யரின் இலக்கிய முயற்சிகள் மலையகத்திற்கு பாடல் மரபுக்கு அப்பாலான சிறுகதை, நாவல், கட்டுரை முதலான வழிகளுடாக மலையக மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகள், பத்திரிகைகள்- பிரசுரங்கள் ஊடாக மேற்கொள்ளப் பட்டதன் தொடர்ச்சியில் சி.வி.வேலுப்பிள்ளையின் பணி ஆரம்பமாகின்றது. ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆக்க இலக்கிய பண்புகள் மிகுந்ததும் தரமானதுமான படைப்புகள் அவரால் படைக்கப்பட்டதோடு அவர்களின் படைப்புகளும் மலையகம் கடந்த சர்வதேச பின்னணியில் அம்மக்கள் குறித்த கவனயீர்ப்பை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டவராக அவர் அடையாளங் காணப்படுகின்றார்.

அவரின் காலத்தோடு ஒட்டி இன்றைய மலையக சிறுகதை துறைக்கு சரியான அத்திவாரத்தையும் அதற்கான பாதையையும் சமைத்தவறாக என். எஸ்.எம் இராமையா விளங்குகின்றார். அதற்கு பின் ஒரு முற்போக்கான பாதையில் மலையக இலக்கியம் நடைபயில வழிவகுககும் ஒரு படைப்பாளர் குழு முனைகின்ற தன்மையை காணலாம்.

மலையக இலக்கிய வளர்ச்சி தொடர்பில் கைக்கொள்ளக் கூடிய மற்றுமொரு அணுகுமுறை பத்திரிகைகள் -சஞ்சிகைகள் அடிப்படையில் அவைகளின் இலக்கிய பங்களிப்புகளை மதிப்பிடுவது தொடர்பில் நோக்குவதாகும். (மணிக்கொடி காலம், மறுமலர்ச்சி காலம், சரஸ்வதி காலம் என நோக்கப் படுவதை கவனத்திற் கொள்க) தேசபக்தன், நவஜீவன், செய்தி, மலைமுரசு, நதி ,தீர்த்தக்கரை, கொழுந்து, நநதலாலா முதலானவைகளின்

பங்களிப்பு மறுமதிப்பீடு செய்யப்படுவதினூடாக காலப்பகுப்புகளை மேற்கொள்வது மற்றுமொரு பொருத்தமான முறையாகும்.

இயக்கத்தளங்களின் அடிப்படையிலும் இலக்கிய வளர்ச்சியை நோக்குவது மற்றுமொரு அர்த்தபுஷ்டியான முறையாகும். மலையகத்தில் தொழிற்சங்கங்கள், சமூக இயக்கங்கள், அரசியல் கட்சிகளென அமைப்புகள் காலந்தோறும் சமூக இயக்கத்தை நெறிப்படுத்துவனவாக இருந்திருக்கின்றமையையும் காணலாம். தொழிற்சங்கங்களில் மக்கள் தங்கியிருந்த காலம், இலங்கை திராவிட முன்னேற்ற கழகம்-மலையக இளைஞர் முன்னணி- மலையக மக்கள் இயக்கம் என சமூக சீர்த்திருத்த இயக்கங்களோடு இணைந்திருந்த காலம், அரசியல் கட்சிகள் தோற்றம் பெறும் காலம் என்பன அவ்வக் காலப்பகுதிகளில் தோனறிய இலக்கியங்களில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கின்றதைக் காணலாம். இவ்வியக்கத் தளங்கள் பல படைப்பாளிகள் முகிழவும் தொடர்ந்து அத்தளத்திலேயே இருந்து இயங்குவதையும் காணலாம். எனவே இவ்வடிப்படையை நோக்கியும் கவனஞ் செலுத்தி காலப்பகுப்பு செய்ய முடியுமெனவும் உணரலாம்.

இது போன்று இம்மக்களின் பிரஜாவுரிமை தொடர்பில் காலந்தோறும் காணப்பட்டிருந்த நிலைமைகளும் தோட்டங்கள் காலந்தோறும் தனியார் அரசு - தனியார் என கைமாறுவதும் இலக்கியப் படைப்புகளுக்குள் பதிவாகியிருக்கின்றதா என்பதை தேடியறிந்து அவ்வகையிலும் பகுக்கமுடியும். இவ்வாறு சில அடிப்படைகளில் காலப்பகுப்பு செய்யும் சாத்தியம் குறித்து பார்ப்பது போன்று படைப்புக்களை படைப்பாளர் பின்னணியில் இருந்தும் பகுக்க கூடிய தனித்தன்மை மலையக இலக்கியத்திற்கு இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மலையக இலக்கியமென்பதை கூறுப்படுத்தும் முயற்சியாக படைப்பாளர்களை ஒட்டி நோக்குவது அமையலாமென நினைக்கக்கூடாது. ஏனெனில் மலையக இலக்கியத்தின்

முக்கியத்துவத்தை அது எழுவதற்கான பின்புலத்தை மதிப்பீடு செய்வதால் இவ்வாறு படைப்பாளர் தொடர்பில் பார்ப்பதும் அவசியமானது. சுப்பிரமணியப்பாரதியார் தமிழகத்திலிருந்து தொழிலாளர்களாக வெளியேறி பிறநாடுகளில் துன்பப்படுவோர் குறித்து பாடுவதைக் கொண்டு பாரதியே மலையக இலக்கியத்துக்கு முன்னோடி என கருதுவோரும் உண்டு. அது போன்று தமிழகத்தில் இருந்து கொண்டு துன்பக்கேணி என்ற நெடுங்கதையைப் படைத்த புதுமைப்பித்தனும் மலையக இலக்கியத்தொடர்பில் கவனம் பெறுபவராவர். அதன் பின்னர் தமிழகத்து எழுத்தாளர்கள் பலரும் இலங்கை மலையக மக்கள் தொடர்பில் தமது படைப்பிலக்கியங்களைத் தந்துள்ளனர். ராஜம் கிருஷ்ணன், கோதண்டம், பார்த்தசாரதி என்பார் அதில் முக்கியமானவர்கள். இவர்களைத் தவிர மலையக இலக்கியம் படைப்பவர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. மலையக மண்ணில் பிறந்து அங்கேயே வாழ்ந்து வருபவர்கள்.
2. நேரடியாக தோட்ட தொழிலாளர் சூழலில் கலக்காவிடினும் அதன் அயற் சூழலில் வாழ்பவர்கள்.
3. இலங்கையின் ஏனைய பிரதேசத்தவர்கள் தொழில் நிமித்தம் மலையகம் வந்து வாழ்ந்தவர்கள்- வாழ்பவர்கள்.
4. இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழ்பவர்கள்.
5. மலையகத்தில் வாழ்ந்து பின் தாயகம் திரும்பியவர்கள்.
6. மலையகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்கள்.
7. மலையக பிரச்சினைகள் தொடர்பில் கவனஞ்செலுத்திய வெளிநாட்டு ஆங்கில எழுத்தாளர்கள்.

இதிலே முதலாவதாக குறிப்பிட்ட எழுத்தாளர் வகையினரே ஜீவனுள்ள மலையக இலக்கியப் படைப்பில் முன்னணி வகிக்கின்றனர். தொழிலாளராக, தோட்டத்துறை ஊழியர்களாக, ஆசிரியர்களாக, சமூக சேவைத்துறையில் உள்ளவர்களாக, தொழிற்சங்க - அரசியல் பணிப்புரிபவர்களாக அவர்களை மேலும் வகைப்படுத்த முடியும். குறிஞ்சி தென்னவன், மல்லிகை சி. குமார் போன்றோர் தொழிலாளராக இருந்து இவ்வகையில் பிரபல்யம் பெற்றோராவர். இத்தகையோரில் சிலர் பிற்பகுதியில்

தொழில் வாய்ப்புக்கள் காரணமாக கொழும்பு பகுதிக்கு சென்று அங்கிருந்து மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பவராக கணிசமானோர் உளர். தெளிவத்தை ஜோசப், அல் அஷோமத், கங்குலன் சடகோபன், அன்புச்செல்வன் போன்றோரை இவ்வாறு குறிப்பிடலாம்.

மூன்றாவதாக குறிப்பிடப்படும் வகையினரில் முக்கியமானவர்களாக தி. ஞானசேகரன், பெனடிக் பாலன், புலோலியூர் சதாசிவம் ஆகியோர் திகழ்கின்றனர். மலையக மக்களின் பிரச்சினைகளின்பால் உளப்பூர்வமாக ஒன்றுபட்டு கணிக்கத்தக்க நாவலிலக்கியம் படைத்தோர் இவ்வகையினரே. அதைப்போல் வடக்கு கிழக்கு பகுதியில் வாழ்ந்தாலும் இம்மக்களின் துயர்களை கேள்வியுற்று உளமிளகி டானியல், முருகையன், அ.செ. முருகானந்தம் போன்ற பலர் தாக்கமாக இலக்கியங்களை படைத்துள்ளனர். சி. பன்னீர்செல்வன், வண்ணச்சிறகு அரு. சிவானந்தன், சி.ராஜு, வீரா. பாலச்சந்திரன் போன்ற முக்கிய மலையக எழுத்தாளர்கள் தாயகம் திரும்ப வேண்டிய சூழலில் தமிழகம் சென்று அங்கிருந்து மலையக இலக்கியம் படைப்பவர்களாக திகழ்கின்றனர். மாத்தளை சோமு அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தாலும் தொடர்ந்தும் மலையக இலக்கியச் சிந்தனையில் இருப்பதைக் காணமுடிகின்றது.

இவ்வாறு வாழ்வோர், வந்தோர், கேட்டோர், உணர்ந்தோர் என பல்வகைப் பட்டவர்களின் பங்களிப்பு மலையக இலக்கியத்திற்கு இருப்பது அதன் தனித்துவத்திற்கும் செழுமைக்கும் காரணமாக இருக்கின்றமையை காணலாம். இவ்வாறு கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் உரைச்சித்திரம் என மலையக மக்கள் தொடர்பில் ஆவணங்களாகக் கொள்ளத்தக்க ஏராளமான படைப்புக்களை மலையக இலக்கியம் உள்ளடக்கியுள்ளது.

சிந்துப்பாடல் வழி மரபில் ஊற்றெடுத்த மலையக கவிதையை சிதம்பரநாத பாவலர், கோவிந்தசாமி தேவர், காசி. ரெங்கநாதன், ஜில், பெரியாம்பிள்ளை, வேல்சாமிநாதன் என

பெருவாரியானோர் வளர்ந்து வந்துள்ளனர். நாற்பதுகளில் தனிக்கவிதைகள் ஆக்கும் பண்பும் அது அறுபதுகளில் வெகு சிறப்புப் பெறுவதும் எழுபதுகளில் புதுக்கவிதைகள் தோற்றம் பெறுவதும் நிகழ்ந்துள்ளது.

தேயிலைத் தோட்டத்திலே, குறிஞ்சிப்பூ, தூவானம், குறிஞ்சித் தென்னவன் கவிதைகள், விழிப்பு, தியாகயந்திரங்கள், ஓவியம், மலைக்குயில், கூடைக்குள் தேசம், முகவரியைத் தொலைத்தவர்கள், மாடும் வீடும், வாழவா தோழா, குன்றத்து குமுறல்கள் முதலானவை மலையகத்தில் எழுந்த முக்கியமான கவிதை நூல்களாக கொள்ளத்தக்கவை.

மலையக சிறுகதை எனும் போது ஐம்பதுக்கு குறையாத சிறுகதையாளர்கள் ஒரு தனித்துவ பிரதேச இலக்கியமென்ற அடையாளத்தை வலியுருத்தும் பண்பினைக் கொண்ட சிறுகதைகளை ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே, என். எஸ். எம். இராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து மலரன்பனின் கோடிச் சேலை மு. சிவலிங்கத்தின் மலைகளின் மக்கள் ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் இலங்கை சாகித்திய மண்டல பரிசை பெற்றுக் கொண்ட சிறுகதை தொகுப்புக்களாகும். மொழிவரதனின் மேகலைராகங்கள் ஆப்தீனின் இரவின் ராகங்கள் சாரல்நாடனின் மலைக்கொழுந்தி கோவிந்த ராஜுவின் பசியாவரம் மாத்தளை சோமுவின் அவர்களின் தேசம் என்பவை குறிப்பிடத்தக்க மலையக சிறுகதைத் தொகுப்புகளாகும். கதைக்கனிகள், தோட்டக் காட்டினிலே, மலையக பரிசுக்கதைகள், மலையக சிறுகதைகள், தீர்த்தக்கரை கதைகள், உழைக்கப்பிறந்தவர்கள், என்பவை பல சிறுகதையாளர்களின் சிறுகதைகளைக் கொண்ட தொகுப்புகள். இவ்வாறு நூல் வடிவில் வந்த சிறுகதைகளை நோக்கும் போது மலையக இலக்கியச் செழுமைக்கும் அங்கீகரிப்புக்கும் சிறுகதைகளே காரணமாகி யிருக்கின்றதென்பதை உணர்ந்து கொள்ளலாம்.

சுந்தரமீனாள் எனும் மலையகத்தின் முதல் நாவல் தொடக்கம் இன்று வரையான காலம் வரை கணிசமான நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. இந்நாவல்களை தொகுத்து நோக்கும் போது அங்கு தெளிவாக இனங்காணக்கூடிய அம்சமாக இருக்கக்கூடியது அவை மலையக மக்களின் வரலாற்றின் பல்வேறு கட்டங்களை சித்தரிக்க முனைந்திருப்பதாகும். எனவே தூரத்துப்பச்சை, வீடற்றவன், மலைக்கொழுந்து, சொந்தக்காரன், தாயகம், குருதிமலை, மூட்டத்தினுள்ளே, இனிப்படமாட்டேன, எல்லைத் தாண்டாத அகதிகள், லயத்துச் சிறைகள், கவ்வாத்து என அவ்வாறான பல நாவல்களை வரிசைப்படுத்துவோமாயின் அதுவே இன்று வரையான மலையக மக்களின் வரலாற்றைக் கூற போதுமானவையாக இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு பல தளங்களின் பின்னணியில் மலையக இலக்கியம் விரிவாக ஆராயப்பட வேண்டும். அப்போது தான் அதன் காத்திரம் அவ்விலக்கியத்துள் புதைந்திருக்கும் துயரம் - சோகம் - போர்க்குணம் - மானுடநேயம் என்பவைகளை சரிவர இனங்காட்டி மலையக இலக்கியத்தின் முன்னோடியான தன்மையை உணர்த்த முடியும். அது நிறைவேறும் போது மலையக இலக்கியம் என்பது மாறி இலக்கியத்தில் மலையகம் என பேசப்படுவதாக இருக்கும்.

(1996-ல் மலையக தமிழாராய்ச்சி மகாநாட்டினையொட்டி மாத்தளையில் நடந்த முன்னோடிக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது.)

# மலையக நாவல்கள் காட்டும் மக்கள் வரலாறு

ஒரு கதை எந்த இடத்தில் நடப்பதாக காட்டப்படுகின்றதோ அந்த இடத்தை தவிர வேறு இடத்தில் அது நடந்திருக்க முடியாது என்றும் அந்த குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்திருப்பவரன்றி பிறிதொருவர் அதை எழுதி இருக்க முடியாது என்று கருதுமாப் போல் அந்த கதையின் இழையமைதியும்,பின்னணியும் அமையுமானால் அக்கதை வட்டார வண்ணம் உடையது எனும் போம்ளின் கார்ன்ட் பிரதேச (மண்வாசனை) நாவல் தொடர்பாக வைக்கும் வரைவிலக்கணத்தோடு, இன்றுவரை பிறந்திருக்கின்ற மலையக மண்வாசணை நாவல்களை ஒருங்கே நோக்கும் போது அவையனைத்தும் பிரதேச வகைப்பாட்டுக்குள் அடக்கக் கூடிய குணாம்சங்களை வெகுவாக கொண்டிருக்கும் பாங்கு அவற்றின் தனித்துவ தன்மைக்கு வெளிச்சம் போடுவதாக அமைந்திருக்கின்றது.

சமுதாயத்தில் உள்ள குற்றங்கள், குறைகள், அழுகுகள், விகாரங்கள், பெருமைகள், சிறுமைகள் அனைத்தையும் எவ்விதமான தணிக்கைக்கும் இடமின்றி நுணுக்கமாக எடுத்துரைப்பது சமூகநாவல்களில் பண்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் மலையக நாலல்கள் இன்றும் பலபடிகள் மேலே சென்று சமூகப் பொறுப்புகள் மிகுந்த படைப்பாளிகளிலிருந்து பிறந்தவைகளாகவும் காலமாற்றங்கள் நிகழும் காலகட்டங்களை உள்வாங்கிக் கொண்டவையாகவும் அமைகின்றன. எனவே சமுதாய வரலாற்றினை படம் பிடிப்பது என்பது அவற்றின் இழையோட்டமாக அமையப் பெற்றிருக்கின்றன.

இப்போக்கு நாவல்களில் மாத்திரம் அவதானிக்கப் படுவதில்லை சிறுகதைகள் பலவும் மலையகத்தில் இந்நோக்கத்தின் பால் பிறந்துள்ளமையை அறியக் கூடியதாக இருக்கின்றது என்றாலும் நாவல்களில் வரலாறு பதிந்த அழுத்தமும் தெளிவும் சிறுகதைகளுடாக வெளிப்படுத்தப்படவில்லை என்பது

உண்மையாகும். இந்த புலம் பெயர்ந்த வாழ்க்கைக்கான மக்களின் கதையைக் சொல்லும் இலக்கியப் பாங்கு எங்கே ஆரம்பமாகின்றது என்பதைப் பார்க்கும் போது, பளிச்சென்று மலையக நாட்டார் பாடல்கள் நம் ஞாபகத்துக்கு வருவது தவிர்க்க முடியாதவாறு அவற்றின் பங்கு ஆழமாக இனங்காணப்பட்டுள்ளது.

"ஆளுக்கட்டும் நம்மசீமை
அரிசிபோடும் நம்மசீமை
சோறுபோடும் கண்டிச்சீமை
சொந்தமினு எண்ணாதீங்க

சுமார் நூற்றியறுபது ஆண்டுகளுக்கு முன்னர் வந்தேறு குடிகளாக இங்கு வந்து சொந்த நாட்டு மக்களே செய்யாத வேலைகளை தாமேற்று உடலையும் உயிரையும் இலங்கைக்கே அர்ப்பணிக்கும் மலையக மக்கள் 1825ம் ஆண்டு கோப்பிப்பயிர்ச் செய்கைக்காக இலங்கை வரும் போது இப்பாடலைத்தான் பாடி வந்தார்கள். தாம் உழைக்கப்போகும் மண் தமக்குச் சொந்தம் இல்லை என்ற எண்ணத்தோடு வந்தவர்கள்.

"பாதையிலே வீடிருக்க
பழனிச்சம்பா சோறிருக்க
எருமே தயிரிருக்க
ஏன்டி வந்த கண்டிச்சீமை?
என்று கேட்டுக் கொண்டார்களஂ"
"ஊரான ஊரிழந்தேன்
ஓத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நாமறந்தேன் "

என தமது துயரங்களை சொல்லி அழுதார்கள். எத்தனை எதிர்பார்ப்புகளோடு இலங்கை வந்து சேர்ந்தவர்களின் கனவுகளில் பாறாங்கல்லை போட்டு நைத்தது வெள்ளையரின் தோட்ட நிர்வாகம். இப்படித்தான் மலையக இந்திய வம்சாவளித் தமிழரின்

சோக வரலாறு ஆரம்பமாகின்றது. இந்த சோக வரலாற்றை சொல்ல, முதலில் கோ.நடேசய்யர் என்ற இந்த மக்களின் துயர் துடைக்க நினைத்த பெரு மனிதர் "தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம் " எனும் வசனமும் பாடலும் கலந்த நாடகத்தை வெளியிட்டு மலைநாட்டின் படைப்பிலக்கியத்துக்கு அடியெடுத்துக் கொடுத்தார். அதனில் தொடங்கிய மலையக இலக்கிய யாகம் காலந்தோறும் புதுப்புதுப்படைப்புகளை தந்தது.

யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை, தென்னிலங்கை, வன்னி என பிரதேசங்களை முனைப்பாகக் கொண்டு, மண்வாசனை நாவல்களை நாற்பதுகளிலேயே இலங்கை தரத்தொடங்கி தமிழ்கதை இலக்கியப் பரப்பில் தனித்துவ முத்திரை குத்தத் தொடங்கிய காலத்திலேயே, ஓரு குறுகிய கால வரலாற்றைக் கொண்டிருந்த மலையக மக்களிடையே தோன்றிய எழுத்தாளர்களும் அதையொட்டி செயற்படத் தொடங்கினர்.

இன்னும் தாம் விட்டுப் பிரிந்து வந்த பூமியை பிரித்துப் பேச முடியாத இணைப்பு, வறுமையே வடிவாகிப்போன வாழ்நிலை, துரைத்தனம் கங்காணித்தனம் எனும் ஓடுக்கு முறைக்காடுகளிடையே அடங்கிப் போகும் வாழ்வு, பாலியல் வக்கிரங்களுக்கு பலியாதல், அரசியல் மாற்றங்களுக்கும் தமக்கும் எட்டாத தூரம் என எண்ணிக்கொள்ளும் மனப்பாங்கு, இன்னோரன்ன இந்த சமுதாயக் கட்டமைப்புக்கே உரித்தாகிப் போன குணாம்சங்கள் இவர்களை இலங்கையின் ஏனைய தமிழ் மக்களின்று பிரித்தறிய பெரிதுமுதவும். அத்தகைய இயல்புகளே இவர்களின் மண் வாசனை. அட்டைக்கடிபடுவோர் எனப்படும் அற்புதமான குறியீட்டு முத்திரை இன்றும் தாம் வாழும் தோட்டத்தை விட்டு வெளியே என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளாத கிணற்றுள் இயங்கும் இயந்திரங்கள் மலிந்த பூமியில், இலட்சியத்துடிப்போடு மலர்ந்த எழுத்தாளர்கள் இம்மக்களின் சோகத்தை கவிதைகளாக, நாவல்களாக சொல்லியிருக்கின்றார்கள். இவர்கள் குறித்து எழுந்த நாவல்கள் சிலவற்றில் எவ்வாறு இவர்களின் அவல வரலாறு அழுத்தம் பெறுகின்றது என்பதை

தொகுத்துப் பார்க்கும் போது உண்மை வரலாறொன்று இன்னும் இவர்களைக் காட்ட எழுதப்படவில்லை என்ற ஆதங்கத்தை சற்றே தணிக்கக் கூடியதாக இருக்கும்.

இலங்கையில் ஆங்கிலேயர்களால் பெருந்தோட்டங்கள் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. சிங்கள மக்கள் சொந்த நாட்டிலே நாங்கள் கூலிகளாக பணிபுரிய மாட்டோம் என வெகுள்கின்றனர். வெள்ளையர்களுக்கு அது போதும், ஆபிரிக்கத் தொழிலாளர்களை வைத்து அமெரிக்காவை கொழிக்கச் செய்தவர்கள் - பிஜித்தீவிலே கரும்புத் தோட்டத்திலே வியர்வையும் கண்ணீரையும் சீனியாக்கியவர்கள். அவர்களுக்கு ஏகாத்தியத்துக்கு சொந்த நாட்டுத் தொழிலாளர்களை வேலை கொள்வதிலும் பார்க்க இறக்குமதித் தொழிலாளர்களை வைத்து அவர்களில் சுதந்திர உணர்வு கிளராமல் வேலை வாங்கிக் கொள்ளத் தெரியும்.

தென்னகத்தில் அக்காலத்தே தலை விரித்தாடிய பஞ்சத்தால் தமிழர்கள் குலைந்து போயிருந்தனர் சாதிய அடக்குமுறை அவர்களில் பலரை எந்தப் பாலைவனத்துக்கு போனாலும் பரவாயில்லை என்ற நிலைக்கு தள்ளிவிட்டிருந்தது. இந்த நிலையில் இலங்கையில் தேயிலைத் தூர்களின் கீழ் மாசியும் தேங்காயும் விளைகின்றது வாருங்கள் என்னும் ஆசை வார்த்தை பேசி ஆள்கட்டும் கங்காணிகளுக்கு கேட்கவா வேண்டும். இந்திய கிராமங்கள் இலங்கையின் மலைப்பகுதிக்கு இடம் பெயர்ந்தன.

இந்த வரலாற்றின் ஆரம்பத்தை புதுமைப்பித்தன் தனது 'துன்பக் கேணி ' எனும் நெடும் சிறுகதையில் அவலச் சுவை ததும்ப கூறுகின்றார். அக்கதையை அடியொன்றில எழுந்த "தூரத்துப் பச்சை " யெனும் நாவல் (1964) முதல் மூன்று தலைமுறையின் கதைகளை அற்புதமாகச் சொல்லுகின்றது.

*அவன் கற்பனையெல்லாம் இலங்கை போய் பணத்தை குவித்துக் கொண்டு இங்கே பெரிய வீடுவாசல் கட்டிக் கொண்டு, நிம்மதியாக வயது சென்ற காலத்தில் வாழ*

*வேண்டுமென்பது தான். அன்றியும் அங்கு போய் நிம்மதியாக பசி பட்டினியின்றி இன்பமாக அடிக்கடி திருப்பி ஊருக்கு வந்து போவதாகவும் அவன் உள்ளத்தில் கற்பனைகள் சுற்றி வட்டமிட்டன. எத்தனை எத்தனையோ இன்பக் கனவுகள் அதாவது தேயிலைக் காப்பிச் செடிகளின் தூர்களில் பொற்காசுகள் குவிந்து கிடப்பதாகவும் அதை அள்ளி அள்ளி ஊருக்கு கொண்டு வருவது போலவும் சேந்தூர் கிராமத்தில் எல்லோரும் இவனை அதிசியத்தோடு பார்ப்பதாகவும் இவனுக்குத் தனியே மரியாதை அளிப்பதாகவும் வள்ளியை நல்ல இடத்தில் மணம் முடித்து நல்ல நிலையில் கண்டு களிப்பதாகவும் அவன் எத்தனை எத்தனையோ கற்பனைக் கனவுகள் கண்டு வந்தான். "*

இப்படி தூரத்துப் பச்சை நாவலாசிரியர் கோகிலம் சுப்பையா, ஆசை வார்த்தை கேட்டு, மனதில் அலைபாயும் எண்ணங்களை வேலன் எனும் பாத்திரத்தினூடு கூறுகின்றார். இந்த வேலன் சிறுமியான தனது மகளோடு இலங்கை வருகின்றான். அந்த சிறுமி வள்ளி தான் நாவலின் பிரதான பாத்திரம். இந்தப்பாத்திரத்தினூடாக தமிழகத்தை விட்டு இலங்கை வரும் போது அனுபவித்த துன்பங்கள், தோட்டப் பகுதியில் தமது வாழ்க்கையை நிலைப்படுத்திக் கொள்ள முகங் கொண்ட சங்கடங்கள். தோட்ட வாழ்க்கை உழைப்பு - உழைப்பு என்பதை விட எவ்வழிகளில் துயரச் சிலுவையாக தோளில் அமர்கின்றது என்பதை காட்டுகிறார்.

*"கங்காணியின் களல்பாயும் கண்கள் அவளை அடிக்கடி ஊடுருவுவது அவனுக்குத் தெரியும். கணக்கப்பிள்ளை கை நடுங்க தொடை சொறிந்து கொண்டே புடைக்கும் நரம்புகளை தளர்த்த முயன்று விம்மிப் பொருமிப்பெருமூச்சு விட்டு, பசி தீர உணவருந்த விரும்பும் மனிதனைப் போல அவளை கண்கொட்டாது பார்த்துக் கொண்டு நிற்பதும் . . .?*

என நாவலாசிரியை இளம் பெண்கள் அதிகாரிகளால்

பாலியல் ரீதியில் ஒடுக்கப்படுகின்றார்கள் என்பதை சிவகாமி எனும் பாத்திரத்தூடு காட்ட முனைகின்றார். அது மட்டுமல்லாமல் தன்மானத்தோடு எவ்வாறு பெண்கள் துயரப்பட்டு வாழ்ந்து காட்டுகிறார்கள் என்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இந்த நாவல்கள் தொழிலாளர்களின் பன்முகப்பட்ட பிரச்சினைகளை அலசி இறுதியில் சங்கம் அமைக்கும் முயற்சியில் தொழிலாளர்கள் ஈடுபடுவது வரை காட்டி நிறைவடைகின்றது. சுதந்திரத்திற்கு முன்னரான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நிலை அறிந்து கொள்ள இந்த நாவல் பெரிதுமுதவுகிறதெனலாம்.

இவ்வாறு தொழிற்சங்கம் அமைப்பதோடு தொடர்பான சம்பவங்களை கருவாக்கி எழுந்த நாவல்களுள் சிறப்பானது சி.வி வேலுப்பிள்ளையின் '' வீடற்றவன் '' என்பதாகும். இந்த மக்களின் வரலாற்றில் இரண்டாவது கட்டமாக கொள்ளப்படத்தக்கது. அவர்கள் தொழிற்சங்கங்களை அமைத்து தமது நல்லுரிமைகளை பேணிக் கொண்டமையாகும். அப்பப்பா அதற்காகத் தான் எத்தனை எத்தனை போராட்டங்கள் உயிரிழப்புகள். இதற்காக தம்மை அர்ப்பணித்த தியாகிகளின் கதை விரிவாக ஆராயப்பட வேண்டும்.

1962இல் வீரகேசரியில் ''வீடற்றவன்'' தொடர் நவீனமாக வந்து 1981 இல் இது நூலுரு பெற்றது. சி.வி ஒரு பழுத்த தொழிற்சங்கவாதி சிறந்த இலக்கிய கர்த்தா - இந்த இரு பரிமாணங்களும் இணைந்ததன் வெற்றிதான் ''வீடற்றவன'' இராமலிங்கம் இந்த நாவலின் கதாநாயகன். தொழிற் சங்கத்தை தோட்டத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகளால் நிர்வாகத்தினரால் குழப்பக்காரனென முத்திரை குத்தப்பட்டு, அவன் அலைக்கழிக்கப்படுவது நாவலின் இழையோட்டம்.

*பதினொரு மணிக்கு ஆண்டிமுத்துக் காட்டுக்கு வந்தான். வயது 28 இருக்கும். நடுத்தர உயரம், மல் வேஷ்டி, டுயிட் கோட், வெள்ளை கமிஸ், தலையில் தும்பைப் பூ போன்ற கணக்கப்பிள்ளை முண்டாசு அணிந்திருந்தான்.*

சின்னத்துரை நடப்பது போல ஆடி ஆடி நடந்து வந்து நின்று கவ்வாத்து கங்காணியைக் கூப்பிட்டான். அவன் பேசும் பேச்சு வெள்ளைக்காரன் தோரணையில் அமைந்திருந்தது.

யேய் கங்காணி, யெங்கே வேலை எப்படி "
''நல்லா இருக்குதுங்க "
ராமலிங்கம் வெட்டும் நிரையைப் பார்த்து,

''யெந்த நெரை யார் கங்காணி "என்று கேட்டான் ஆண்டிமுத்து.
''ஏய் இது யாரப்பா ?" எனக் கூச்சல் போட்டான் கங்காணி.

''மடப்பயல், மடப்பயல் இந் மாதிரி வேலே கெட் வேலே, இது நாட்டு தோட்மிலே " என்றான் ஆண்டிமுத்து
"ஏய் இந்த நெரை யாரப்பா ?"
எல்லாத் தொழிலாளர்களும் நிமிர்ந்து நின்றார்கள். அதோ ராமலிங்கமும் நிமிர்ந்தான்.

"என் நெரைங்க" என்றான் ராமலிங்கம்.

அனேகமாய் அவன் கணக்கப்பிள்ளையின் உள்கருத்தை உணர்ந்து கொண்டான் "மிச்சம் மோஸ்மான வேலே ராமலிங்கம். கவ்வாத் வெட்டத் தெரியாதா ?"

"ஏங்க தெரியாதுங்க பதினஞ்சி வருசமா கவ்வாத்து தானுங்க இங்கே வந்ததுலே இருந்து கவ்வாத்து வெட்டுகிறேன் "
"மிச்சம் பேச வேண்டா ராமலிங்கம்

என வீணே சீண்டலுகுட்படுத்தப்படுகின்ற ராமலிங்கம் பல சந்தர்ப்பங்களில் அவஸ்த்தையுறுகின்றான். இறுதியில் முக்கியமில்லாத ஒரு சிறு காரணத்தால் வேலை நிறுத்தப்பட்டு

துரத்தப்பட்ட பின் அவன் வேலை தேடி தோட்டம் தோட்டமாக சுற்றி வருகின்றான்.

*"போகும் இடத்திலே எந்தத் தோட்டத்தில் உனக்கு வேலை காத்திருக்கிறது" என்ற கேள்வி திடீரென்று அவன் மனதில் எழுந்தது. எனக்கு எப்படித் தெரியும் என்று தயக்கமான, அல்லது ஏமாற்றமான பதில் அவன் உள்ளத்தில் தொனித்தது. இடி விழுந்த மரம் போல் அவன் உள்ளத்தில் தொனித்தது. அவன் ஆத்மா தகர்ந்து புரண்டது. கடவுளே எனக்கு போக வழி தெரியவில்லை, எனக்கு ஒரு எடமில்லையே, என்று வாய்விட்டு புலம்பினான். அவன் தன்குரலைக் கேட்டுத் திரும்பினான். அவன் இரும்பு நெஞ்சம் கரைந்து விட்டது. அந்தக் கட்டத்தில் தாயைப் பிரிந்த குழந்தையைப் போல் நடுக்காட்டில் திகைத்தான். மனக் கொதிப்பை அவனால் சகிக்க முடியவில்லை. பக்கத்தில் கிடந்த கல்லின்மேல் தொப்பென்று உட்கார்ந்து முகத்தை இருகைகளாலும் மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுதான். விரல் சந்துக்கள் வழியாய் அவன் கண்ணீர் மண்ணில் கலந்தது. அவன் விம்மியழுத குரல் காட்டின் நிசப்தத்தை குலைத்தது."*

என கதாநாயகனின் நிலையை சி.வி சித்தரித்தார். வீடற்றவனைப் போலவே தொழிற் சங்கப் போராட்டத்தை சித்தரிக்கும் மற்றொரு நாவல் பெனடிக்ற் பாலனின் "சொந்தக்காரன்". இந்த நாவலில் இடதுசாரிதொழிற் சங்கத்தை தோட்டத்துக்குள் அமைத்தல் கருவாக இருந்தாலும் இதுவும் தோட்ட மக்கள் வாழ்வியலை சரியாகச் சொல்லாமலில்லை.

*"தானே தன் மனைவியுடன் தாம்பத்திய உறவு கொள்ள முனையும் நாட்களில் தனக்கேற்படும் கஷ்டத்தையும் மற்ற லயங்களில் உள்ளவர்களின் அநுபவங்களையும் அவை ஏற்படுத்தும் மன நிஷ்டூரங்களையும் அவன் அறிவான். அந்த காம்பராவில் வீரமுத்துவும் கல்யாணம் முடித்து*

*வந்தால் . . பருவமடைந்த பொட்டு, நட்சத்திரம், வயது வந்த பயலுகள் . . . ஏற்படுத்தும் அவஸ்தைகளையும் சங்கடங்களையும் அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.''*

இவ்வாறு 'லயக்காம்பிரா ' என அழைக்கப்படும் ஓற்றை அறையில் குடும்ப அங்கத்தினர் எல்லோரும் வாசம் செய்ய வேண்டிய அவல நிலையை காட்டுகிறார் நாவலாசிரியர். புதிதாக லயக்காம்புரா கிடைக்காத பட்சத்தில் சின்னக்கலப்பன் புதுக்காம்புரா கட்டுகிறான். இதை எதிர்க்கும் துரையோடு ஏற்படும் போராட்டத்தில் விளையும் நிலைமைகளை கொண்டு நாவல் நகர்த்தப்படுகின்றது. நந்தியின் 'மலைக்கொழுந்தும்' இவ்வாறே தொழிற்சங்கப் பிரச்சினையையும் தனது நாவலின் பிரதான அம்சங்களிலொன்றாக கொண்டிருக்கின்றது.

ஓருவாறு தொழிற்சங்க சுதந்திரம் கிடைத்து, இந்த மக்கள் நிமிர்ந்த போது இவர்களை நோக்கி அடுத்த கல்வீசப்படுகின்றது. அது தான் இந்த நாட்டுக்கு தம்மை தத்தம் செய்த மக்களுக்கு கிடைத்த பரிசான குடியுரிமை பறிப்பு.

குடியுரிமை பறித்த பின் இம்மக்கள் 'வாக்கை' அடிப்படையாகக் கொண்ட அரசியல் 'இயக்கங்களின் பார்வையினின்று ஓதுக்கப்பட்டார்கள். இந்த நாட்டுக்கு ஒரு சுமையானார்கள். இந்த சுமையை எங்கே எறிவது? மறுபடியும் அவலம் - இந்தியாவும் இலங்கையும் அவர்களின் மனங்களை கருத்திற் கொள்ளாமல் பண்டங்களாக கருதி பேச்சுவார்த்தை நடத்தின. ஸ்ரீமா - சாஸ்திரி ஓப்பந்தம், ஸ்ரீமா - இந்திரா காந்தி ஓப்பந்தம் இப்படி மேல் மட்டப் பேச்சுவார்த்தைகளின் விளைவுகளால், தாயகம் திரும்புதல் என்ற போர்வையில் மீள இந்தியாவுக்கு பலர் நாடு கடத்தப்பட்டனர்.

அந்த சோகக்கதையை குறுநாவலாக காட்டுகிறது. தோ.சிக்கன் ராஜீவின் 'தாயகம்'(1969).

*''நான் அவளை வருங்கால மனைவியாகவும் அவள் என்னை வருங்கால கணவனாகவும் மனதில் வரிந்துக் கொண்டு வாழ்கின்றோம். அப்படிப்பட்ட எங்களுக்கு அந்தப்பிரிவு ஏற்பட்டால் எப்படியிருக்கும். அவள் இன்னும் மூன்று மாதங்களில் இந்த நாட்டை விட்டு போய் விடுவாள். நானும் அவளைப் போல் இந்த நாட்டை விட்டு அந்த இந்திய பூமிக்கு போய் விட்டால் எங்கள் கனவு நனவாகலாம்.ஒரு வேளை நான் அப்படிப் போகாமல் இந்த நாடே . . . என்று உரிமை பெற்று வாழத் தொடங்கி விட்டால் அந்த கனவு கனவாகவே என்னுள் அமுங்கிப் போய்விடும், நினைவுகளாகவே ஆகிவிடும். அதை நினைக்கவே பெரும் திகிலாக இருக்கின்றது*

எனக் காதல் இடையிட்ட இருவர் வாழ்வில் தாயகம் திரும்புதல் ஏற்படுத்தும் உள உளைச்சலை காட்டுகின்றார் நாவலாசிரியர்.

*''சட்ட மென்ன சட்டம் ? ஒவ்வொருவருடைய உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துவது தானே சட்டம். அந்த சட்டம் எல்லோருக்கும் சாதகமானது இல்லையே. அதிலே சிலருக்கு நன்மையாகவுமிருக்கும், பாதகமாகவும் இருக்கும். சட்ட மென்ற ஒன்று இருப்பதால், நான் இந்த மண்ணில் பிறந்தேன் என்பதை மறுக்க முடியுமா? அல்லது மறைக்க முடியுமா? சட்டம் மறுத்து விடலாம். ஆனால் என் மனச்சாட்சியின் குரலை மறைக்க முடியாது- மறுக்க முடியாது. ஒரு வேளை இந்த சட்டம் என்னை நாட்டை விட்டு துரத்தி விட்டுப் போகட்டும், நான் இந்த மண்ணில் பிறந்தேன், வாழ்ந்தேன், வாழ்கிறேன். அதனால் இந்த மண்ணின் மீது எனக்குள்ள கடமையுணர்ச்சியை காட்டியே தீருவேன்.*

என இந்நாவலின் பாத்திரம் கூறும் போது, ''சொந்தமுனு எண்ணாதீங்க '' என்று வந்தவர்கள் வேரூன்றி விருட்சமாகும்

போது வெளியேற்றப்படும் நிலையில் அவர்களிடையே இருந்த உயிர்த்துடிப்பு வெளித் தெரிகின்றது. இதற்கு பின் வெளிவந்த மலையக நாவல்களில் காலங்கள் சாவதில்லை (தெளிவத்தை ஜோசப்), வரலாறு அவளைத் தோற்று விட்டது (டேவிட்), குருதிமலை(தி.ஞான சேகரன்), மூட்டத்தினுள்ளே (சதாசிவம்) இனிப்படமாட்டேன்(சி.வி.வேலுப்பிள்ளை), அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்(மாத்தளை சோமு), கண்ணான கண்மணிக்கு கதைபேச நேரமில்லை (ராஜகோபாலன்), லயத்துச்சிறைகள் (தி. ஞானசேகரன்), எல்லை தாண்டாத அகதிகள் (மாத்தளை சோமு), வழிபிறந்தது (மாத்தளை கார்த்திகேசு) என்பவை குறிப்பிடக் கூடியவைகளாகும். இவை வெளிவந்த காலப்பகுதியை தவிர்த்து வரலாற்று பதிவுகளின் காலத்தோடு சில நாவல்கள் ஒருங்காக்கம் செய்து பார்க்கத்தக்கனவாகும்.

தி.ஞானசேகரனின் குருதிமலை தூரத்துப்பச்சைக்கு இணையான நவீனமாக கொள்ளத் தக்கது. எழுபதுகளின் பிற்பகுதியில் இம்மக்களின் வாழ்வில் இடியெனப் புகுந்து இனவாத நிகழ்வுகளை, அரசாங்க ஒடுக்கு முறைகளை துணிச்சலாக வெளிப்படுத்திய முக்கிய ஆவணமாக இது அமைகின்றது. டெல்டா, சங்குவாரி தோட்டங்களில் காடையர்களின் அணிவகுப்பு மலையக மக்களின் வரலாற்றில் ஓர் இரத்தக் கீறலை ஏற்படுத்தியது என்றால், தோட்டக்காணிகளை வேறு மக்களின் குடியிருப்புக்கு கொடுப்பதற்கான அரசாங்கத்தின் தேர்தல் தந்திரத்துக்கு எதிராக இணைந்த மக்களின் மீது பாய்ந்த வேட்டில் சிவனு லெட்சுமணன் பலியானது மரண குத்து விழுந்ததற்கு சமானம்.

இந்தச் சம்பவங்களை பிரக்ஞை பூர்வமாக உள்வாங்கி வரலாற்றாசிரியர்களின் பங்களிப்புக்கு மேலாக படைப்புத் திறனாலும் பாத்திர வாய்ப்புகள் ஊடாகவும் உண்மைகளை இந்நாவலாசிரியர் முன் வைக்கின்றார். மற்றுமொரு நாவலான சி.வி.வேலுப்பிள்ளையின் 'இனிப்படமாடடேன் '(1984) இதே வகையான இனவாத நிகழ்வோடு தொடர்புறுத்தி பார்க்கப்பட வேண்டியதொரு நாவலாகும்.

''இனிப்படமாட்டேன்'' நாவலில் வரும் ஜான் தமிழ்த் தந்தைக்கும் சிங்களத் தாய்க்கும் பிறந்தவன். இலங்கையில்

வெறியாட்டம் போட்ட வன்செயலின் பின் தமிழகம் போய்விடலாமா? என யோசிக்கிறவன். அப்படியே அங்கு சென்று அங்குள்ள நிலைமைகள் தனது போக்குக்கும் சிந்தனைக்கும் ஓத்துக் கொள்ளாமல் மீண்டும் இலங்கைக்கே வந்துவிடுகின்றான். இந்த நாவல் இலங்கையா ? இந்தியாவா? என அந்தரப்பட்டிருக்கும் மக்களின் நிலைமைகளைக் காண்பித்துள்ளது.

மலையக மக்களுக்கு இலங்கையே அவர்கள் பூமி. இங்கேயே காலூன்றி பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டுமென்று தீர்வு கொள்வதாக நாவல் அமைகிறது. இலங்கை இந்திய வம்சாவளித் தமிழ்மக்களின் அவலநிலைப்பற்றிய புதினம் என்ற விளக்கத்தோடு வந்த இந்நாவலில் முன்னுரை தந்த ரகுநாதன், *இக்கதை அடக்கமும் அமைதியும் கொண்டது என்றாலும் கொதிநிலையை எட்டாத நீரும் என்றும் குமுறாத் தொடங்காத எரிமலையிலும் குடிகொண்டிருக்கும் அமைதி* யென அதை வர்ணிக்கின்றார்.

இவ்வாறு எண்பதுகளில் நடுப்பகுதியிலான மலையக மக்களின் வரலாற்றை நாவல்களுடாக தரிசித்தபின் அதற்குப் பின்னான தொழிலாளர் வாழ்க்கையின் தீக்குளிப்புகளும் திருப்பங்களும் எத்தனை எத்தனையோ நிகழ்ந்து விட்டன. பிரஜாவுரிமை நிலை, தனியார் மயமாக்கமென பிரச்சினைகள் நீளுகின்றன. அண்மையில் வெளிவந்த தி.ஞானசேகரனின் ''லயத்துச் சிறைகள்'' நாவல் மலையகத்தின் அண்மைக்கால சமூக பெயர்வுக்கான சாத்தியங்கள் குறித்து கருத்துக்களை சொல்வதாக அமைந்துள்ளது. இந்நாவலாசிரியரின் தனித்துவமான சிந்தனை இம்மலையக மக்களுக்கு விடிவை ஏற்படுத்த தங்கி நிற்கும் கலாசாரம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதாக அமைகின்றது.

இவ்வாறு நோக்கும் பொழுது இந்நாவல்கள் ஊடாக தரிசித்த பின் அதற்குப் பின்னான தொழிலாளர் வாழ்க்கையின்

தீக்குளிப்புகளும் திருப்பங்களும் எத்தனை எத்தனையோ நிகழ்ந்து விட்டன.

பிரஜாவுரிமை நிலை, தனியார்மயமாக்கமென பிரச்சினைகள் நீளுகின்றன. அண்மையில் வெளிவந்த தி.ஞானசேகரனின் ''லயத்துச் சிறைகள்'' நாவல் மலையகத்தின் அண்மைக்கால சமூக பெயர்வுக்கான சாத்தியங்கள் குறித்து கருத்துக்களை சொல்வதாக அமைந்துள்ளது. இந் நாவலாசிரியரின் தனித்துவமான சிந்தனை, இம்மலையக மக்களுக்கு விடிவு வேண்டுமானால் அவர்கள் பிறரில் தங்கி நிற்கும் கலாசாரம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதாக அமைகின்றது.

தொகுத்து நோக்கும் பொழுது இந்நாவல்கள் மலையகத்தின் சரியான வரலாறு எழுதப்படும் வரைக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணமாக போற்றப்படுதல் தவிர்க்கப்பட முடியாததாகின்றது.

(இக்கட்டுரையின் முதல் வடிவம் 1992-ல் பேராதனை பல்கலைக்கழக இளங்கதிர் சஞ்சிகையில் இடம்பெற்றது. பின் 1995-ல் மேலும் தகவல்கள் சேர்க்கப்பட்டு மத்திய மாகாண சாகித்திய விழா சிறப்பு மலரில் வெளிவந்தது.)

# மலையகக் கவிதைகள்

1824ம் ஆண்டு 14 குடும்பங்கள் கோப்பிப்பயிர்ச்செய்கை நிமித்தம் தமிழகத்தில் இருந்து புலம் பெயர்ந்து வந்தது தொடக்கம் சகல அந்தஸ்துகளும் பெற்ற நிரந்தர குடிகளாக இந்நாட்டில் தமது அடையாளத்தை நிரூபிக்க நாடோறும் அக்னி பிரவேசம் செய்யும் முனைப்பான பிரயத்தனங்கள் தொடரும் இந்நூற்றாண்டின் இறுதிவரை நீளும் மலையக மக்களின் வரலாற்று காலத்தில் இலக்கிய வரலாற்றுக் காலமென்பது ஒரு நூற்றாண்டுக்கும் குறைவானதுதான்.

மற்றுமொரு வகையில் சொல்லப்போனால் தமிழில் நவீன இலக்கிய அறிமுக காலமும் மலையக இலக்கியத்தின் தோற்றக் காலமும் ஏறக்குறைய சமகாலத்திலேயே நடைபெறுகின்றது. எழுதப்பட்ட இலக்கியமென்ற வகையில் கவிதைகள் மலையகத்தில் தோன்றும் வரை, கவிதைகளுக்குரிய ஆத்மார்த்தத்தை ஜீவனுள்ள வகையில் பேணிக்கொண்டிருந்த பெருமை மலையக நாட்டார் பாடலுக்குரியது. மலையக நாட்டார் பாடல்களை நுண்மையாக நோக்கும் போது, அவைகளை தமிழகத்தில் வழங்குபவைகளை தழுவி அமைந்தவை-மலையக வரலாற்றோடு எழுந்தவை எனப்பாகுப்படுத்தல் முடியும். இவற்றிலே மலையக வரலாற்றோடு எழுந்த நாட்டார் பாடலின் சுருதியே, மலையகக் கவிதைப் பாரம்பரியத்தில் இன்றுவரைக்குமான அடிநாதமாக அமைந்திருக்கக் காணலாம். அல்லது நாட்டார் பாடல்களின் தொடர்ச்சியே இன்றைய கவிதைகள் என்றும் கூறுவதற்கு அவற்றில் இழையோடும் பண்புகளையொட்டியும் தொனிப்பொருட்களையொட்டியும் அடித்துக் கூறலாம்.

புலம் பெயர் காரணம் - கப்பற் பயணம் - கால் நடைப் பயணம் - இழப்புகள் - ஏமாற்றங்கள் - புதுச் சூழல் அனர்த்தங்கள் என்பன நாட்டார் பாடல்களுடாக நேர்த்தியாக பதிவுற்றிருப்பதும் வரலாற்றுக்கான நுண் செய்திகளை கொண்டிருப்பதும் அதன்

சிலாகிக்கத்தக்க அம்சங்களாகவும் மானிடவியல் ஆவணமாகவும் கொள்ள வைக்கின்றன. எழுதப்பட்ட இலக்கியங்கள் தோன்றுவதற்கு நீண்ட மௌனம் நிலவியமையை பிரதியீடு செய்யக்கூடிய பெருமை வாய்மொழி பாடலகளுக்கு இருந்தாலும் இந்த எழுதப்பட்ட இலக்கியங்கள் தோன்றுவதற்கான தாமதத்தை அறிவதற்கு இம் மக்களின் கல்வி வரலாற்றை சிறிது மீட்டிப் பார்த்தாலே வஞ்சிக்கப்பட்டிருந்தமை புரிந்துவிடும்.

1842ம் ஆண்டு கண்டியையொட்டி ஆரம்பிக்கப்பட்ட Baptist mission பாடசாலை தோட்ட உடமையாளர்களின் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் இரண்டு ஆண்டுகளிலேயே மூடப்பட வேண்டியதாயிற்று. அதன்பின் 1870களில் Line Schools என்ற கங்காணிமார்களினால் அமைத்து நடத்தப்பட்ட லயத்துப் பாடசாலைகள் தரங்குறைந்த ஆரம்பக் கல்வியை ஏனோதானோ மனப்பாங்கில் வழங்கியமை 1920ல் எழுத்தறிவு வீதமானது 20 சதவீதங் கூட எட்டமுடியாத நிலையில் இவர்களை முடக்கி வைத்திருந்தது. இந்த நிலைமையில் எழுதப்பட்ட இலக்கியங்கள் இம் மக்களிடையே இம் மக்களுக்காக தோன்றுவதற்கு சாத்தியமான நிலைமையில்லாதபோதும் கவிதைகள் எழுதப்பட்டமைக் காணும்போது வியக்க வேண்டியிருக்கிறது.

மலையக இலக்கியத்தில் முதலில் தோன்றியது பாடல் வகையாகும். 1918ம் ஆண்டு ‘‘கும்மியோ கும்மி கோப்பிக் காட்டுக் கும்மி” என்ற வில்சனின் 24 பக்க பாடல் நூல் இவர்களின் வாய்மொழி இலக்கிய மரபின் தொடர்ச்சியான படைப்பிலக்கியத்தின் முன்னோடியாக திகழ்கின்றது. 1919இல் கண்டி மாவட்டத்தின் பன்விலை பகுதியில் இருந்து முத்தழகு தாஸ் என்பவரால் ‘‘பஞ்சக்கொடுமை சிந்து’’ பாடல் இயற்றப்பட்டு வெளியிடப்படுவதிலிருந்து ஐம்பதுகள்வரை இப்பாடல் செல்வாக்கு மலையக கவிதை இலக்கியத்தில் நீடித்திருந்தது.

‘‘பாடல் இயற்றுவதற்கு நிறைந்த கல்வி அறிவு தேவையில்லை. உணர்வுகளின் வெளிப்பாடே பாடல்களாக

வெளிப்படும். இவ்வாறான பாடல்களை அச்சில் கொண்டு வருவதற்கு மேலதிக முயற்சி தேவை. துணிவும் தொடர்பும் அனுபவமும் மிகுந்த சாதாரண தமிழ் அறிந்தவர்கள் இவ்விதப் பாடல்களை இயற்றி அச்சில் கொண்டு வந்தனர்" என்று கூறும் சாரல்நாடன் தனது பகுப்பாய்வொன்றில் 1920க்கு முன் 03 பாடல் நூல்களும் 1921- 30ற்கிடையில் 03 பாடல் நூல்களும். 1931-40ற்கிடையில் 81 பாடல் நூல்களும் 1941 - 50ற்குமிடையில் 23 நூல்களும் 1951 - 60 ற்குமிடையில் 03 பாடல் நூல்களும் 1971 - 70ற்குமிடையில் 06 பாடல் நூல்களும் வந்ததாக காட்டுவார். 1990 வரையான காலப்பகுதியில் வெளிவந்த 157 கவிதை நூல்களில் 122நூல்கள் பாடல் நூல்களாகும்.

இப்பாடல் நூல்கள் யாவுமே மலையக மக்கள் சார்பானதாக இல்லை. இவற்றில் சில பக்திமார்க்கம் சார்ந்தவை. சில இந்திய தலைவர்களை புகழ்வதாக அமைந்தவை. ஏனையவை மலையக மக்களின் துயரம் சொல்பவை. இவ்வாறான பாடல் நூல்கள், சில பக்கங்களைக் கொண்டதும் மலிவான விலையில் விற்கப்படுபவையாகவும் இருந்ததுண்டு. பாடலாசிரியர்கள் தோட்டம் தோட்டமாக சென்று அவற்றில் உள்ளவைகளை பாடிப் பாடி விற்பனை செய்ததாகவும் அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறான பாடல் நூல் பாரம்பரிய பெருக்கத்திற்கு சி.வி. வேலுப்பிள்ளை தனது புதுமை இலக்கியம் என்ற கட்டுரையில் கூறும் கருத்து .ஆதாரமாகக் கொள்ளப்படலாம்.

> *"1939க்கு முன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தங்கு தடையின்றி பிரயாணம் செய்வதற்கு வசதிகள் இருந்தன. அப்போது மதுரை திருநெல்வேலி தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் இருந்து ஏராளமான புலவர்கள், கவிஞர்கள், அறிவாளிகள் கதிர்காமம் - சிவனொளிபாதமலை யாத்திரை மேற்கொண்டு வந்தனர். இவ்வாறு இலங்கை வந்த இவர்கள் மலையகத்தின் பெரிய வீடுகளுக்குச் சென்று பாடி சன்மானம் பெற்றுப் போவதுண்டு. இவர்களின் வருகை இலக்கிய உணர்ச்சியை வளர்த்தது."*

இவ்வாறு தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பும் மலையக மக்கள் தாம் இந்திய மக்களே என்ற உணர்வும் கொண்டவர்களாக இந்திய தலைவர்களே தமது தலைவர்கள் என்ற மனப்பாங்கும் கொண்டவர்களாக இருந்த காலத்தில் பாரதி, நாமக்கல் இராமலிங்கப்பிள்ளை, மதுரை பாஸ்கரதாஸ், சுந்தரவாத்தியார், உடுமலை முத்துசாமி கவிராயர், சங்கரதாஸ் சுவாமிகள் முதலானோரின் பாடல்கள் மலையகத்தில் பாடப்படுபவையாக இருந்தன.

மலையகத்தில் வாழ்ந்த அருள்வாக்கி அப்துல்காதிருப் புலவர் (1866-1918)மலையக சூழலைக் கொண்டு கும்மி, நொண்டிச் சிந்து, வெண்பா வடிவங்களில் கவிதை பாடியவர். அதனால் மலையக மக்களின் மதிப்பிற்குரியவராக விளங்கினர். சமயச்சார்பு கவிதைகளை அதிகமாகப் பாடினாலும் மலையக மக்கள் குறித்து பாடியதால் இவரையே மலையகத்தின் முன்னோடிக் கவிஞராக கொள்ளல் வேண்டும் என்பர்.

சிந்துமரபில் பாடல் நூல்கள் பாடி பரப்பியவர்கள் என்ற வகையில் சிதம்பரநாதபாவலர், கோவிந்தசாமி தேவர், எஸ. சிவகாமிநாதன், நாவலப்பிட்டி பெரியாம்பிள்ளை, கா.சி.ரெங்கநாதன், பதுளை வ. ஞானப்பண்டிதன், பி.ஆர். பெரியசாமி, வேல்சாமிதாசன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு இந்த மரபின் பாடல்கள் கும்மிப் பாடல்கள் என்பன மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்தமை கண்டு, பெருந்தோட்டப் பகுதி கோப்பி -தேயிலை தோட்ட சொந்தக் காரர்கள் தமது பயிற்செய்கை வளர்ச்சி கருதி மக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்த 'கோப்பி கிருஷி கும்மி' 'தேயிலைத் தெம்மாங்கு' ஆகிய பாடல் நூல்களை எழுதுவித்து பதித்து பரப்பினமையையும் மனங்கொள்ளத்தக்கது.

இக்கால கட்டத்தில் முக்கியமானவர்களாக கருதத்தக்க இருவர் கோ. நடேசய்யர் - மீனாட்சி அம்மா தம்பதிகளாவர்.

தஞ்சாவூரிலிருந்து வேறு நோக்கத்திற்காக இலங்கை வந்த நடேசய்யர் இங்கு இந்திய மக்கள் படும் துயரம் கண்டு அவர்களுக்காக தம்மை அர்ப்பணிக்க இங்கேயே இருந்து தொழிற்சங்க - அரசியல் - பத்திரிகை பணிசெய்தார். 1930களையொட்டிய காலப்பகுதிகளில் இவரின் செயற்பாடுகள் தனித்து நோக்கத்தக்கவை.

'இந்து மக்கள்
சிந்தும் வேர்வை
ரெத்தக்காசு தானே - அடா
இரவு பகல்
உறக்கமின்றி
ஏய்த்துப் பறிக்கலாமா?

என்ற நடேசய்யரின் கவிதையை அந்தனிஜீவா தனது நூலில் (மலையகமும் இலக்கியமும்) எடுத்துக் காட்டுகிறார். நடேசய்யரின் பாரியார் மீனாட்சியம்மையார் பாடல்கள் இயற்றியதோடு அவற்றை தோட்டங்களின் கூட்டங்களில் தொழிலாளர் முன் பாடிய செயன்முறை அவரை மகத்தான மனுசியாக்கிக் காட்டுகிறது என்பார் மு. நித்தியானந்தன்.

பாரதியின் 'கரும்புத் தோட்டத்திலே ... ' கவிதையைப் பின்பற்றி இவர் 'தேயிலைத் தோட்டத்திலே ' எனப் பாடிய பாடலும் 'இலங்கையில் இந்திய தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' எனும் இவரின் சிறிய பாடல் நூலும் இலக்கியமானவை.

*தீட்டின மரத்தில் கூரு பார்க்கிறீர்களா ?*
*வெறுவாய்க்கு அவல் போல் மெல்லுரீர்*
*சேதியொன்று சொல்ல வேணுமிப்போ*
*கட்டைக்கு உயிர் கொடுத்தால் போல*

என சாதாரண மக்களின் பேச்சு மொழியை பிரயோகித்தும்

*'இந்தியர் இலங்கையைச் சுரண்டுகின்றார்-என்று*
*எக்காளம் கொட்டிடும் இலங்கையர்கள்*

*சிந்தனை செய்யாது பேசிடும் பேச்சுக்கு*
*சேதியொன்று சொல்ல வேணும் இப்போ'*

*'நூறு வருஷங்கள் முன்னாலே இலங்கையின்*
*நேர்த்திதானெப்படி யிருந்ததென்று*
*பாருங்கள் பங்களா தோட்டங்கள் தோட்டங்கள்*
*பண்பாயமைந்து விளங்குவதை '*

என கருத்துக்களை தெளிவாக முன் வைத்து அவர் பாடியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மலையக இலக்கிய வரலாற்றுக் கட்டங்களின் தொடக்கத்தில் ஆதிக்கம் செய்தும் அறுபதுகள் வரை செல்வாக்கு உடையதாகவும் விளங்கிய தனிப்பாடல்கள் குறித்து -எஸ். சாமிநாதனின் தோட்டத் தொழிலாளியின் குரல் கா.சி.ரெங்கநாதனின் கட்சி நிலையும் கப்பல் பயணமும் எஸ். ஆர். பெரியாம்பிள்ளையின் பாட்டாளியின் பயணம் அ.செ. வெள்ளைச்சாமியின் பாட்டாளியின் பாடலும் சரசுவின் கணவன் பழனியின் மரணதண்டனையும் ஆகிய பாடல் நூல்களை அடிப்படையாகக் கொண்டு - ஆராய்ந்த க. நவஜோதி தனது தோட்ட தொழிலாளர் வரலாறு கூறும் மலையகத் தனிப் பாடல்கள் என்ற கட்டுரையில் வரலாற்று ஆதாரங்கள் உண்மைக்கு மாறாய் இருக்குமிடங்களில் அவ்வெற்றிடங்களை மரபு வழிபட்ட ஆதாரங்கள் நிரப்பும் தன்மையனவாயினும் முதல் வகை ஆதாரங்களைப் போன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தத் தகவல்களைத் தருவது மலையக நாட்டுப் பாடல்களினதும் தனிப்பாடல்களினதும் சிறப்பு அம்சமாகும் எனக் குறிப்பிடுவதோடு - தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளரின் முக்கியத்துவம் தொழிலாளர் வருகை நம்பிக்கை வாக்குறுதி மலையக யாத்திரையும் காட்டை அழித்தலும் உழைப்புத்திறன் வேலை ஒழுங்கு தொழிலாளர் பிரச்சினைகள் அதிகாரிகள் கங்காணிகளின் அட்டூழியங்கள், உரிமை இழப்பு, பழிச்சொல், உலகத் தொழிலாளர்

ஒற்றுமை, தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும், சமூகப்பிரச்சினைகள், வரலாற்றுச் செய்திகள், இழப்பு, சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், புதிய நம்பிக்கைப் பயணம் என்பதாக அப்பாடல்களின் சிறப்புக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

தனிப் பாடல் மரபின் முக்கியமானவராக மறைந்த பாவலர் எம்.பி வேல்சாமிதாசனின் இந்தியாவிலிருந்து வந்த சேதி என்ற கவிதையின் சில அடிகளை பார்ப்போம்.

*இந்தியாவிலிருந்து வந்த சேதி ! கேளுங்கோ! முன்*
*இறந்துபோன பாட்டான் படகில் வந்தார் பாருங்கோ*
*இலங்கைநகர் ஈனுழையாக்காடு தானுங்கோ பாட்டன்*
*இருதயத்தை கலங்கவிடா தழித்திட்டாருங்கோ*
*காலை மணி ஐந்துக்கெல்லாம் தப்படிப்பாங்கோ - வந்து*
*கணக்குப்பிள்ளை ஆறுக்கெல்லாம் பிரட்டெடுப்பாங்கோ*
*வேலையிலே ஏழுக்கெல்லாம் இல்லாவிட்டாங்கோ - நமக்கு*
*வேலையில்லை என்று சொல்லி விரட்டிடுவாங்கோ .'*

என எட்டுவரிக்குள் வந்தமையும் வாழ்வதையும் அவலத்தையும் அம்மக்கள் மொழியிலே சொல்லிவிடுகின்றமை இவ்வகை தனிப்பாடல்களின் சிறப்புக்கு காரணமாக இருக்கின்றன எனலாம்.

தனிப் பாடல்கள் சிறப்புற்றிருந்த முப்பதுகளின் காலத்தே அடுத்து நாற்பதுகளில் கோ. நடேசய்யரை அடுத்து மலையக இலக்கிய தனித்துவத்திற்கு வித்திட்டதாக கருதப்படும் சி.வி. வேலுப்பிள்ளையின் வரவு அமைகின்றது. இவர் ஒரு சிறந்த கவிஞர். ஆனால் அவர் ஆங்கிலத்திலேயே கவிதைகள் வடித்தமை மலையக மக்களை எந்தளவுக்கு அக்காலத்தே அடைந்தது என்பது கேள்விக்குறி என்றாலும் மலையக மக்களின் நிலையையும் அவர்களின் துயரத்தையும் உலகத்தின் கவனத்திற்கு கொண்டு

வர வேண்டுமென்ற ஆதங்க உணர்வு இழையோடுவதாக 'இன் சிலோன்ஸ் டி கார்டன்' நூலில் வடித்த கவிதைகள் சக்தி பால-ஐயாவின் மொழிப்பெயர்ப்பின் ஊடாக தமிழில் கிடைக்கும் போது அதன் சிறப்பை உணர்ந்து கொள்ளக் கூடியதாக அமைகின்றது.

*'ஆழப்புதைந்த தேயிலைச் செடியின்*
*அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்*
*ஏழை மகனும் ஏறி மிதித்து*
*இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவன்'*

என்பது இன்னும் பலரால் மேற்கோள் காட்டப்படும் கவிதை வரிகள். இதை விட

*'என்ன விழாப்பல வந்து போயினும்*
*இவர்க்கே அரச பிரபுவாய் விளங்கும்*
*சின்ன துரைகளும் பெரிய துரைகளும்*
*செய்யதிகாரச் செல்வதொப்புமோ*
*தாமே எஜமான் தாமே பிரபு*
*தாமே அரசர் தாமே ராஜ்யம்*
*ஆமாம் இதனை மறுப்பாரில்லை*
*அவரது உரிமைகள் கணிப்பாரில்லை!*
*ஏனெனில் அவர்கள் இயம்பினால் அதுவே*
*ஆங்காங்கே கூட்டம் இயற்றுவதாகும்*
*ஏனெனில் அவரதே உலகம் ஆனதால்*
*இங்கவர் சொல்வதே நீதி என்றாகும்.*

என்பதும்,

*தகரக் கூரைகள் தாங்கிய லயங்களில்*
*தழைத்த உழைப்பினர் விளைபயன் எனினும்*

*பகரக் கூடா அவர் குடியிருப்பைப்*
*பகரவும் வெட்கம் பகர்ந்திடுவோமேல் -*
*ஈராறடியும் ஈரைந்தடியும்*
*இங்கவர் வாழும் இல்லமேயாகும்*
*யாரே மனிதரை மிருகமாய் எண்ணி*
*யாவையும் ஒடுக்கப் பிறந்தார் பகர்வீர்*
*பெற்றவருடனே மருமான் மருமாள்*
*புத்திரன் புத்திரி பூட்டனும் பேரனும்*
*உற்ற அவ்வறையிலே அடுப்பும் மூட்டுவர்*
*உணவுஞ் சமைத்து உண்டு உறங்குவர்*
*கண்ணைக் கயக்கும் புகைப்படலத்து -முறைக்*
*காதலும் புரிவர் குழவிகள் பெறுவர்*
*எண்ணளவற்ற இத்தனை பாடும்*
*இவர் படுவதும் ஏனெனில் - அவர்தம்*
*எஜமான் கொண்ட எதேச்சாவாத*
*எழுச்சி யானக் கட்டளைக்காகவே*
*எஜமான் என்றதோர் வகுப்புப் பிரிவின்*
*இறுமாப்புணர்வோடுக் கட்டளைக்காகவே.*

என்பதும்,

சி. வி. வேலுப்பிள்ளையவர்கள் படிப்போர் மனதில் இவர் குறித்து எழும் அவலம் அவர்களில் இவர்களுக்காய் போர்க் குரல் கொடுக்கவைக்கும் வகையில் அமைந்திடும் உத்தியை அவரின் கவிதைகளில் மாத்திரமன்றி நாவல்கள், நடை சித்திரங்கள் என்பவற்றிலும் காணலாம்.

இவ்வாறு மலையக மக்களின் வாய்மொழிப்பாடல்கள் அதன் வழிவந்த தனிப்பாடல்கள் என்பவற்றின் ஊற்று மூலங்களை சரியாக உள்வாங்கி ஆழ்ந்த மானுட நேய வெளிப்பாடாக கவிதைகளை அமைத்த சி. வி. வேலுப்பிள்ளையின் படைப்பாக்க முறையின் செல்வாக்கு அறுபதுகளில் எழுச்சியுற்ற மலையக படைப்பாளிகளுக்கு அடிப்படையாக இருந்தது என்றாலும்

ஐம்பதுகளில் மலையகப் பகுதியில் செல்வாக்கு செலுத்திய திராவிட இயக்கத்தின் தாக்கமும் அக்காலப் பகுதியின் கவிஞர்களில் காணப்பட்டிருந்ததை 1965 இல் வெளிவந்த மலையக கவிஞர்களின் கவிதைகளைக் கொண்ட 'குறிஞ்சிப்பூ' நூலிலுள்ள கவிதைகளை நோக்கும் போது காணக்கூடியதாக இருக்கின்றது. அறுபதுகளில் முகிழ்ந்த மலையகக் கவிஞர்களில் ஓரிருவரைத் தவிர கல்வி கற்ற தலைமுறையினர் என்ற வகையிலும் அவர்களால் மலையகம் என்ற எண்ணக்கரு அர்த்தபுஷ்டியாக முன்னெடுக்கப்படுவதையும் காணலாம்.

*விழிதிறந்து உணவென்று உறக்கமென்றோம்*
*வேறென்ன உலகமதில் தமிழா கண்டோம்*

எனும் வெண்சங்குவேலும்,

*கடந்ததை எண்ணி வருந்தும் தமிழா*
*நடந்ததை எண்ணி திருந்தி விடு*
*கண்ணின் மணியும் இமை போன்று*
*கலாச் சாரமும் ஒன்றொன்றாய்*

எனும் பி.எஸ். ராகவனும்,

*மங்குகின்ற தமிழ்த் தாயின் மானங்காத்து*
*மனம் திறந்து சுதந்திரமாய் தமிழர் வாழச்*
*சிங்களஞ்சேர் தென்னாட்டார் தீரர் என்னும்*
*செழுங்கவிஞன் வாக்கினையும் காப்பதற்கு நீங்கள்*

எனும் தமிழோவியனும்,

பாரதிதாசன் வழியிலும் திராவிட இயக்க செல்வாக்காலும் மலையகத்தை படம் பிடிக்க முனைந்தவர்கள் எனும் வகைப்பாட்டில் அடக்ககூடியவர்கள். இவர்கள் அணியில் ஈழக்குமார், மலைத்தம்பி, தமிழ்ப்பித்தன், உடுதெனிய ஒளிவண்டு, குமரன் முதலானோரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

*கறுப்புக் கம்பளிக்குள்ளே - தோட்டத்துக்*
*காரிகையர் கூடி*

*பொறுப்புடனே புகுந்து - தினமும்*
*போதல றபோவர்*
*நாடு உயிர் வாழ - தோட்டத்து*
*நாரியர் செய்யும் நன்மை*
*ஈடு இணையற்று - சரித்திர*
*ஏட்டில் இடம் பெற்றது.*

எனும் ஜயந்தனும்,

*தேயிலைத் தோட்டத் தமிழ் பெண்ணாள்*
*மக்கள் வதியும் மாண்பு அற்று*
*மாடுகள் வாழும் வகையுமின்றி*
*கேடுகள் நிறைந்த கீழ்மை மிகுந்த*
*மலைநாடு - இன்று*
*இன்னல் தீர்ந்த கலை நாடாய்*
*கன்னல் உகுக்கும் களி நாடாய்*
*காணுமிந்த மலைநாடு.*

என்னும் நூரளை இரா.மலைச்செல்வனும்,

*பதவி எனும் பூச்சாண்டி காட்டிக் காட்டி*
*உதவி சில பெறுவார் தன் உடல் வளர்க்க*
*இந்நிலை அதிகரித்துப் போனதாலே*
*மந்தநிலை போகவில்லை - எம்*
*மலை நாட்டாருக்கு*

என்னும் கண்டி எம். ராமச்சந்திரனும்,

மலையகக் கவிதைப் பாரம்பரியத்தில் சி.வி.யின் வழியில் செல்பவர்களாக காணக்கிடைக்கின்றது. இவ்வகையில் சாரல்நாடன், குறிஞ்சிதென்னவன், ராம சுப்பிரமணியம், பண்ணாமத்து கவிராயர், குறிஞ்சிநாடன், பானா தங்கம், மூக்கன், லிங்கதாசன் முதலானோரைக் கொள்ளலாம்.

*என்னருமை மலைநாட்டின் திசைகள் எல்லாம்*
*எழிற்கன்னி அரவணைப்பில் சிரிப்புதிர்க்கும்*

*தன்னிலையை ஓராதமுறையால் இங்கு*
*தவிக்கின்றார் என் மக்கள்! ஐயோ இந்த*
*துன்பம் நிறை மக்கள் மட்டும் துயிலுணர்ந்தால்*
*தூரத்தில் ஓடாதோ இன்னல் யாவும்?*
*என்னருமை தோழர்காள்! எழில் முகத்தீர்*
*எடுத்திடுவோம் சபதமிந்தத் துயிலைப் போக்க*

எனும் மரியதாசன் அறுபதுகளின் கவிஞரிடையே புதுப்பாரம்பரியம் ஒன்றை உருவாக்க முனைந்த கவிஞர்களில் ஒருவராக கொள்ளப்படலாம். இவ்வகையினோரில் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டம் ஆழமாகப் பொதிந்திருக்கக் காணலாம் அவ்வகையினோர் எழுபதுகளில் செல்வாக்குப் பெற்ற கவிஞர்களாக இருப்பதையும் காணலாம். தமிழுணர்வு கவிஞர்களும் தங்கள் பிடியினை விட்டு விட்டு எழுபதுகளில் மலையகக் கவிதைகள் என்று அடையாளம் பெறும் கவிதை அணிக்குள் யாவரும் வந்து சேரலாயினர். அதன் போது மலையக மக்களின் பெருவாரியான பிரச்சினைகளும் கவிஞர்களினால் காட்டப்படுவதோடு எழுபதுகளில் தோட்டங்கள் தேசியமயமாதல், தாயகம் திரும்புதல், இனவாத கொடுமைகளுக்கு பலியாதல், குடியேற்றங்கள் என்ற முனைப்பான அம்சங்கள் வாழ்வில் ஏற்படுத்திய சலனங்களை பிரதிபலிக்கத்தக்கதாக கவிதைகளைப் படைத்தனர் .

அவ்வகையோரில் அறுபதுகளில் முகிழ்ந்து எழுபதுகளில் பிரகாசித்த குறிஞ்சித் தென்னவனை முக்கியமாக கொள்ளலாம்.

*தலைவரெனச் சொல்லி பெருந் தலை களிங்கு வந்தார்*
*தனக்குவியல் சேர்ப்பதில் நாட்டமெல்லாம் கொண்டார்*
*பலகாரம் சேர்த்து பெரும் பதவிகளும் கண்டார்*
*பாட்டாளிக் கூட்டமெல்லாம் என்ன சுகம் கண்டார்*

என தோட்ட தொழிலாளியான குறிஞ்சி தென்னவன் தனது தம்மவரைப் பார்த்துக்கேட்பதாகவும்

*அன்று இந்த ஈழநாட்டில்*
*அனுமன் வைத்த தீ பரந்ததுவே*

*இன்று மலையக மக்களின் வீடுகள்*
*எரித்து மகிழ்ந்தவர் உந்தனாயவர்*
*கன்றும் தாயும் கதறியழுதிட*
*காண்பவர் நெஞ்சம் பதறித் துடித்திட*
*கொன்று தீர்த்து களிவெறி கொண்டனர்*
*கோடியுண்மை ! நின்பெயர் சொல்லும் கூட்டமே*

என்று புத்தனுக்கு ஓர் விண்ணப்பத்தில் பொங்குவதும் அவரின் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தைக் காட்டும் அற்புதமானக் கவிதைகள். அவ்வழியில் பானா.தங்கம், புசல்லாவை இஸ்மாலிகா, லிங்கதாசன், குறிஞ்சிநாடன் என்போர் ஒரு புறமாகவும்

*நான் பிறந்த நாட்டினிலே*
*நான் இருக்க வழியில்லை*
*என் ஜென்ம பூமியிலே*
*எனக்கு உரிமையில்லை*

என ஒப்பபந்தம் காரணமாக தமிழகத்திற்கு புலம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்தில் குமுறிய அரு. சிவானந்தன் (வண்ணச்சிறகு), மொழிவரதன் போன்றோர் ஒரு புறமாகவும் மலையக கவிதைத் துறைக்கு உரம் சேர்ப்பதாக எழுபதுகளில் மலையகக் கவிதைத்துறை அமைந்திருந்தது.

எண்பதுகளின் தொடக்கம் எழுபதுகளின் தொடர்ச்சியாகவும் 'நதி' 'தீர்த்தக்கரை' முதலான சஞ்சிகைகள் ஊடாக கவிதைகளில் புதிய முனைப்பும் வேகமும் தோன்றியன. ஆனால் 1983 இல் ஏற்பட்ட ஜூலை கலவரம் மலையகக் கவிஞர்களில் ஏற்படுத்திய ஸ்தம்பிதம் காரணமாக தேக்கம் ஏற்பட்டது. இத் தேக்கம் காரணமான தொய்வு நீங்க சிலகாலமெடுத்தது. 1986 இல் சு. முரளிதரனின் 'தியாகயந்திரங்கள்' புதுக்கவிதை நூல் வரவும், மலையகத்தில் கவிதைத்துறை நோக்கிய இளைஞர்களின் கவனம் புதிய கவிஞர்களை வரவாகத் தந்தது. 1988 இல் சு. முரளிதரனின் 'கூடைக்குள்தேசம்' ஹைக்கூ கவிதைகள் தொகுப்பு

வெளிவருகின்றது.

*சங்கங்களுக்காக செத்தது போதும் - இனி*
*எங்களுக்காய் சாவோமென எழுதப்பட்ட*
*முதல் அத்தியாயம் சிவனு லெட்சுமணன்!*
*நாம் வதியும்*
*ஏழாயிரம் ஏக்கரா*
*பாதையாக வேண்டும்? என பதறினான்*

*மலையக மக்களின் மனவெளிகள் தோறும்*
*நிறைந்தது - அந்த*
*டெவன் நீர் வீழ்ச்சியில்*
*வீரச்சாவின் வெடியோசை*
*இன்றும் எதிரொலிக்க*
*இறந்து போன லெட்சுமணன்*
*எழுபத்தேழில் விடிவெள்ளி*

இது முரளிதரனின் கவிதைகளில் ஒன்று. இவ்வாறு புதுக்கவிதை வழியில் எண்பதுகளின் இறுதியில் உருவானவர்களில் இரா. நித்தியானந்தன், செல்வராஜ், அன்புச்செல்வன், ராம்ஜி உலகநாதன், வெலிமடை றபீக் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எண்பதுகளின் இறுதியிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் சிவ. ராஜேந்திரன், தம்பையா போன்றவர்களால் மலையகக் கவிதைகளுக்கு புதிய உயிரோட்டம் ஏற்படுகின்றது.

இப்போ,

*எமது தோட்டமும் கொலனியானதால்*
*இந்த வேலிகள் - சிங்கள*
*கொலனி வேலிகள்*
*எங்கள் குடிகளில் சிலதை மேய்ந்தனவே*
*மிஞ்சிய எம்மை மேய்வதற்கே*
*முள்ளால் வேலியாய் அமைந்தனவே*

*ஐயோ!*
*எம்மை காத்திடுவோம் - முள்*
*வேலியிலிருந்து காத்திடுவோம்*
*வேலியின் முள்ளை அகற்றிவிட்டு*
*வேங்கை மேயா நிலையினிலே*
*வேலியே யில்லா தொழித்திடுவோம்*

எனும் இ. தம்பையாவின் கவிதையும்,

*மலையகத்தில் பெரும் மாற்றத்தைக் கண்டிட*
*மலைகளாய் உயருது மக்கள் படை - எம்*
*அடிமை வாழ்வை அறுத்துத் தொலைத்திட*
*ஆறாய் பெருகுது தொழிலாளர் படை*
*உரிமைகள் இன்றியே உழைத்திட்ட மக்களின்*
*உண்மைத் தோழனாய் இணையும் படை*

எனும் சிவ. ராஜேந்திரனின் கவிதையும்,

மலையக மக்களை ஓரணியில் திரட்ட புதியபாதை வழிநடைபோட அழைக்கின்ற கவிதைகளாக விளங்குகின்றன. தொண்ணூறுகளின் நடுப்பகுதியில்

*நீ யேறிய ஏழாம் நம்பர்*
*மலைகளோ - உன்*
*ஏக்கத்தைச் சொல்லும்*
*உன் அவஸ்தையைச் சொல்லும்*
*ஆறாம் நம்பர் மலைகளோ*
*அம்மா............*
*உன் அழகிய கரம்*
*தேயிலைக் கறையால்*
*சேதமாக்கப்பட்டது.*

என தொழிலாளர் அவலம் - வீரம் யாவற்றையும் கவிதைக்குரிய முறையோடும் நேர்த்தியோடும் நெஞ்சைத் தொடும் ஆற்றல் கொண்ட கவிதைகளால் இராகலை பன்னீர் செல்வத்தின் வரவு

மலையக கவிதை உலகுக்கு புதிய வெளிச்சத்தைத் தருகின்றது. அவரின் அருமை அம்மா, அஞ்சலைக்கு அஞ்சலி, ஆற்றிலே போனதோர் அனாதைக் குழந்தை முதலான கவிதைகள் உயிர்ப்பானவை. அதேபோல நந்தலாலா சஞ்சிகையூடாக அறிமுகமாகும் பிஷ்மா அத்தகு வரவுகளில் ஒன்று. இவ்விரு கவிதா ஆளுமைகளோடு, கோ. ஸ்ரீதரன், ஜவ்பர், மாரி மகேந்திரன் போன்ற இளைய வரவுகளும் கவனத்திற்குரியன. இவ்விடத்தில் சிறுகதையாளர்களாக பரவலாக அறியப்பட்டிருந்த இருவர் எண்பதுகளில் தனித்துவமான கவிதைகளால் மலையக கவிதைக்கு காத்திரம் சேர்க்கின்றனர். அல் அஸோமத், மல்லிகை சி. குமார் ஆகிய இருவரே அவர்கள்.

அல் அஸோமத்தின் கவிதைகள் வீறுமிக்கதாகவும் பூரணமானதும் ஆழ்ந்த கருத்துச் செறிகொண்டதுமாக அமையும். மல்லிகை சி. குமாரின் கவிதைகள் புதுக்கவிதையாக அமைந்து சமகால மலையக அரசியல் - வாழ்வியல் நிலைகளை நாசூக்காக படம் பிடித்து மனதில் நெருடலை ஏற்படுத்தும் வகையினதாக அமைந்திருக்கும் .

இவ்வாறு இதுவரை மலையக கவிதை தோற்றம் குறித்தும் அதன் வளர்ச்சி குறித்தும் கவிஞர்கள் கவிதைகள் என்பவைகளை உதாரணமாகக் கொண்டும் ஓர் எழுபதாண்டு கால கவிதை வரலாற்றைப் பதிவு செய்யும் முயற்சியை அடுத்து மலையக கவிதைகள் தொடர்பில் வைக்கக் கூடிய சில முடிவுகளைக் காண்போம்.

1. இருநூற்றாண்டுகளும் எட்டாத இம்மக்கள் வரலாற்றில் பேர் சொல்லி பிரலாபிக்க எந்தவொரு முன்னோடி பண்டித புலவர்களும் இல்லாத நிலையில் வாய்மொழிப் பாடல்களையே முதன்மையாகக் கொண்டு முகிழ்ந்ததாக இருக்கின்றது.

2. கவிதையின் தொடக்கம் சிந்துவகை தனிப்பாடல்களாக இருந்தது. கவிதைகள் வித்துவச் செருக்கைவெளிப்படுத்தி

தமிழ் வளர்க்கும் பணியாக்கப்படாமல் உண்மையிலே மக்களை அடைந்து பயன்பாடு விளைப்பதற்காக உருவான கவிதைப் பாரம்பரியம் காணப்படுகின்றது.

3. மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகளின் முகம் வேறுபாடானது. அது மலையக மக்கள் படித்து பயன்பெற வேண்டியதன்று . இம்மக்கள் குறித்து பிறரறிய வேண்டியமை குறித்து அதன் பிறப்பும் தனித்துவமும் பிற கவிஞர்களில் செல்வாக்கை ஏற்படுத்துவதாகின்றது.

4 அறுபதுகளில் மலையக கவிதை உலகில் ஒரு வேகமாக வளர்ச்சி ஏற்பட மலையகத்தில் தொழிலாளர் குடியிருப்புக்களிலிருந்து கல்வி கற்று ஒரு தலைமுறையினர் தோன்றுவதும் அவர்களில் மலையகம் குறித்த தெளிவான எண்ணங்கள் ஏற்படுவதும் காரணமெனக் கொள்ளலாம்.

5. எழுபதுகளில் கவிதையுலகில் அறுபதுகளை ஒத்த வளர்ச்சி வேகம் இல்லாமல் இருந்தமைக்கு தாயகம் திரும்புதல், தோட்டங்கள் அரசமயமாதல், பஞ்சம் ஏற்படுதல், ஏப்ரல் கிளர்ச்சி போன்றவற்றால் மக்களில் ஏற்ப்பட்டிருந்த நிலைமை பாட்டாளிகளில் ஏற்ப்பட்டிருந்ததாகக் கொள்ளலாம். என்றாலும் இக்காலப்பகுதியில் இடதுசாரிகளின் செல்வாக்கு மலையக கவிதைகளில் செல்வாக்கு செலுத்தியிருந்ததைக் குறிப்பிட வேண்டும். ஆர்வம் கொண்ட நவீன சிந்தனைகள் கொண்ட ஒரு சில கவிஞர்கள் இப்பகுதியில் தோன்றுகின்றார்கள் என்றாலும் 77 இன் நிகழ்வு எண்பதுகள் வரை சிறு மந்தத்தை ஏற்படுத்துகின்றது.

6. எண்பதுகள் மலையக மக்கள் அரசியல் அடிப்படையில் வரையறுத்துக் கொண்டு இலங்கை மண்ணை தம் தாயகமாக

ஏற்றுக்கொண்ட தமக்கு வேண்டிய அந்தஸ்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தும் காலமாகும். அத்தொனி கவிதைகளில் தீவிரமாக இடம்பெறுகின்றது.

7. தொண்ணூறுகள் தனியான அனுபவங்களை மலையக மக்கள் பெற்றுக் கொண்டு செயற்படும் காலமாக இருந்தாலும் அதற்கு அனுசரணையாக இலக்கிய முயற்சிகள் கணிசமாக அமைய வேண்டிய தேவையை வலியுறுத்தும் பகுதியாக அமைகின்றது. இந்நூற்றாண்டின் முடிவில் இப்பகுதியை பூரணமாக எடை போட முடியும்.

எது எவ்வாறாயினும் மலையக புனைக்கதைத்துறையினர் சாதித்த அளவோடு கவிதையை ஒப்பு நோக்கும் போது ஒரு இடைவெளி இருக்கத்தான் செய்கின்றது. கவிதைத் துறை மலையகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டியமையை அது வலியுறுத்துகின்றது.

புதுவசந்தம் -(1999)

# மலையகமும் நாடகத்துறையும்

முத்தமிழில் ஒன்றாக போற்றப்படும் தமிழ் நாடகம், விரவிய திரைப்பட வளர்ச்சி நிலையிலும் இன்று உன்னத நிலை நோக்கி நடைபோட்ட வண்ணம் இருப்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டியதாகின்றது. நாடகம் என்பது அற்புதமான கலை வடிவம். அதனூடாக கவிதை, கதை மற்றும் சினிமா முதலான ஊடகங்களுடாக புலப்படுத்த முடியாத சிந்தனைகளை முன்னெடுத்து செல்ல முடியும் என்பதே இன்று வரை நாடகத்துறை எட்டியிருக்கும் வளர்ச்சி துறைக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றதெனலாம்.

பிரதி நிலையில் நாடகங்கள் மக்களை அடைவதை விட அரங்க நிலையில் அடைவதென்பது ஒரு மகத்தான முயற்சி என்பதை யாரும் மறுக்கார். ஏனெனில் நாடக மேடையேற்றமென்பது கூட்டு முயற்சியின் அறுவடை என்பதை விட மனித கலாசாரத்தின் ஓர் அடையாளம் எனக்குறிப்பிடுவது பொருத்தமானது. இன்றும் வளர்ச்சியுறும் தமிழ் நாடகம் தொடர்பில் அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து பல நூல்களும் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. தமிழகம், இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசம், புலம் பெயர் நாடுகள் என்பன தமிழ் நாடகத் துறைக்காற்றும் பங்களிப்புக்கள் சிலாகிக்கப்பட்டு வரும் போது மலையக நாடகம் குறித்து அதிகமாக எழுதப்படாமலும் பிரஸ்தாபிக்கப்படாமலும் இருப்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

பேராசிரியர்கள் இருவர் மலையக நாடகம் குறித்து கூறிய கருத்துக்கள் இந்த இடத்தில் நோக்கப்பட வேண்டியதாகும். 1971ல் வெளிவந்த அஞ்சலியில் மலையகத்தில் நாடகம் குறித்து எழுதப்பட்ட கட்டுரையில் இராஜ் மலைச் செல்வன் பேராசிரியர் சு.வித்தியானந்தன் மலையக *நாடகங்கள் தரமற்றவை* என்று அறுபத்திமூன்று அறுபத்திநான்கு காலப்பகுதியில் கூறி ஏற்பட்ட சர்ச்சையை நினைவு கூறுகின்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி ஈழத்து பாரம்பரிய அரங்கினை பிரதேச ரீதியாக பாகுப்படுத்தும் அளவில் மலையகம், மட்டக்களப்பு, வன்னி, மன்னார், திருக்கோணமலை, யாழ்ப்பாண பிரதேசங்களின் தனித்துவத்தை முன்னிறுத்தி இருக்கின்றனர். ஆனால் அரங்க முறையை கவனத்திற் கொள்ளும் போது மலையகத்தை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் காணப்படும்அரங்க முறைகளில் ஓர் அடிப்படை ஒருமைப்பாடு நிலவுவதை சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை தமிழ் நாடகதுறையில் நவீன நாடகத்தின் செல்வாக்கை ஏற்படுத்த சங்கரதாஸ் சுவாமிகள், பம்பல் சம்பந்த முதலியார் போன்றோர்களின் நாடகங்கள் இலங்கையில் மேடையேற்றப்பட்டமை காரணமாக அமைகின்றது. தமிழகத்தில் இருந்த நாடக சபாக்களைப் போல யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கொழும்பு பகுதிகளில் நாடக சபாக்கள் அமைக்கப்பட்டு, தமிழகத்து புராண நாடகப் பிரதிகளும் பின் இலங்கையிலே உருவான பிரதிகளும் மேடையேற்றமுற்று வரவேற்பை பெற்றிருந்தன.

பின்னர் தமிழக நாடகத்துறையினர் தேசிய உணர்வு குறித்த நாடகங்களை மேடையேற்றிய போது, அதற்கொப்பாக யாழ்ப்பாண நாடகங்களும் சமுதாய நடப்பை அடிப்படையாக கொண்டவைகளாக மாற்றமுறத் தொடங்கின. அதன் பின் பல்கலைகழக போராசிரியர்களின் அரங்கத்துறை நுழைவோடு யாழ்ப்பாண நாடக வளர்ச்சி விரைவாக வளர்ச்சியுறலாயிற்றெனலாம். அதன் விளைவாக தாசியஸ், குழந்தை சண்முகலிங்கம், சி.மௌனகுரு, பாலேந்திரா, சுந்தரலிங்கம், சிதம்பரநாதன் முதலான பல நாடகத்துறை ஆளுமைகளை இலங்கை நாடக வரலாற்றில் உருவாக்கியுள்ளது. அவ்வகையில் மலையகம் நாடகத்துறை ஆளுமைகளை உருவாக்கியிருக்கின்றதா என்பதை பரிசீலிக்க வேண்டியுள்ளது.

### நாடகக் கலைக்கு முந்தைய நிலை

இன்றைய மலையக மக்களின் முன்னோடிகள் உழைப்பதற்காகவே வந்து வாழ்வை நிலைநிறுத்தியவர்கள். இயந்திரமாகவும் அடிமைகளாகவும் கருதப்பட்டு ஒதுக்கப்பட்ட காலத்தே அவர்களிடம் இயல்பானதும் சிருஷ்டிகரமானதுமான கலைப்படைப்புகள் எழுவதற்கு அச்சமும் நேரமின்மையும் வெகுவாக பங்களித்திருக்கும். என்றாலும் ஆன்மீக பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு அவர்களுடைய அழகியல் தேவைகள் யாவுமே தெய்வம் சார்ந்த கலைகளாக மிளிர்ந்தன. அதன் பிரதிபலிப்பே தோட்டங்கள் தோறும் எழுந்த கோவில்களும் திருவிழாக் கொண்டாட்ட மரபுகளுமாகும். இது அப்படியே தமிழக வாழ்வின் அம்சங்களை பின்னொற்றி எழுந்ததாகும். அத்தோடு காமன் கூத்து, அருச்சுணன் தபசு போன்றவைகளும் அவர்களின் ஆன்மீக தேவைக் கருதி அவர்களாகவே முன்னெடுத்த கூத்துகளாகும். ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபதுகள் வரை இத்தகு அம்சமே பெருவழக்காக இருந்ததும் அதன் பின் அவர்களின் வேலை கொள் முறையில் ஏற்பட்ட இறுக்கத்தளர்வு கலைத்துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இச்சந்தர்ப்பத்தில் தமிழக நாடக குழுக்கள் மலையகத்துக்குள் வரவாய்ப்புப் பெற்றமை அதற்கு அனுசரணையானது.

### நாடக சபாக்களின் செல்வாக்குக் காலம்

''நாடகங்கள் மாத்தளை தகரக் கொட்டகையில் நடப்பதாக நீலநிற நோட்டீசுக்கள் பாண்டு வாத்தியத்துடன் கூடிய காரிலிருந்து வீசப்படும் கலியுக கானம் போல நடிகர்களின் நாடகங்கள் - வள்ளி பரிணயம்,ருக்மணி சர்வபங்கம் போன்ற தலைப்பு கொண்டவை. அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடக்கும் அக்கூட்டத்தில் குழப்பம் செய்பவர்களை பொலிசார் வசம் ஒப்புவிக்கப்படும் என்ற வாசகங்கள் கொட்டை எழுத்துக்களில் அந்நோட்டீசுகளில் காட்சியளிக்கும்'' என முப்பதுகளில் தனது ஞாபகத்தை மீட்டுக் கொள்ளும் மலையக எழுத்துலக முன்னோடி

கே. கணேஷ் சௌமியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகு நாடகங்களை மலையகத்துக்கு தருவித்தவர்கள் தொழிலாளர்கள் அல்லர். மலையக நகர்புறங்களை சார்ந்த இந்திய வம்சாவளியினரின் நடுத்தர வர்க்க பிரதிநிதிகள். இவர்கள் இவற்றை தருவித்தமைக்கு உள்ளார்ந்த கலையார்வம் காரணம் அல்ல. தோட்ட மக்கள் கூத்துக்களை தமது கலைத்தேவைக்காக முன்னெடுக்கும் போது அவற்றை தம்மோடு இணைத்துக் கொள்ளாது, தம்மை வேறுப்படுத்தி உயர்த்திக் காட்டிக் கொள்ளவும் தமக்கும் கலாரசனை உண்டென நிரூபித்துக் கொள்ளவும் இலங்கை வரும் தமிழக நாடகக் குழுக்களை அழைத்தும் தாமாகவே அவர்களை அங்கிருந்து வருவிக்கவும் பழகியிருந்தனர்.

இவ்வாறு கொண்டு வரப்பட்டவைகளில் புராண நாடகங்களே பெருவாரியானவை. இவற்றில் பரிச்சயம் கொண்ட கீழ்தட்டு நடுத்தர மக்களின் ( Lower middle class) கலையார்வாளர்கள் தாமும் அப்பிரதிகளை மலையக நகரங்களில் மேடையேற்றி இருந்தனர் இவற்றை பார்வையிட்ட தோட்ட இளைஞர்கள் தத்தமது தோட்டங்களில் இவற்றை மேடையேற்றம் செய்யத் தொடங்கினர்.

சத்தியவான்-சாவித்திரி, பவளக் கொடி, வள்ளித் திருமணம், நல்லத் தங்காள், ஞானசௌந்தரி, அரிச்சந்திர விலாசம், நந்தன் சரித்திரம் முதலான நாடகங்கள் தோட்டங்களில் பிரசித்தமாயின. இத்தகு நாடகங்கள் பிரசித்தமாவதற்கு அவை கொண்டிருந்த புராண - இதிகாச கதைகள் மாத்திரமல்லாது அவற்றில் தோன்றும் பபூன் பாத்திரமும் காரணமானது எனலாம்.

நாடக காட்சி மாற்றங்களின் போது தோன்றும் பபூன் கட்டியங்காரனை ஒத்ததாக இருந்தாலும் அதிலிருந்து வேறுபட்டவன். காட்சி மாற்ற நேரத்தில் மேடையில் தோன்றி நகைச்சுவை அம்சங்களை ஆடல், பாடல், உரையாடல்களோடு பகிர்ந்து கொள்வான் . இதன் போது மலையக மக்களின் பேச்சு, வழக்கு நாட்டார் பாடல்கள், நாட்டார் பாடல்களை தழுவிய

பாடல்கள், தோட்ட தொழிற்சார் வாழ்க்கை நடப்புகள் என்பவற்றை நகைச்சுவைக்காக பயன்படுத்திக் கொள்வான்.

இது மக்களை ஈர்த்தமைக்கு காரணம் நகைச்சுவை மாத்திரமாக இல்லாமல் அவர்களைக் குறித்து அவன் மேடையில் வைக்கும் கருத்துகளும் காரணமாக இருந்திருக்கலாம் . இந்த பபூனை நாம் மலையக தோட்ட மக்களுக்காக குரல் கொடுத்த பாத்திரமாக கொள்ளலாம். இந்த பபூன் பாத்திர செல்வாக்கு காரணமாக, தோட்ட மக்களிடையே புராண நாடகம் இயற்றி மேடையேற்றும் தேவை இல்லாமற் போயிருக்கலாமெனலாம். ஏனெனில் யாழ்ப்பாண மட்டக்களப்பு பகுதிகளில் தமிழக நாடகங்கள் மேடையேற்றங்களை செய்ததும் பின் அப்பிரதிகள் அங்குள்ளவர்களால் நடிக்கப் பெற்றதும் பின் அவர்களாகவே புராணக்கதைகளை பிரதிகளாக்கி மேடையேற்றியதும் பின் புராண கதைகளுக்கு அப்பால் சமூக கதைகளை நாடகமாக்கும் போக்கும் ஏற்ப்பட்டமைக்கு ஒப்பாக அக்கால மலையக நாடகத் துறையில் முனைப்பாக பெருமுயற்சிகள் எடுக்கப்படவில்லை எனலாம்.

எனவே மாற்றமுறா வண்ணமாக இந்த இசை நாடகங்கள் மலையகமெங்கும் ஆங்காங்கே எழுபதுகள் வரை மேடையேறிய வண்ணமும் அதற்கென ஒரு ரசிகர் கூட்டத்தை கொண்டனவாகவும் இருந்து வந்திருக்கின்றன. தோட்டத் தொழிலாளர் மத்தியில் இத்தகு நாடகங்களை தயாரித்து மேடையேற்றியவர்கள் *மாஸ்டர்* என அழைக்கப்பட்டு தனித்துவமாக நோக்கப்பட்டனர். பின்னர் பாரம்பரிய கூத்துக்களை மேடையேற்றுபவர்களும் இவ்வாறே மாஸ்டர் என அழைக்கப்படலாயினர்.

மாஸ்டர்கள் இல்லாத தோட்டங்களுக்கு இந்த மாஸ்டர்கள் சென்று அல்லது தோட்ட இளைஞர்களால் அழைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு நாடகங்கள் மேடையேறுவது இக்காலகட்டங்களில் சகஜமானதாக இருந்திருக்கின்றது. இத்தகு நாடக மரபு அப்படியே நீடித்திருக்க ஐம்பதுகளில் மற்றொரு மரபு அதாவது திராவிட இயக்க மரபு மலையகத்தில்

அறிமுகமாவது நாடக வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை ஆரம்பித்தது எனலாம்.

திராவிட இயக்க நாடக மரபு

1932-ல் ஈ. வே. ரா. பெரியார் கொழும்பு வந்து சென்றபின் இலங்கையில் சுயமரியாதை இயக்கம் செல்வாக்கு பெறலாயிற்று. கொழும்பு வாழ் இந்திய வம்சாவளி மக்களில் ஒரு வகுப்பினர் இதில் பெரிதும் ஈடுபாடு காட்டி இயக்க பணிகளை முன்னெடுத்து சென்றனர். அப்போக்கு பின் இலங்கையில் திராவிடர் கழகத்தை ஏற்படுத்த அடித்தளமிட்டது. தோழர் இளஞ்செழியன் போன்றோர்களால் வேகமாக கொழும்பில் வளர்த்தெடுக்கப்பட்ட திராவிட இயக்கம், யாழ்பாண மட்டக்களப்பு பகுதிகளில் வியாபித்ததோடு மலையக தோட்டங்களுள்ளும் நுழைந்தது.

*கடுகண்ணாவை கிரிமெட்டிய தோட்டமே இத்திராவிட இயக்கம் நிலை பெற்ற முதல் மலையக பிரதேசமென* இளஞ்செழியன் குறிப்பிடுவார். இத்திராவிட இயக்கம் தமிழகத்தில் திராவிட இயக்கம் பயன்படுத்திய அனைத்து பிரச்சார உத்திகளையும் கையாண்டு பகுத்தறிவு, சுயமரியாதை, திராவிட உணர்வு சிந்தனைகளை தோட்டங்கள் தோறும் வளர்க்க முனைந்த போது நாடகமும் அவற்றில் ஒரு பிரச்சார வடிவமாக இருநதிருந்தது. ஐம்பதுகளில் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரால் எழுதி நெறிப்படுத்தப்பட்ட *வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, நீதி தேவன் மயக்கம்*, தூக்கு மேடை, பராசக்தி, மனோகரா, சேரன் செங்கூட்டுவன், சோக்கிரடீஸ், அனார்கலி, நச்சுக் கோப்பை மற்றும் திருவாரூர் தங்கராஜாவின் *இரத்தக்கண்ணீர்* முதலான நாடகங்கள் மலைநாடெங்கும் மேடையேற்றப்பட்டன .

*''அனற்பிழம்புகளாக வெளிக்கிளம்புகின்ற வசன நடைகள் இளைஞர்களின் உணர்ச்சிகளை தட்டியெலுப்பும் கூறிய ஆயுதமாக அமைந்தன. போர் முரசங்களாக ஒலித்த*

*பகுத்தறிவு கருத்துக்கள் மலையக இளைஞர்களின் சிந்தனைகளை ஊடறுத்து சென்றன. நாடகங்களில் நடித்தவர்களும் அதனைப் பார்த்தவர்களும் தம்மை ஒரு சோக்கிர டீசாக ஒரு மனோகரனாக கருதி செயற்படத் தொடங்கினர் "*

என இளஞ்செழியன் குறிப்பிடுவது இத்தகு நாடகங்கள் எவ்வாறு தோட்டப்புற இளைஞர்களின் மொழி வளர்ச்சிக்கும் கலாசார நகர்வுக்கும் காரணமாகியிருக்கின்றன என்பதை உணரக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு மேடையேறிய திராவிட இயக்க இறக்குமதி நாடகப்பிரதிகள் ஏற்படுத்திய தாக்கமே மலையகத்தின் அடுத்த கட்ட நாடக வளர்ச்சிக்கு காரணமானதெனலாம்.

திராவிட இயக்க தூண்டலினால் உருவான சுயநாடக மரபு.

திராவிட இயக்க மரபு சார்ந்த சுயநாடக உருவாக்கம் மலையக தோட்டபுற மறுமலர்ச்சி மன்றங்களால் முன்னெடுக்கப் பட்டமை ஐம்பதின் பிற்கூறிலும் அறுபதுகளிலும் அவதானிக்கப்பட்ட அம்சமாகும். சீர்த்திருத்த நாடகங்களாகவும் இலங்கையில் இந்திய தமிழர் பிரச்சினைகளை கூறுவனவாகவும் மலையக தொழிலாளர் நிலை குறித்து சொல்வனவாகவும் இந்நாடகங்கள் விளங்கின. மு. சு. வேலழகன், தமிழோவியன், லிங்கதாசன் போன்றோர்கள் இதற்கு களமமைத்துத் தந்தனர்.

*செக்கு மாடு போல் உழைத்தோம்*
*செக்கு ரோலில் பேரில்லை கண்டக்டர்*
*மக்கு போல் நிற்கு ராரு*
*மாதச் சம்பளம் முன்னூறும் ஓவர் டைம்*
*மாதக் கணக்கு இருநூறும்*
*காடு வெட்டி களைத்து வந்தோம்*
*காம்பராவும் இல்லையாம் - கணக்கன்*

*கால் ஏக்கர் பங்களாவில்*
*காலை நீட்டித் தூங்கினான் - மகனும்*
*காம்பராவை எண்ணுறான்*

என பசுமலை வீனாஸ் கலாசாலை நாடகத்துக்காக க. ப. லிங்கதாசன் 1960தில் எழுதிய கவிதையை நோக்கும் போது மலையகத்தில் திராவிட நாடக மரபு நீடித்த நிலையில் அறுபதுகளில் மலையகத்துக்கான யதார்த்த நாடக மரபு உருவாக்கப்பட்டு விட்டதெனக் கூறலாம்.

இக்கட்டத்தில் மற்றுமோர் அம்சத்தை கூறவேண்டும். அறுபதுகாலகட்டம் மலையகமானது தென்னிந்திய இசைநாடக மரபு, திராவிட நாடக மரபு, திரைப்பட செல்வாக்கு காரணமாக ஏற்பட்ட நாடக மரபு , திராவிட இயக்க மரபில் வளர்ந்து தனித்துவமாக சிந்திக்க தொடங்கியவர் ஏற்படுத்திய நாடக மரபு என யாவற்றையும் பயின்றுவரும் பிரதேசமாக இருந்திருக்கின்றது என்பதே அதுவாகும். இத்தகு கலவைச் சூழ்நிலையிலிருந்து மலையக நாடக வளர்ச்சி அடுத்தக் கட்டத்தை எவ்வாறு அடைந்தது என்பதை நோக்குவோம்.

### பிற்கால நாடக முயற்சிகள் தொடர்புகளில் சில தகவல்கள்

திராவிட இயக்கம் மலையக இளைஞர்களிடையே ஏற்படுத்தியிருந்த இன மொழி உணர்வுகளுக்கு அப்பால் மலையக தமிழ் மக்கள் அதாவது பெருந்தோட்ட பகுதி மக்கள் முகங்கொடுக்கின்ற தனித்துவமான பிரச்சினைகளை கவனத்திற் கொண்டதாய் அறுபதுகளின் முற்பகுதியில் ஓர் ஆத்திர பரம்பரை மலையகத்தே தோன்றியது. இதிலே உயர்கல்வி பெற்றவர்கள் கணிசமாக இருந்ததோடு இதற்கு தலைமைத்துவத்தைக் கொடுக்க இர. சிவலிங்கம் முன் வந்திருந்தார். இன்னும் சொல்லப் போனால் இதுவே மலையகத்தில் தோன்றிய மலையக மக்களுக்கான இயக்கமாக இருக்கின்றது. கவிதைகள், கதைகள் என்பன தரத்திலும்

எண்ணிக்கையிலும் சொல்லும்படியாக அமைந்து மலையக இலக்கியத்திற்கு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பனவாக அமைந்திருந்தன. இப்பணியோடு அரசியல் சமூக முன்னேற்ற முயற்சிகளிலும் ஈடுப்பட்ட இவ்விளைஞர் அணி நாடகத்தின் பக்கமும் கவனத்தை திருப்பியிருந்தது. குறிப்பாக மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கத்தின் மூலம் மாவட்டங்கள் வாரியாக நாடகங்கள் நடத்தப்பட்டு பரிசளித்து நாடகாசிரியர்களை ஊக்குவித்தது விதந்தரைக்கத்தக்கது.

மலையகத்தின் நாடகத் துறைக்கு உந்து சக்தியாக அக்காலப் பகுதியில் திருச்செந்தூரன் திகழ்ந்திருக்கின்றார். திருச்செந்தூரன் நாடக மேடையேற்றங்கள் மட்டுமல்லாது மலையக கூத்துக்களை படித்த இளைஞர்களைக் கொண்டு மேடையேற்றும் முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டிருந்தார். அவருக்கு அனுசரணையாக இம் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்களில் வி.டி. தர்மலிங்கம் பெரிதும் குறிப்பிடத்தக்கவர். திருச்செந்தூரன் நாடகத் துறையில் டிப்ளோமா பயிற்சியை பெற்றிருந்தது, மலையக நாடகத் துறைக்கு புதிய பரிமாணங்களைப் பெற்றுக் கொடுக்க வழி செய்திருந்தது.

இதே காலப்பகுதியில் மாத்தளையில் கார்த்திக்கேசு நாடக மேடையேற்றங்களை செய்து பின் கொழும்பு வாழ் கலைஞர்களோடு இணைந்து கொழும்பில் தொடர்ந்து இம்முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றார். கண்டியில் விஸ்வநாத ராஜா சில நாடகங்களை மேடையேற்றி கணிப்புக்குறியவராக திகழ்ந்திருந்தார். கொழும்பில் அந்தனி ஜீவா மலையக நிகழ்வுகளை நாடகத்தில் உள்வாங்கி மேடையேற்றம் செய்வதில் வெற்றி கண்டார். இவரின் *அக்கினிப்பூக்கள்* பதுளையில் மேடையேற்றம் பெற்று தொழிலாளர்களை ஆகர்ஷித்திருந்தது. வீதி நாடக முன்னோடியான வங்க நாடகம், மேதை பாதல் சர்காரிகம் பயிற்சி பெற்ற அந்தனிஜீவா, கொழும்பிலும், மலையகத்திலும், வீதி நாடகமுயற்சிகளை முன்னெடுத்துள்ளதுடன், வீதி நாடக பயிற்சி பட்டறைகளையும் நடத்தியுள்ளார். இவரில்

*சாத்தான் வேதம் ஓதுகிறது,* என்ற வீதி நாடகம் பலஇடங்களில் நடத்தப்பட்டுள்ளது. அறுபதுகளில் கற்ற மலையக இளைஞர்களில் ஒரு பகுதியினர் ஆசிரியர்களாக இருந்தமையால் பாடசாலைகளில் நாடக முயற்சி பெருமளவில் செறிந்திருந்தது. குறிப்பாக அட்டன், பதுளை, கண்டி, மாத்தளை, ராகலை பகுதிகளில் கல்லூரிகள் பல சிறப்பான நாடகங்களை மேடையேற்றிய பதிவுகள் உள்ளன. ஏ.வி.பி. கோமஸ் மலையக பாடசாலை நாடக வளர்ச்சிக்கு அடியெடுத்து கொடுத்த பெருமைக்குரியவர்.

இதன் செல்வாக்கு தோட்டப்பகுதிகளில் உள்ள மன்றங்களுக்கும் சென்றமையால் தோட்ட வைபவங்களின் போது மலையக யதார்த்த நிலைகளை சொல்லும் நாடகங்களை பரவலாக மேடையேற்றும் மரபு நிலை கொண்டது. எழுபதுகளின் தொடக்கம் வரை நீடித்த நிலை பின் மலையகத்தில் ஏற்பட்ட பஞ்சம் மற்றும் அரசியல் காரணங்களால் மரபு தேக்க நிலையை அடைந்தது.

எண்பதுகளில் மலையக ஆசிரியர்கள் நியமனம் அதிகமாக பாடசாலைகளில் நிகழ்ந்தமை மறுபடியும் பாடசாலை நாடக வளர்ச்சிக்கு காரணமானது. பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்படும் பொது வைபவங்களில் நவீன நாடகங்கள் மேடையேறுவது வழமையானது. தலாவாக்கெல்லை த. ம. வித்தியாலயத்தில் விமர்சிகையாக ஒழுங்கு செய்யப்பட்ட பாரதி விழாவில் வ. செல்வராஜாவின் மலைகளைப் பேச விடுங்கள் அது கொண்டிருந்த உத்திமுறைகள், உள்ளடக்கம் காரணமாகவும் ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் பல புதிய நாடக முயற்சிகளை மேற்கொள்ள ஆர்வமூட்டியது. தொடர்ந்து அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் சமூக நாடகம் ஓரம்சமாக இருந்தமையால் பாடசாலைகளில் நாடகங்கள் உருவாவது அதிகளவில் நிகழ்ந்திருந்தது. இவற்றுள் பல சிறந்த நாடகங்களாக இருந்தமையை அவதானித்திருக்கின்றேன்.

மலையக ஆசிரியர்களில் சிலர் யாழ்ப்பாண, பேராதனை,

பல்கலை பட்டதாரிகளாகவும் பலாலி, கோப்பாய், பேராதனை, ஆசிரியர்கள் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்றவர்களாக இருந்ததும் அவர்கள் அங்கு மேடையேற்றிய நாடகங்களின் நவீன அம்சங்களை கவனத்திற் கொண்டு அவற்றை மலையக பாடசாலை நாடகங்களில் இணைத்தமையும் இதற்கு காரணமாகும்.

தமிழ் தின போட்டிகளில் நுவரெலியா,மாத்தளை, பதுளை மாவட்ட நாடகங்கள் அகில இலங்கை போட்டிகளுக்கு சென்று அங்கு கவனயீர்ப்பை ஏற்படுத்தியதுடன் முதலாம், இரண்டாம் இடங்களை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. மாத்தளை வடிவேலன், மரதன் கிருஷ்ணன் ஆகியோரின் பாடசாலை நாடகங்கள் முதற் பரிசை எண்பதுகளில் பெற்றுக் கொண்டிருக்கின்றன. 1993ல் பொகவந்தலாவை சென் மேரிஸ் தமிழ் வித்தியாலய மாணவர்களைக் கொண்டு நிஸாம் மேடையேற்றிய *வெளிச்சம் வெளியே இல்லை* நாடகம் அகில இலங்கை தமிழ் மொழித் தின போட்டியில் பரப்பரப்புகளுக்கிடையில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதும் அதன் விளைவாக தமிழ் மொழித்தின போட்டிகளில் இருந்து சமூக நாடகம் என்ற அம்சம் விளக்கப்பட்டதானது.

இது குறித்து நினைவுகளை கலாநிதி துரை மனோகரன் மீட்டும் போது, மலையகத்து வீதிகளில் பாலும் தேனும் ஓடுவதாக கலை இலக்கியங்களில் காட்டப்பட வேண்டுமென்ற அவாவுற்ற அரசியல்வாதியொருவரின் முயற்சியே இதுவென்கிறார்.(ஞானம் -நவம்பர் 2001) சர்சைக்குரிய இந் நாடகம் பின் சில தடைகளுக்கிடையில் அட்டனில் பொது மக்களுக்காக மேடையேறியது. அதற்கு உந்துதலாக இருந்த அட்டன் நந்தலாலா கலை இலக்கிய வட்டம் தொடர்ந்தும் மலையகத்தில் நாடக முயற்சி வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அவாவில் சிதம்பரநாதன், ஜெயசங்கர் முதலான யாழ்ப்பாண நாடகவியலாளர்களை மலையகத்துக்கு அழைத்து சில பயிற்சி பட்டறைகளை ஒழுங்கமைப்பு செய்திருந்தது. பொகவந்தலாவை ஹோலி ரோசரி பாடசாலையில் மலையகத்தின் நாடக துறைக்கு

ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்திருந்த எம்.நாகலிங்கம் அதிபரான போது நாடக கருத்தரங்குகளை ஏற்பாடு செய்திருந்ததோடு, தனது பாடசாலையில் அரங்கியலை உயர்தர வகுப்புக்கு பாடமாக கற்பிக்க செய்த ஏற்பாட்டின் வெளிப்பாட்டினை தற்போது அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக அப்பாடசாலையிலிருந்து ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றவர்களின் நாடக ஈடுபாட்டினையும் பங்கேற்பினையும் சிலாகிக்கக் கூடியதாக உள்ளது.

தொண்ணூறுகளில் சீடா திட்டத்தால் மலையக ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தில் அட்டன், தலாவாக்கெல்லை, நுவரெலியா, ராகலை, கண்டி முதலான இடங்களின் பாடசாலைகளில் அவர்களுக்கான பயிற்சி வழங்கும் அமர்வுகள் இடம் பெற்றன. இது கற்ற மலையக இளைஞர்கள் மறுபடியும் அணி சேர்வதற்கு காரணமானதால் அவர்களும் நாடக முயற்சிகளை முன்னெடுத்தார்கள். அதை போலவே ஜனசவிய திட்டத்தில் ஆசியர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தொலைக் கல்வித் திட்டத்தில் பயிற்சி பெறும் போது அவர்களின் கற்கை அமர்வுகளில் ஓன்று கூடும் வாய்ப்பில் நாடக முயற்சிகளில் ஈடுபட்டார்கள்.

இவைகளும் பாடசாலைகளில் நாடக முயற்சிகள் அதிகரிக்க பங்களித்திருந்தன. இக்காலப்பகுதியில் ராகலையில் சிவ. ராஜேந்திரன் பாடசாலை நாடக முயற்சிகளிலும் ஈடுபட்டு வெற்றி பெற்று அப்பணியில் தொடர்ந்து ஈடுபடுகின்றார். இவரின் செம்மலர்கள் நாடக குழு செயற்பாடு மலையகத்தில் வீதிநாடகம் பரவலாக அறியப்படுவதற்கு காரணமானது. இவரைத்தவிர அப்கொட் சாமிமலைப் பகுதியில் அகமட் என்ற சிங்கள நாடகத் துறை செயற்பாட்டாளர் அங்குள்ள சிங்கள பாடசாலைகளுக்கு நியமனம் பெற்று கடமையாற்றும் போது அவரிடம் நவீன நாடக அம்சங்களை கற்றுக்கொண்ட ஹெலன், ஜேம்ஸ், ராமையா மற்றும் ராஜகோபால் போன்ற ஆசிரியர்கள் மலையக நாடக துறைக்கு அணிசேர்ப்பதாக அமைகின்றார்கள். இவர்களின் செயற்பாடுகள்

பாடசாலை வட்டத்துக்குள் இருந்து வெளியே வந்து சுயாதீன நாடகக் சூழல்களை அமைக்குமாயின் மலையக மக்களுக்கான அரங்கியலில் கலாசாரம் உருவாக வழிவகுக்கும்.

என்றாலும் நாடகத்தின் பால் நிஜமான விருப்புடன் லிண்டுல சுகுமார், புசல்லாவை வாசுதேவன் போன்ற ஆசிரியர் துறை சாராதவர்கள் மலையக நாடக துறைக்கு ஆற்றும் பங்களிப்பும் குறிப்பிட்டாக வேண்டும். இவரின் ''புதிய சிந்தனைகள் என்ற நாடகம் அரச நாடக விழாவில் சிறந்த நாடகம் என்ற விருதினை பெற்றது" தொண்ணூறுகளின் இறுதிகளில் சுகுமார் மலையத்தின் சில இடங்களில் மலையக கலை பேரவை என்ற அமைப்பின் ஊடாக நாடக ஆர்வமுள்ள இளைஞர்களை ஒன்று சேர்த்து பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார்கள்.

நவீன நாடகங்கள் என்று சொல்வதை விட யதார்த்த நாடகங்களாக மேடை அரங்க அமைப்பு, கற்பனை என்பவற்றிற்கு கூடிய கவனமெடுத்து இவரின் நாடகங்கள் மேடையேற்றப் படுகின்றன. மத்திய மாகாண அரசு சார்ந்த அமைப்புக்கள் நடத்தும் நாடக போட்டிகளில் கலந்து கொண்ட இவரின் நாடகங்கள் பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுக் கொண்டுள்ளன. அதைப் போல புசெல்லாவை பகுதியில் வாசுதேவன் இத்தகு முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளார். இத்தகையவர்களையும் மலையக நாடக துறை வளர்ச்சிக்காக ஊக்குவிக்க வேண்டியது அவசியமாகின்றது. கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ''வெளிச்சம்" வீதி நாடக குழு வீதி நாடகமுயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. வீதி நாடக பயிற்சி பட்டறைகளையும் நடத்தியுள்ளது.

லயம் (2001) மலர்

# மலையகமும் கைலாசபதியும்

தேசிய உணர்வை மனிதகுல விடுதலையின் திசை மார்க்கத்திற்கு எதிரான தடைக்கல்லாகப் பாவிக்கும் கபட தனங்களை இனங்கண்டு, காட்டி பாட்டாளி வர்க்க சர்வதேச நெறியில் தேசிய இலக்கியம் உருவாக உழைத்தமை பேராசிரியரின் குறிப்பான இயல்பாகும். அவரது எழுத்துகளுடாகவே அவர் தேசிய இலக்கியத்திற்கு வழங்கிய இத்தகைய வரைவிலக்கணத்தைக் கண்டு கொள்ள முடியும்.. இப்பொது நெறியிலின்று வழுவிலாது திறனாய்வுப் பணியாற்றிய போராசிரியர் கைலாசபதியை மலையகம் சார்ந்து நோக்குவதும் நினைப்பதும் அவரின் பத்தாவது ஆண்டு நினைவில் அவசியமாகின்றது.

இலங்கையில் வாழ்ந்து வருகின்ற இந்தியத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இவர்களது முக்கிய இலக்கிய முயற்சிகள் 1930க்குப் பின்னரே முகிழ்த் தொடங்குகின்றன. 1954க்குப் பின்னரே இவரது இலக்கிய ஆக்கங்கள் ஈழத்து பொது இலக்கிய வளர்ச்சியுடன் இணையத் தொடங்குகின்றது. இவ்வாறு காலங்கடந்து இலங்கை தேசிய இலக்கியத்தில் இணைந்த மலையக இலக்கியத்தை சரிவர இனங்கண்டு அதற்குரிய அந்தஸ்த்தை வழங்கியதோடு மட்டுமல்லாது அதன் போக்கினை நெறிப்

படுத்தியதிலும் பிரதான பங்கு பேராசிரியர் கைலாசபதியினுடைய தாகவே இருந்ததாகக் கருதலாம்.

> *புலம் பெயர்ந்து வந்தமையாலும் பொருளாதாரச் சுரண்டளினாலும் முதலாளித்துவ அரசியலமைப்பில் அடிக்கடி நிகழும் பதவிப் போட்டிகளினாலும் சூறையாடப் பெற்ற ஒரு சமூகத்தைச் சேர்ந்த காலமெல்லாம் துன்பக்கேணியிலே தோய்ந்து வாழும் மலையக மக்களது வாழ்க்கையும் தவிர்க்க இயலாதவாறு பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டே வருகின்றது*

எனக்குறிப்பிடும் பேராசிரியர் அம்மாற்றங்களை தொடர்ச்சியாக அவதானித்தும் அதில் ஆரோக்கியமான அம்சங்களை பதிவுகளாக்கவும் அவற்றிக்கு ஊக்கமளிக்கவும் எப்போதும் தயாராக இருந்தார்.

ஒரு புறம் திறனாய்வாளராக இருந்து மலையகப் படைப்புக்களை கணிப்பிட்டுக் கொண்டு, பத்திரிகையாளராக இருந்தபொழுது அவர்கள் தொடர்பான அனைத்து அம்சங்களிலும் கவனம் கொண்டும் தான் ஏற்று நின்ற அரசியல் நிலைப்பாடு தொடர்பாக மலையகத்தில் விளைய வேண்டிய மாற்றங்கள் குறித்தும் தேசிய இலக்கிய கோட்பாட்டை பூரணத்துவம் பெறச் செய்வதற்காக மலையகத்தை முற்றாக ஆகர்ஷிப்பதற்குமாக கைலாசபதி மலையகத் தொடர்பாக இயங்கினார் என்பதற்கு அவரது செயற்பாடுகளும் பதிவுகளும் ஆதாரங்களாக இருக்கின்றன.

கைலாசபதி அவர்களுக்கு பால்ய காலந் தொடக்கமே மலையகத்தோடு தொடர்பிருந்துள்ளது என்பதற்கு 1953இல் பதுளையில் இருந்த அவரது பள்ளித் தோழருக்கு அவர் எழுதிய நீண்ட கடிதங்கள் ஆதாரமாயிருக்கின்றன.

பிற்காலத்தில் சிநேகம் கொண்டிருந்த மறைந்த மாமேதை சி.வி. வேலுப்பிள்ளைக்கும் அவர்க்குமிடையான தொடர்பு ஒன்றே

போதும் கைலாசபதி அவர்கள் முழு மலையகத்தோடும் தொடர்பு கொண்டிருந்தார் என்பதை காட்டுவதற்கு. ஆசிரியராய் தொழிற்சங்கவாதியாய் பாராளுமன்ற உறுப்பினராய் அரசியல் பிரமுகராய் இலக்கிய கர்த்தாவாய் பத்திரிகை எழுத்தாளராய் இவை யாவற்றிற்கும் மேலாக அப்பழுக்கற்ற மனிதாபிமானியாய் வாழ்ந்து வரும் வேலுப்பிள்ளை என கைலாசபதி கூறியது சி.வி.யின் ஆளுமையின் சரியான வடிப்பாகக் கொள்ளத்தக்கது.

வேலுப்பிள்ளை அவர்களை கைலாசபதி வேறு இரு விதங்களில் ஒரு 'அரிய சேர்வை' யாகக் காண்கிறார். ஒன்று சுதேசிய மேற்கத்திய வீச்சுகளின் சேர்வை; மற்றையது யதார்த்தங்களினதும் இலட்சியவாதத்தினதும் சேர்வை. இந்த அருமையான வார்ப்பை உச்சமாக மக்களுக்காக பயன்படுத்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர் கைலாசபதியே.

சி..வி. அவர்கள், தன்னால் எழுதமுடியும் என்ற நம்பிக்கையை தனக்கு வளர்த்து எழுத முடியும் என்ற நம்பிக்கையை தனக்கு ஊட்டி எழுதவும் தூண்டிய முறையை பேராசிரியரின் அஞ்சலியுரையில் குறிப்பிட்டது.
இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

சி.வி. யின் மலைநாட்டுத் தலைவர்கள் பற்றிய பேனாச் சித்திரங்கள் (1955 -59 ) தொடர் நாவல்களான வாழ்வற்ற வாழ்வு, எல்லைப்புறம், பார்வதி ஆகியன கைலாசபதி தினகரன் ஆசிரியராக இருந்த காலத்திலே வெளிவந்த முக்கிய படைப்புகளாகும். பத்திரிகையாளராக இருந்த காலத்தில் மட்டுமல்லாது அதனைத் தொடர்ந்தும் சி.வியோடு நட்பு பேணி அவரில் உற்சாகத்தை ஏற்படுத்துபவராக தொழிற்பட்டுமிருந்தி ருக்கின்றார் பேராசிரியர் அவர்கள்.

சி. வி. அவர்கள் எழுதிய இறுதி நாவலான 'இனிப்படமாட்டேன்' ஆங்கிலத்தில் வெளிவர வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். The Holocast – A story of the 1981 Ethnic violence என்ற தலைப்பில் இதை ஆங்கிலத்தில் எழுதவைத்த பெருமை க.கைலாசபதியையே சேரும்.

நவீன இலங்கை வரலாற்றின் ஒரு பகுதிக்கு உயிர்த் தோற்றங்கொடுக்கிறதென்ற முத்திரையோடு சி. வி. அவர்களின் மலையக நாட்டார் பாடல் தொகுப்புக்கு முன்னுரை வழங்கி வேலுப்பிள்ளை அவர்களுக்கே அதைத் தொகுக்கும் தகுதியுண்டெனக் குறிப்பிடுகின்றார்.

1981 யில் மலையக கலை இலக்கிய பேரவை சி .வி.. க்கு மக்கள் கவிமணி பட்டமளித்துக் கௌரவித்த விழாவில் போராசிரியர் சி. வி. யின் ஐம்பதாண்டு எழுத்துத் துறை நிறைவு குறித்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

சி.வி. யை அடுத்து அவர் மலையக மூத்த இலக்கிய முன்னோடியான திரு. கே. கணேஷ் அவர்களில் பெரும் நம்பிக்கையும் அபிமானமும் கொண்டிருந்தார். கைலாசபதி அவர்கள் தினகரன் ஆசிரியராக இருந்த போது பத்திரிகையின் விருத்திக்காக ஆலோசனைக் கலந்துரையாடல்களில் அவரை பங்கு பெற்றுச் செய்திருக்கின்றார்.

இவ்வாறு சி.வி. யோடும் கணேஷ் ஆகியோரோடும் மட்டும் கைலாசபதியின் தொடர்பு நின்றிடாது அவர்களைத் தொடர்ந்து முற்போக்கு யதார்த்தவாத மலையக இலக்கியத்தை முன்னெடுத்துத் தொடரும் தலைமுறைகளோடும் தன்னைப் பிணைத்துக் கொண்டிருந்தார். சி. வி. யைத் தொடர்ந்து என்.எஸ்.எம். இராமையா, சாரல்நாடன் ஆகிய இருவரும் ஆக்க இலக்கிய படைப்புகளான சிறுகதைகளை எழுதினர்.

சாரல் நாடன் எழுதிய ‘எவளோ ஒருத்தி‘ என்ற சிறுகதையை பிரசுரித்த போராசிரியர் கைலாசபதி அவரது ஆற்றலை இனங்கண்டு தொடர்ந்து எழுதும்படி தனது கைப்பட கடிதம் எழுதினார். என். எஸ் .எம். இராமையாவும் சாரல்நாடனும் மலையக இலக்கியத்தின் நம்பிக்கைகள் என்று சி.வியிடம் கூறியுள்ளார். பூண்டுலோயா தர்முவுடன் அவர் கொண்டிருந்த கடிதத்தொடர்பு மலையகக் கவிதைகள்பாலும் அவர்க்கு

நாட்டமிருந்ததைக் காட்டுகின்றது.

*மலையக உழைக்கும் மக்களின் வாழ்க்கையிலிருந்தே பெரும்பாலான கதைகள் முகிழ்ந்திருக்கின்றன. அந்த வாழ்க்கை அவலம் நிறைந்ததாயும் பலவித சுரண்டல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் அடிப்படுத்தப்பட்டதாயும் சோகமே நித்தியமாயும் நிரந்தரமானதாயும் இருந்து வந்திருப்பது உலகறிந்த உண்மையாகும். அத்தகைய வாழ்க்கையைச் சிறிதளவேனும் சித்தரிக்க முற்படும் கதைகளில் துன்பச்சுவை எதிர்ப்பார்க்கக்கூடியதே*

என 1980 இல் வெளிவந்த மாத்தளை வாழ் மூன்று பிரதான மலையக எழுத்தாளர்களின் 'தோட்டக் காட்டினிலே' சிறுகதை தொகுப்பிற்கு வழங்கிய முன்னுரையில் குறிப்பிட்டு, மலையகம் ஏனைய இலக்கிய துறைகளை விட சிறுகதைத்துறையில் பிரகாசிப்பதை சிலாகித்து, இம் மூன்று எழுத்தாளர்களின் படைப்புக்களையும் கவனமாக அணுகி உற்சாகமூட்டும் வகையில் நடப்பியலைப்புரிந்துக் கொண்டு, பூசி மெழுகாமல் இருப்பதை பாராட்டி தனது முன்னுரையை வடித்திருக்கிறார்.

மலையகத்தின் ஒவ்வொரு மூலையிலும் என்ன முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதில் அக்கறை காட்டியிருக்கின்றார் என்பதற்கு மலையகத்தவரை சந்திக்கும் போது கரிசனமுடன் தொழிற்சங்க செயற்பாடுகள், சிறு சஞ்சிகை வெளியீடுகள் என்பன பற்றி வினவுவார் என அவர் குறித்து பலர் சொல்வதினின்று விளங்கிக் கொள்ளலாம்.

தினகரனில் இருந்த காலத்தில் மலையக வேலை நிறுத்தங்கள் தொழிற்சங்க போராட்டங்கள் தொடர்பான செய்திகளை சிறந்த ஆவணங்கள் என்ற கரிசனையோடு பிரசுரித்ததையும் இங்கே நினைவு கூற வேண்டும். மலையகத்தில் வெளிவந்த இலங்கை சஞ்சிகைகளில் வரலாற்றில் முக்கிய தடம் பதித்த 'தீர்த்தக்கரை' தொடர்பாக கைலாசபதி அவர்களுக்கு பெரு நம்பிக்கை இருந்தது. சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள்

ஆரம்பித்த பாரம்பரியத்தை தொடரக்கூடிய நம்பிக்கை ஒளியினை அதில் அவர் கண்ணுற்றிருந்தார். இதனால் தீர்த்தக்கரை தொடர்பானோர்களைச் சந்தித்து அளவளாவுவதில் நாட்டங் கொண்டிருந்தார்.

தாமே பாதையும் வெட்டி பயணமும் தொடருகின்றோம் என்ற மலையக இலக்கிய முயற்சிகள் தொடர்பான பிரகடனம் செய்து இயங்கியவர்கள் குறித்து கைலாசபதி அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தாலும் பாதைகள் எப்போதோ வெட்டப்பட்டு விட்டது என்பதை மறந்த தாமே அவ்வாறு செய்கின்றோமென பிரலாபிப்பதை மறுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று மலையக இலக்கிய தொழிற்பாட்டுத்துறையில் முக்கிய சக்தியென கருதக்கூடிய மலையக கலை இலக்கிய பேரவையின் செயலாளர் அந்தனி ஜீவா அவர்களை மலையகத்தின்பால் கவனத்தை ஈர்க்கச் செய்து செயற்பட வைத்ததிலும் கைலாசபதி அவர்களின் பங்களிப்பு இருந்திருக்கின்றது.

கைலாசபதி தனது இறுதிக்காலத்திலும் மலையக இளந்தலைமுறைகளை வளர்ப்பதில் கவனமாயிருந்திருக்கின்றார். என்பதை தேசிய கலை இலக்கியப் பேரவையின் முக்கியத்துவமிக்க உறுப்பினர்களான இ. தம்பையா, சி. இராஜேந்திரன் முதலான மலையக இளைஞர்களை இலக்கிய செயற்பாடுகளில் உற்சாகப்படுத்தியதில் இருந்து அறியமுடிகின்றது.

இவ்வாறு கைலாசபதி அவர்கள் தனது காலம் முழுவதும் மிகத்தாமதமாக இலக்கிய பரப்பில் நுழைந்த மலையக பெருந்தோட்ட தொழிலாளர் இலக்கியத்தை வேகமாக வளர்த்துச் செல்ல பிரதான காரணியாக செயற்பட்டிருக்கின்றார் என்றால் அவர் மலையகத்தில் கண்ணுற்ற தனித்துவமான அம்சங்கள் காரணமாக இருந்திருக்க வேண்டும். அவரிடம் விசாலமான உலக இலக்கியம் தொடர்பான பார்வை இருந்தது. அதன் பரிச்சயத்தோடு ஈழத்து இலக்கியத்தை நோக்கி தமிழ் இலக்கியத்தை நோக்கி

திறனாய்வுத்துறையில் இதுவரை யாராலும் நிரப்பப்பட முடியாத சாதனைகளை நிலைநாட்டியிருக்கின்றார். அத்தகைய ஒருவரின் வாயால் 'இலங்கையின் தமிழ் இலக்கியத்துக்கு புதிய இரத்தம் பாய்ச்சுவது மலையக இலக்கியமே' என மலையகத்தின் மீது முத்திரை பொறிக்கப்படுமாயின் அதன் மெய்மை குறித்து ஆராயும் போது பல புதிய தகவல்கள் வெளியாகும் என்பதோடு இனிவரப்போகும் மலையக இலக்கிய புதிய தலைமுறையினருக்கும் இது உந்து சக்தியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை எனலாம்.

## சான்றாதாரம்


1. ந . இரவீந்திரன்; தேசிய இலக்கிய கோறப்பாடும் கைலாசபதியும் - தாயகம்' 20
2. டாக்டர் கா . சிவத்தம்பி ; ஈழத்தில் தமிழ் இலக்கியம்
3. க . கைலாசபதி ; மலையக மக்கள் பாடல்கள் முன்னுரை.
4. சி .தில்லைநாதன் ; எழுத்தாளர் பத்திரிகையாளரிடையே கைலாசபதி தாயகம் 19
5. க .கைலாசபதி ; மலையக மக்கள் முன்னுறை.
6. தங்கதேவன் ; அட்டைப்பட ஓவியங்கள் (மல்லிகை)
7. ந .இரவீந்திரன் ; தேசிய இலக்கிய கோட்பாடும் கைலாசபதியும் - தாயகம்' 20
8. சாரல்நாடன் ; சி . வி . சில சிந்தனைகள்
9. சாரல் நாடன் ; சி . வி . சில சிந்தனைகள்
10. அந்தனி ஜீவா ; மல்லிகை ஆகஸ்ட் 91
11. எஸ் .ஜோதிக்குமார் ; (தகவல்)
12. அந்தனி ஜீவா ; இலங்கை தமிழ் இலக்கியத்தில்... கனவு இதழ்

நூல்: பன்முக ஆய்வில் கைலாசபதி

# எண்பதுகளில் மலையக சிறு சஞ்சிகை சூழல்

எண்பதுகளின் பிறகும் இன்று வரை ஏற்பட்டுள்ள நவீன இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் துணை இருந்திருப்பது சிறு சஞ்சிகைகளே எனக் கூறினால் யாரும் மறுக்கமாட்டார்கள். குறிப்பாக தமிழகத்தே ஏற்பட்ட இலக்கிய மலர்ச்சிகள் சிறு சஞ்சிகைகளின் காத்திரமான பங்களிப்புகளால் உருவாக்கப்பட்டனவாகும். மணிக்கொடி, சரஸ்வதி, எழுத்து என இலக்கிய காலகட்டங்கள் சிறு சஞ்சிகை சூழலை ஒட்டியதாகவே வர்ணிக்கப்படும் போக்கினைப் பரவலாக அவதானிக்கலாம். முப்பதுகளில் தமிழகத்தில் தோன்றிய சிறு சஞ்சிகைகளில் அதன் தாக்கத்தை இலங்கையிலும் ஏற்படுத்துவதாக இருந்திருந்தது. தமிழக மணிக்கொடியின் தாக்கம் இலங்கையில் 1946 இல் மறுமலர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் வெளிப்பட்டது. அதே ஆண்டில் மலையக இலக்கிய முன்னோடி கே. கணேஷும், கே. ராமநாதனும் பாரதி என்ற இதழைக் கொழும்பில் இருந்து நடத்தியிருந்தனர். ஆறு இதழ்களோடு பணியை நிறைவு செய்த 'பாரதி' குறித்து செ. யோகராசா விரிவாக நோக்கி ஆராய்ந்துள்ளார். 1946 இல் இப்பாரதி மலையகம் குறித்து கணிசமான அக்கறை காட்டிய சிறு சஞ்சிகையாகக் கணிப்பிற் கொள்ளலாம்.

அதன் பின் மலையக சிறு சஞ்சிகை சூழல் திராவிட இயக்கத்தின் செல்வாக்கு காரணமாக ஈர்க்கப்பட்டது. கொழும்பு மற்றும் மலையக இளைஞர்கள் நாற்பது மட்டான இதழ்களை 1950 - 70 காலகட்டத்தில் நடத்தியிருக்கின்றார்கள். இவை திராவிட இயக்கப் பின்னணியில் தோற்றினாலும் பெரும்பாலானவை

மலையக நிலைகளை மறந்தவைகள் அல்ல என்பதை வெளிப்படுத்த கண்டி க.ப. சிவம் நடத்திய மலைமுரசு (1960 - 61) உதாரணமாக விவாதிக்கப்படுகின்றது.

இன்று மலையகத்தில் மூத்த எழுத்தாளர்களாக போற்றப்படும் பலரை அன்று மலைமுரசு இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியிருந்தது. க.ப. சிவம் 1958 - 59 பகுதியில் ஈழக்குமாருடன் இணைந்து முத்தமிழ் முழக்கம் இதழை நடத்தியிருந்தார். இர. நாகலிங்கம், கே. ஏ. இராமன் மற்றும் மு. கந்தையா இணைந்து நடத்திய மலைமுழக்கமும் (1960) க. தமிழ்மாறன் நடத்திய போர்வாள் (1966) முதலான சில திராவிட இயக்க மரபில் தோன்றிய சஞ்சிகைகள் மலையக சிறு சஞ்சிகையாக அடையாளம் பெறுவண்ணம் பணியாற்றின.

எழுபதுகளில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக 'அஞ்சலி' மற்றும 'நதி' கணிசமான மலையக அக்கறையோடு மலையக புத்திஜீவி இளைஞர்களின் பங்களிப்போடு கண்டியிலிருந்து வெளிவந்தமையைக் குறிப்பிடலாம். அத்தோடு மலையகத்தில் உருவான அரசு சார்பற்ற நிறுவனங்களும் சஞ்சிகை முயற்சிகளில் ஆங்காங்கே ஈடுபட்டிருந்தன. அவற்றில் கொந்தளிப்பு, தாக்கம், மலைமடல், குன்றின்குரல் என்பன இலக்கிய விடயங்களுக்கு போதுமான இடம்கொடுத்து வந்தன. என்றாலும் இத்தகு அரசு சார்பற்ற நிறுவன ஆதரவு பெற்று வெளிவரும் சஞ்சிகைகளை சிறு சஞ்சிகை சூழலில் சேர்த்துக் கொள்ளலாமா என்பது சர்ச்சைக்குரியதாகும். ஏனெனில் தனிநபர் அல்லது குழுவினர் தனது மூலதனத்தை அர்ப்பணத்துடன் செலவிட்டு வெளிவருவதே சிறு சஞ்சிகையின் மரபு. இது பின் வாசகர்கள் அளிக்கும் சந்தா உள்ளிட்ட பல ஊக்குவிப்புக்களால் தனது ஆயுளைத் தீர்மானிக்கும். கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகவெளிவரும் குன்றின் குரல் சஞ்சிகையின் ஆசிரியரான அந்தனி ஜீவா பொறுப்போற்றதும் ஜோசப் ஜேசுகொடி பொறுப்பாசிரியராக இருந்த காலகட்டங்களில் காத்திரமான இலக்கிய சஞ்சிகையாக வெளிவந்துள்ளது. மலையாக எழுத்தாளர்களின் சிறுகதைகள் இந்த சஞ்சிகையில் மீள் பிரசுரம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனரஞ்சக சஞ்சிகைகள் வியாபார ரீதியில் பெரும் மூலதனத்துடன் வெளிவருபவை. இந்த அடிப்படையில் நோக்கும் போது அரசு சார்பற்ற இயக்கங்கள் தங்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நிதி அன்பளிப்புக்களால் நடத்தும் சஞ்சிகைகள் குறித்த வரைவிலக்கணம் தேவைப்படுகின்றது. என்றாலும் இச்சஞ்சிகைகள் மலையகத்தில் இலக்கியத்தை மறுபடியும் உயிர்ப்பித்து குறிஞ்சித் தென்னவன், மல்லிகை சி. குமார், ப. தங்கம் போன்றோரை எழுத வைத்ததோடு இஸ்மாலிகா போன்ற புதிய தலைமுறை எழுத்தாளர்கள் தோற்றத்துக்கு வழிவகுத்தன.

இதே சந்தர்ப்பத்தில் 1978 இல் தலவாக்கெல்லை இலக்கிய வட்டம் வெளியிட்ட ஆக்கம் சஞ்சிகை ஓரிரு இதழ்களோடு நின்று போனாலும் அதன் தாக்கம் ஆழமானதாக இருக்கின்றது.

இனி எண்பதுகளிலும் அதற்குப் பின்னும் மலையக சூழலில் வெளிவந்த சஞ்சிகைகளை நோக்குவோம்.

## தீர்த்தக்கரை

எண்பதுகளில் மலையக சிறு சஞ்சிகைகள் என்றவுடன் தமிழ் கூறும் உலகுக்கு முதலில் ஞாபகத்துக்கு வருவது, தீர்த்தக்கரையாகத்தான் இருக்கும். வல்லிக்கண்ணன் இது குறித்துக் கூறும்போது,

''இலங்கையில் பிரசுரமான சிறு பத்திரிகைகளில் -
சிறிது கால அளவே வாழ்ந்த போதிலும் -
முக்கிய கவனிப்புக்கு உரியதாகி, ஏதோ சில வகைகளில்
தாக்கங்கள் ஏற்படுத்திய வெளியீடுகளில்,
தீர்த்தக்கரைக்கு முக்கிய இடம் உண்டு" என்கிறார்.

எல். சாந்திகுமாரை ஆசிரியராகக் கொண்டு, எஸ். நோபட், எம். தியாகராம் எல். ஜோதிக்குமார் ஆகியோரின் காத்திரமான பங்களிப்போடு கலை, இலக்கிய, சமூக, அரசியல் சார்ந்த

உலகளாவிய பார்வையோடு மலையக இலக்கியத்தையும் இணைத்து அதற்கு கணிசமான அங்கீகாரத்தை ஏற்படுத்தும் பிரயத்தனம் தீர்த்தக்கரையின் எல்லாப் பக்கங்களிலும் வெளிப்பட்டிருக்கின்றது.

1980 இல் (ஜுன் - ஆகஸ்ட்) முதலாவது காலாண்டு இதழை வெளிக்கொணரும் போது, தீர்த்தக்கரை கொண்டுவந்த நோக்கம் ஆசிரியர் தலையங்கத்தில் வெளிப்படுகின்றது.

> *"ஒரு குறுகிய எல்லைக்குள் ஆய்வு நடத்தி சமூகத்தை ஷண நேரக் கணக்கில் புரிந்து கொண்டு விட்ட மேதா விலாசத்தோடு படைக்கப்படும் இலக்கியங்களின் நிரந்தரத்தை நாம் அறிவோம். வாசகர் மத்தியில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி விடயங்களை துருவித் துருவிப் பார்க்கும் அவர்களின் ஆர்வம் ஆகியன எமது களத்துக்கு ஏற்ற நல்ல பசளைகளாகும். மனித சமுதாயத்தின் சிகரத்தை எட்டிப்பிடிக்க கடின உழைப்பை மேற்கொள்ளும் இலக்கிய தாக்கங்களின் அழகும் வீச்சும் மிக்க படைப்புகள் உருவாக நாம் களம் அமைப்போம்."*

என்கிறது முதலாவது இதழ் ஆசிரியர் தலையங்கம். முதலாவது இதழ் கண்டியிலிருந்து வந்திருந்தாலும் அது தான் மலையக சஞ்சிகை என்பதை எந்த இடத்திலும் பிரகடனப்படுத்திக் கொள்ளவில்லை. இலங்கையின் பல எழுத்தாளர்கள் இதில் எழுதியிருந்தார்கள். ஆனாலும் அதில் இடம்பெற்ற கேகாலை கைலாயநாதனின் கதை, சாந்திகுமார் வரைந்த மலையகம் - சில குறிப்புக்கள், நாகசேனை தோட்டத்து நரசிம்மன் கங்காணியின் நெஞ்சத்துப் பக்கங்களான இவர்களின் டயறி, ஏட்டில் எழுதா இதயத்து ராகங்களாக பல பக்கங்களில் இடம்பெறும் மலையக நாட்டுப் பாடல்கள் முதலியன மலையக சஞ்சிகைக்கான அத்திவாரங்களை கொண்டுள்ளதாக மிளிர்கின்றது.

இரண்டாவது இதழில் நேர்கொண்ட பார்வைகள் என்பதாக மாதர் பகுதி சிறப்பம்சமாக இடம்பெற்றிருக்கின்றது. இது மலையகப்

பெண்கள் பிரச்சினைகள் குறித்து சராசரி கண்ணோட்டத்திலிருந்து வித்தியாசமாக அணுகுகின்றமையைக் காணலாம். சிகரட் பிடிப்பதாலோ, பிராவை கழற்றி வீசி விடுவதாலோ பெண்கள் விடுதலை பெற்றுவிட முடியுமென்ற மேல்மட்ட பொழுது போக்கு நிலையைக் கண்டித்து மலையகப் பெண்கள் சிந்திக்க வேண்டிய திசை குறித்து நெறிப்படுத்துகின்றது.

மூன்றாவது இதழில் (பெப். - மார்ச் 1981) மலையகத்தின் சமூக உருவாக்கமும் என்ற கனதியான கட்டுரையும் குருஷேத்திரப் பகுதியில் ஜெயகாந்தன் குறித்து இன்றைய வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களை ஆக்கபூர்வமான அம்சங்களும் மீண்டும் வசந்தம் வரும் என்ற கேகாலை கைலைநாதனின் சிறுகதையும் கவனமாகப் பத்திரப்படுத்த வேண்டிய இதழ் என்ற அந்தஸ்தை வழங்குவதாகின்றது. 1982 இலும் தொடர்ந்து வெளிவந்த தீர்த்தக்கரை ஜனவரி, மார்ச் இதழில் மலையகம் குறித்த வ.ஐ.ச. ஜெயபாலன் எழுதிய முக்கியமான கவிதையான 'எழில் முடி புனைக'வைக் கொண்டுள்ளது. இந்த இதழில் கேகாலை கைலைநாதனின் 'அக்கினிக்குஞ்சு' நாடகம் இடம்பெற்றுள்ளது. இந்த நாடகம் அரங்கினில் இல்லாமல் மன அரங்கில் மேடையேற்றுக்கொள்ள வேண்டுகோள் விடுத்து ஆரம்பமாகின்றது. இந்த நாடகம் மலையக மக்கள் காலங்காலமாக தாம் கொண்டிருந்த அடிமைச் சிந்தனை ஓட்டத்தை மீறி தனது வாழ்வை இம்மண்ணில் உறுதி செய்து கொள்வதற்கான முனைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. செண்பகத்தோட்டம் என ஆரம்பிக்கப்படும் பகுதி இளைய தலைமுறைகளின் கவிதா வீச்சுக்குக் களங்கொடுத்து புதிய எழுத்தாளர் வரவுக்கு செங்கம்பளம் விரிக்கின்றது. மேலும் 1981 இல் இரத்தினபுரியில் நடந்த இன வெறியாட்டம் குறித்து சரியான விவரத்தையும் அது குறித்த பார்வையையும் சாந்திகுமார் இதில் பகிர்ந்து கொள்வது மறுபடியும் பலரால் வாசிக்க வேண்டியதாகின்றது. ஆசிரியர் மீது கடும் குற்றச்சாட்டு என்பதை முகப்பில் பொறித்து 1982 இன் இறுதி இதழ் மலையக பல்கலைக்கழக மாணவர்கள் தமது சமூகத்தின் கல்வி நிலை

குறித்து கொண்டிருக்கும் பார்வையைக் கலந்துரையாடலாக பதிவு செய்திருக்கின்றது.

தீர்த்தக்கரையின் இதழ்களை மறுபடி புரட்டிப் பார்க்கும்போது, வல்லிக்கண்ணன் சொல்வது போன்று ஐந்து இதழ்களோடு நின்று போனது ஒரு இழப்புத் தான் என்பதை மிக ஆழமாகவே புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எது எவ்வாறாயினும் தீர்த்தக்கரையின் சிறுகதைகள் நூலுரு பெற்றது போன்று அது மலையக வரலாற்று உருவாக்கம் பற்றிய பதிவும் நூலுருவாக வேண்டிய தேவை இருக்கின்றது. அது போலவே ஏட்டில் எழுதா இதயத்து ராகங்களாக மலையக நாட்டார் பாடல் பிரசுரித்திருந்ததை மறுபடியும் அவைகள் யாவும் உண்மையாகவே நாட்டார் பாடல்கள் தானா என்பதை உறுதி செய்து கொண்டு தொகுப்பாக்குவதும் அவசியம்.

## சௌமியம்

1987 மார்ச்சில் மலையக சிறு சஞ்சிகை உலகுக்கு ஆச்சரியமான வரவு ஒன்று நிகழ்ந்திருக்கின்றது. அது தான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலக்கிய சிற்றிதழை வெளியிடும் பணியை தொழிற்சங்க அரசியல் தொனியைத் தளர்த்தி மலையக சஞ்சிகையாக வெளிவரவேண்டுமென்ற அவாவோடு, 'சௌமியம் என்ற சஞ்சிகை வெளியிடத் தொடங்கியது.

பி. தேவராஜ்ஃம் நா. சுப்ரமணியமும் ஆசிரியர் குழுவிலிருந்து சமூக இலக்கிய சஞ்சிகையாக வெளிவர சிரத்தை எடுத்திருக்கின்றார்கள். முப்பதுகளில் கண்டி என்ற கே. கணேஷின் தொடர் கட்டுரை சௌமியம் இதழ்களைப் பாதுகாக்க வேண்டிய கனதியைக் கொடுக்கின்றது. முதலாவது சௌமியம் இதழில் தெளிவத்தை ஜோசப்பின் "ஒரு புதிய உயிர்" சிறுகதை வெளிவந்துள்ளது. கொழும்பை அண்டியுள்ள களனி, பொரளை, வத்தளை, மாபோல பகுதிகளில் கீரைத்தோட்டங்களில் ஈடுபடும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பற்றிய விவரணக் கட்டுரையும்

பெண்கள் அபிவிருத்தியில் கரிசனை கொண்ட கட்டுரைகளையும் தாங்கியுள்ளது.

தொடர்ந்து வந்த சௌமியம் இதழ்கள் பல புதிய வீச்சுக்களை தாங்கியதாக இருப்பதைக் காணலாம். ஆகஸ்ட் இதழில் என். எஸ். ராமையாவின் கோவில் சிறுகதை மீள்பிரசுரமாகின்றது. சிவேரா எழுதிய யாருக்கு அவமானம் நாடகம், மலையகக் குடித்தொகை பற்றிய விரிவான புள்ளி விபரம் என்பன இடம்பெற்றுள்ளன. டிசம்பர் 87 இதழ் மலையகக் கல்வி நிலை பற்றி விரிவாக ஆராயும் இதழாக இருப்பதோடு, மலேசிய தமிழ் இலக்கியம் பற்றி 6வது தமிழாராய்ச்சி மகாநாட்டு சில கட்டுரைகளையும் கொண்டதாக இருக்கின்றது. இதிலே குறிப்பிட்டுக் கூறும்படியான மற்றுமொரு கட்டுரை 'சிலம்பம்' பற்றியதாகும். சிலம்பக் கலை பற்றிக் கூறி 1920க்கு பின் மலையகத்தில் சிலம்பக் கலை ஆசிரியர்களாக மலேசிய நாட்டுத் தோட்டங்களில் திகழ்ந்தவர்களைக் குறித்த ஆவணத்தைத் தருகின்றது. இது நமது மலையகத்திலும் வழக்கிருந்த ஒன்று என்பதால் அது குறித்துத் தேட வேண்டிய உந்துதலை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

மீள்பிரசுரங்களாகவே இலக்கிய படைப்புகள் மிகுதியாக இடம் பெற்றிருப்பதால் இலக்கிய ஆர்வம் மட்டுமே இருந்திருக்கின்றதென்றும் புதிய எழுத்துப் பரம்பரை மலையகத்தே தோற்றுவிக்க சௌமியம் எடுத்த முயற்சி பெரிதாக சித்திக்கவில்லை என்றே கூறலாம்.

இதற்கு முன்னோடியாக தொழியாளர் தேசிய சங்கத்தின் மாவலி' என்ற சஞ்சிகை வெளியிட்டது. இதன் ஆசிரியராக சக்தி பாலையா செயற்பட்டுள்ளார். மலையக இயக்கிய முன்னோடி சி. வி.யின் ஆக்கங்கள் பல இதில் இடம் பெற்றுள்ளனர். கலிமணி சி.லி யின மேறபார்வையில் சஞ்சிகையாக வெளிவந்த இதழ் பின்னர் சங்க பிரகார ஏடாக மாறிவிட்டது.

முதல் ஏழு கொழுந்து இதழ்கள் குறித்து, மேமன்கவி கருத்து கூறுகையில்

> *இலங்கையில் வெளிவரும் சிறு சஞ்சிகைகளும் சரி, அதில் எழுதும் படைப்பாளிகளாக அங்கீகர்க்கப்பட்டவர்களும் சரி, இலக்கியத்தைத் தனியாக ஓர் இயக்கமாக நோக்காது, சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளைச் சார்ந்த ஓர் அம்சமாக நோக்குவதைக் கூறலாம். அவர் தம் சிறு சஞ்சிகைகள் வெறுமனே கலை இலக்கிய வட்டத்துள் நின்றுவிடாது. வெவ்வேறு பிரச்சினைகளைச் சார்ந்த நோக்குகளையும் உள்ளடக்கியதாக இருக்கின்றன. இக்கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு தான் இதுவரை அந்தனி ஜீவாவை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்துள்ள வெளிவந்த கொழுந்து சஞ்சிகையின் இதழ்கள் பற்றிய நமது அவதானத்தை முன்வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.*

எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொழுந்து முதலாவது இதழ் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் 1988ம் ஆண்டு என்று வெளிவந்தது. அதன் பின் சீரான இடைவெளியில்லா விட்டாலும் தொடர்நது 1999 வரை 13 இதழ்கள் வெளிவந்திருக்கின்றது.

எண்பதுகளில் வெளிவந்த கொழுந்து ஏழு இதழ்களினதும் படைப்புக்கள் குறித்து பார்வை செலுத்தும் போது, அவற்றின் ஆசிரியத் தலையங்கங்கள் கவனயீர்ப்புடையவனவாக இருப்பதைக் காணலாம். மலையகத்தின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆசிரியத் தலையங்கங்கள் தீட்டப்பட்டுள்ளன. மலையகத்தின் சமூக, அரசியல், பொருளாதார, கல்வி மற்றும் இலக்கியம் சார்ந்த கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. அக்கருத்துக்களின் ஊடாக அந்தனி ஜீவா கொண்டிருக்கும் சமூக நோக்கு எமக்குப் புலப்படக் கூடியதாக இருக்கிறது. கலை இலக்கிய

சமூக அக்கறையோடு உழைத்தவர்களுக்கு உன்னத கௌரவம் வழங்கப்பட வேண்டுமென்ற தீவிர அக்கறையின் வெளிப்பாடு நடேசையர், தமிழ் அறிஞர் தனிநாயகம் அடிகளார் ஆகியோருக்கு நினைவாலயங்கள் எழுப்பப்பட வேண்டும் என ஆசிரிய தலையங்கத்தினூடாகக் கொழுந்து வலியுறுத்தியிருப்பது சிந்திக்க வேண்டிய ஓரம்சமாகும்.

மேமன்கவி கொழுந்து கவிதைகள் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சித் தென்னவன், க.ப.லிங்கதாசன், தமிழோவியன் ஆகியோர், தாம் சார்ந்த சூழ்நிலையினூடாக உள் வாங்கிய அனுபவத்தைத் தமக்கு வாய்த்த மரபுக் கவிதைகளில் கூறி இருந்தாலும், அக்கவிதைகள் அவர்களின் பழைய கவிதைகளை மீண்டும் நினைவு கூறுவதாகவே அமைந்துள்ளன. இளைய கவிஞராக முரளிதரனின் கவிதைகள் கவனத்தைக் கவர்கின்றன. கடந்த கால முரளிதரனின் கவிதைகளிலிருந்து சற்று வித்தியாசப்பட்ட பரிமாணத்தில் கொழுந்து இதழ்களில் அவர் எழுதியுள்ள கவிதைகள் அமைந்துள்ளன. அதே போன்று இன்னுமொரு மலையக இளைய கவிஞரான வெலிமடை ர.ீபீக்கின் இரத்தமொழிபெயர்ப்புகள் என்னும் ஒரேயொரு கவிதை கொழுந்து ஏழாவது இதழில் வெளிவந்துள்ளது. அதன் உள்ளடக்கம் மலையகமாக இருப்பதன் காரணமாக வரவேற்கும் அதே வேளை ர.ீபீக்கின் பிற்காலக் கவிதைகளில் காணப்படும் வீச்சுஇக்கவிதையில் இல்லையெனலாம்.

மொழிபெயர்ப்புக் கவிதைகளென கு. ராமச்சந்திரனால் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பங்களாதேஷ், இந்தி, பஞ்சாப் கவிதைகள் ஆழமான உணர்வலைகளை எடுத்துச் சொல்கின்றன. அக்கவிதைகளின் குரல் இன்றைய கவிதைகளின் குரலை அடையாளங் காட்டி நிற்கின்றன.

எண்பதுகளில் வெளிவந்த கொழுந்து இதழ்களின் அட்டைகளைப் பொறுத்தவரை, இலக்கியத்தினூடாக மலையகத்துக்குப் பணியாற்றிய மறைந்த என். எஸ். எம். ராமையா

மற்றும் கே. கணேஷ், சக்தி ஆ. பாலையா, தொழிற்சங்க ரீதியாகப் பணியாற்றிய கோ. நடேசையர் அவர்களின் உருவப்பட ஓவியம், தொழிலாளர் வர்க்க சிந்தனையுடன் பணியாற்றி கொல்வின் ஆர். டீ சில்வா ஆகியோரின் உருவப் படங்களும் ராஜசேகரனின் கொழுந்து பறிக்கும் பெண்மணியின் நவீன ஓவியமும் பதிவாகியிருக்கின்றன.

கொழுந்தின் கட்டுரைகளில் கணிசமானவை மலையகத்தின் முன்னேற்றத்துக்குழைத்த நடேசையரை இன்றைய தலைமுறையினருக்கு மீளறிமுகம் செய்து சரியாக இனங்காணும் வகையில் எழுதப்பட்டுள்ளன. மலேசியத் தமிழ்க் கவிதை பற்றிய ஒரு கட்டுரை மீள் பிரசுரம் செய்யப்பட்டு அத்தோடு என்.எஸ்.எம். ராமையாவின் திரும்பிப் பார்க்கிறேன் கட்டுரை ஏழாவது இதழில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றது. கே.எஸ். சிவக்குமாரின் மலைகளிடையே மூட்டம் கலைகிறது கட்டுரை மலையக இலக்கியப் பங்களிப்பை ஆராய்வதாக அமைந்துள்ளது.

க.ப.லிங்கதாசனின் காத்தமுத்துக் கங்காணி நடைச்சித்திரமும் கொழுந்து இதழ்களில் இடம் பிடித்த சிறந்த அம்சமாகும்.

அதே போன்று க. அருணாசலம் அவர்களின் மலையக மக்கள் வரலாற்றுக் கட்டுரைத் தொடரும் சாரல் நாடனின் கட்டுரைகளும் கொழுந்துக்கு கனதியை கொடுக்கின்றன.

மொழிவரதன், கங்குலன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மலரன்பன், மல்லிகை சி. குமார் ஆகியோரின் சிறுகதைகள் கொழுந்து இதழ்களில் இடம்பெற்று மலையகத்தின் படைப்பிலக்கிய செழுமையை விசாலிக்கின்றன. அத்தோடு நமது சிங்கள சகோதர எழுத்தாளர் கருணா பெரேரா எழுதி இருண்டவானம் சிறப்புச் சிறுகதையாக முதலாவது இதழில் இடம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.

குறிப்பாக சொல்லப் போனால் மலையக சிறுசஞ்சிகை வரலாற்றில் கொழுந்துக்கு தனித்துவமான அந்தஸ்து இருப்பதை எண்பதுகளில் நிருபித்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் அணி பேதம் பாராமல் பல புதிய அறிமுகங்களையும் தந்திருக்கின்றது.

## ப்ரிய நிலா

ஏ.எஸ்.எம். றம்ஜானை ஆசிரியராகக் கொண்டு 1987 இல் தனது பயணத்தை நிதானமாக ஆரம்பிக்கின்றது. ப்ரிய நிலா மாவனல்ல உயன்வத்தவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகை எளிமையானதும் தன்னடக்கமானதுமாகும். ப்ரிய நிலாவின் எல்லா இதழ்களும் புதிய படைப்பாளர்களுக்கு களம் வழங்குதல், பழைய எழுத்தாளர்களை கௌரவித்தல் என்ற இரு அம்சங்களில் சிரத்தையாக செயற்பட்டிருக்கிறது.

முஸ்லிம் கிராமத்திலிருந்து இச்சஞ்சிகை வெளிவந்தாலும் மலையக எழுத்தாளர்கள் அனைவரையும் அரவணைக்கும் போக்கு பாராட்டத்தக்கதாக அமைகின்றது. இதன் அட்டையில் கோமஸ், சிவம், அந்தனி ஜீவா போன்ற சிரேஷ்ட எழுத்தாளர்களின் புகைப்படம் இடம்பெறுவதோடு அவர்கள் பற்றிய குறிப்புக்களும் இடம் பெறுகின்றன. 1994 ஜுன்.்.ஆகஸ்ட் இதழில் க.ப. சிவம் பற்றி வெளியான குறிப்புக்கள் கலாநிதி. துரைமனோகரன், சாரல்நாடன், ஐ.ஏ. ரஸ்ஸாக், சீ. நடராஜா, அந்தனி ஜீவா முதலானோரால் எழுதப்பட்டிருப்பது அவர் குறித்து முக்கிய ஆவணமாக அமைகின்றது. 24 பக்கங்களே இதன் வழமையான இதழ்கள் தாங்கியிருந்தாலும் அவற்றில் பல்வகைப்பட்ட தகவல்கள், படைப்பிலக்கியங்கள், விமர்சனங்கள், கல்விக் கட்டுரைகள், சமூக சேவையாளர் அறிமுகங்கள் என்பன இடம்பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தொடர்ந்தும் வெளிவரும் ப்ரிய நிலாவின் பாதையில் அவதானிக்கக்கூடிய மற்றுறொரு முக்கிய அம்சம் அதன் ஆண்டு

மலர்களாகும். 1988 இல் வெளிவந்த முதலாம் ஆண்டு மலர் திக்வலை ஸப்வான், அல்-அஸுமத் ஆகியோரின் காத்திரமான சிறுகதைகளைக் கொண்டிருக்கின்றது. இரண்டாம் ஆண்டு மலரில் மலையக அரசியலும் தொழிற்சங்கமும் என்ற சாரல் நாடனின் கட்டுரை தொழிற்சங்கப்பணியின் உன்னதம் குறித்து சிலாகித்து மலையகம் குறித்து நோக்குகின்றது. திக்வல்லை கமால், அல்-அஸோமத் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

தொகுத்து நோக்கும்போது, ப்ரியநிலா ஆசிரியர் ரம்ஜான் மலையக இலக்கியம் எனும்போது அது மலையகத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் பங்களிப்பினால் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற ஆதங்கம் உந்த தளராத முயற்சி செய்தவராக இருந்திருக்கின்றார் என்பதைக் காட்டுகின்றது. அந்த வகையில் அவரின் முயற்சி வெற்றி குறித்து அவர் கூறும் கருத்துக்கள் முக்கியத்துவம் உடையனவாக இருக்குமெனலாம்.

தற்போது கண்டியிலிருந்து தி. ஞானசேகரனை ஆசிரியராக கொண்டு ஞானம் என்ற இலக்கிய சஞ்சிகையும், மாத்தளைக்கு அருகில் உள்ள உக்குவளையிலிருந்து ஆஷிப் ஏ. புஹாரி, உக்குவளை அக்ரம் ஆகிய இருவரின் முயற்சியால் ப்ரவாகம் என்ற சஞ்சிகையும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

# ஐம்பதுகளுக்குப்பின் இலங்கையில் தமிழ்க்கவிதை இலக்கியம்

தீவிரசமூக சிந்தனைகளை கவனத்தோடும் அர்த்தத்தோடும் கவிதைக்குள் பிணைத்த இந்நூற்றாண்டின் முதற் கவி மகாகவி பாரதியோடு சமாந்திரமாக இலங்கையில் அடையாளங்காணப் பெறும் பாவலர் துரையப்பாப்பிள்ளையோடு திருப்பமடையும் இலங்கை கவிதைத் துறை, ஐம்பதினை அண்மிக்கும் போது செழுமையான கவிதா ஆளுமைகளாக விபுலானந்த அடிகள், சோமசுந்தரப் புலவர், புலவர்மணி பெரியத்தம்பிப்பிள்ளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பண்டிதர் சச்சிதானந்தன், முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி என் போரைத் தந்து நிறைவான அடைவினை காட்டுவதாக இருக்கின்றது.

தமிழகத்தின் இலக்கிய போக்குகளில் நிகழும் மாற்றங்கள்

உடனுக்குடன் இலங்கையிலும் உணரத்தக்க அளவில் அல்லது உகந்த அளவில் பிரதிபலிக்கின்றமையை எண்பதுகள் வரையிலும் கண்டிருக்கின்றோம். மணிக்கொடியோடு தோன்றிய இலங்கையில் மறுமலர்ச்சி பழைய செய்யுள் மரபில் நவீன கவிதைக்குரிய இயல்புகளை உருவம் உள்ளடக்கம் நடை என்பவற்றில் புகுத்துகின்றது. அதன் வழி வரதர், சோதி விஜயன், தங்கம் முதலான ஈழத்து புதுக் கவிதை மரபினர் நாற்பதுகளின் நடுவில் தோன்றி விடுகின்றனர்.

ஆக நாற்பதுகளிலேயே இலங்கைத் தமிழ்க் கவிதை இலக்கியம் முக்கிய பரிமானங்களை எட்டியதாக இருக்கின்றது. இதன் வளர்ச்சி 1948ஆம் ஆண்டு இலங்கைக்கு கிடைத்த சுதந்திரத்தோடு ஓர் எழுச்சி நிலையை காட்டி புது பாதை காட்டுமென எதிர்பார்த்திருந்தால் அவ்வாறான எதுவும் நிகழ்ந்தமைக்கான தடயங்கள் எதுவும் தட்டுப்படவில்லை.

இதனாலேயே அப்போது நமக்கு கிடைத்த சுதந்திரமென்பது இந்தியாவுக்கு கிடைத்தமை போன்ற அர்த்த புஷ்டியானதல்ல என கூறும் கூற்று மெய்யப்படுவதாகின்றது. முற்றிலும் அந்நிய செல்வாக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட உணர்வைச் சுதந்திரம் தரத்தவறி வீட்டிருந்தது.

ஆனால் 1956ஆம் ஆண்டில் ஏற்பட்ட தேசியம் தொடர்பான எழுச்சி இலக்கியதில் முக்கியமாக சிங்கள இலக்கியங்களிலும் கணிசமான அளவு தமிழ் இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றது. இந்த தேசியம் தொடர்பான சிந்தனையை இயக்க ரீதியில் எழுத்துத் துறைக்குள் பொருள் பொதிந்த முறையில் வெளிப்படுத்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாடுகள் கவிதைத் துறையிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தது என்பதை தெளிவாக அறியக்கூடியதாக இருக்கின்றது. எனவே இலங்கை தமிழ் கவிதை இலக்கியத்தின் விழிப்புணர்ச்சிக் காலமாக இதனைக் கருதலாம்.

பாரதிக்கு பின் தமிழ்க் கவிதைக்கு புது அர்த்தங் கொடுத்த பெருமையை இதற்குப் பின்னரே இலங்கை பெற்றுக் கொள்வதாகின்றது. ஏனெனில் சமகால அன்றாட வாழ்வினை ஆதாரசுருதியாகக் கொண்டு சமுதாய வாழ்வின் சகல முனைகளையும் முனைப்புகளையும கலாபூர்வமான பதிவாக்குகின்ற கவிதைகள் இலங்கை கவிதை வரலாற்றின் புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கின்றன.

சமூகப் பொருளாதார அடிமைத்தளைகளால் பிணைக்கப் பட்டிருக்கின்றமை குறித்தும் தீண்டாமை, போலி ஆசாரம் முதலானவை மறுமதிப்பீட்டுக்கு ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியங் குறித்தும் கவிதைகள் பேச தொடங்குகின்றன. இவ்வாறு உள்ளடக்கச் செறிவில் ஏற்பட்ட மாற்றங்களோடு பேச்சோசை கொண்ட வசனத்தின் உச்ச நிலைமையே செய்யுள் என்பதை புரிந்து கொண்டு வடிவம் தொடர்பான புதிய அழுத்தம் ஏற்படுவதும் இக்காலத்தேதான் நிகழ்கின்றது. இதன் போது முகிழ்த்த கவிஞர்களை நவீன தமிழ்க் கவிதைகளின் முன்னோடிகள் என அழைக்கலாம்.

இன்னின்னவை தாம் கவி எழுத
ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர்; கோவை கடல்
மின்னல் முகில் தென்றலினை
மறவுகள்; மீந்திருக்கும்
இன்னல் உழைப்பு -ஏழ்மை உயர்வு
என்பவற்றைப் பாருங்கள்

எனப் பாடிய மஹாகவி அவ்வகையில் தலையான மகாகவி இன்றைய ஈழத்து கவிதைக்கு தனித்துவமான அம்சபங்களிப்புக்களை வழங்கியுள்ளார் . பாரதிக்குப் பின்

பாரதிதாசனை மேவியெடுத்த தமிழ்க் கவிஞர்களில் ஒருவராக அவரைப் போற்றுதல் அவசியம் மஹாகவிக்கு அடுத்ததாக இப்பகுதியில் முருகையனிடமும் நீலாவாணனிடமும் இத்தகைய பண்புகள் பெரிதும் காணப்படுகின்றன .நமது சமகால வாழ்வில் ஏற்பட்ட அகப்புற தாக்குதல்கள் சமுதாயத்தை பல வாறாக பாதிக்கும் விதத்தை புதிய பார்வையில் சிந்திக்கும் முருகையனின் கவிதைகளும் கிராமிய வரையறைக்குள் மக்களின் சிந்தனை கோலங்களை தரும் நீலாவாணனின் பாடல்களும் மிகவும் முக்கியமானவை. இவர்களைத் தவிர நாவற்குழியூர் நடராசன், தான் தோன்றிக் கவிராயர், புரட்சிக் கமால், அண்ணல், வேந்தனார், ஆ. ந. கந்தசாமி, இ. சிவானந்தன் என்பவர்களும் அறுபதுகளின் வளமான ஈழத்து கவிதை இலக்கியத்துக்கு அனுசரணையாக திகழ்ந்திருந்தார்கள்.

இத்தருணத்தில் இலங்கையில் தமிழ் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த பிரிதொரு கவிஞர் கூட்டத்தையும் சுட்டி ஆக வேண்டும். தமிழக திராவிட இயக்க செல்வாக்கு கவிதைகளில் பிரதிபலித்தது போல இலங்கையில் முனைப்புற்றிருந்த தமிழர் உணர்வு வலுவடைந்து பிரச்சார தன்மை மிகுந்ததாகி கவிதைகளுக்குள் பிரதிபலிப்பதாக இருந்தது. காசி ஆனந்தன், பரமஹம்சதாசன், கரவைக் கிழார் எனப்பலர் தமிழ் உணர்வு பேசத்தக்க உணர்ச்சி மயமான ஓசைப்பாங்கான கவிதைகளை ஏட்டிலும் அரங்கிலும் மக்கள் முன் வைத்தனர். ஆனால் இது இலங்கையின் கவிதைப்போக்கை தீர்மானிக்கும் அளவுக்கு வலுவுள்ளதாக இல்லை என பல ஆய்வாளர்கள் கூறி இருந்த போதும் எண்பதுகளை அடுத்து தோன்றி இருந்த கவிதைகளில் இதன் செல்வாக்கு இல்லை என திட்டமாக கூறமுடியும்.

பொருளாதார பின்னணி காரணமாகவும் புவியியல் வரையறை காரணமாகவும் ஏனைய தமிழர்களை விட வித்தியாசமான வாழ்வியலைக் காட்டும் மலையகத் தமிழரிடமும் தோன்றி இருந்த கவிதை பாரம்பரியமும் இக்கட்டத்தே எழுச்சி பெற்றமையும் பிற கவிஞர்களோடு தம்மை தேசியம் தொடர்பான

சிந்தனையில் ஐக்கியப் படுத்திக் கொள்ள முனைதலையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. எஸ்.எஸ். நாதன், பெரியசாமி, பெரியம்பிள்ளை, கோவிந்தசாமி தேவர் முதலானோர் தோட்டத் தொழிலாளர்களின் பல்வகையான பிரச்சினைகளையும் தொட்டு ஆக்ரோசமான கவிதைகளைப் படைத்து கவிதை இலக்கியத்தை பேணி இருக்க அறுபதுகளில் ஆங்கிலத்தில் கவிதை எழுதிய வேலுப்பிள்ளை அவர்களும் குறிஞ்சித் தென்னவன், குமரன், சக்தி பாலையா, தமிலோவியன், சீ.எஸ். காந்தி, ஈழக்குமார், வழுத்தூர் ஒளியேந்தி, உடுதெனிய ஒளிவண்டு என பலர் மலையகத்துக்கான கவிதை இலக்கியத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

அறுபதுகளின் பிற்பகுதியில் மஹாகவி, முருகையன் கவிப்பணி வழியில் மற்றுமோர் தலைமுறையினர் தோன்றி தனித்துவம் மிக்கவர்களாக அவர்களோடு இணைகின்றார்கள். எம். ஏ. நு:்மான், சண்முகம் சிவலிங்கம், மு. பொன்னம்பலம், தா. ராமலிங்கம் முதலிய அறுபதுகளின் தொடக்கத்தில் கவிதை உலகில் புகுந்து அறுபதுகளின் பிற்பகுதியில் கவிதைகளில் பிரகாசிப்பவர்களும் புதுவை ரத்தினதுரை, சடாற்சரன், ஜீவா ஜீவரட்ணம், காரை சுந்தரம்பிள்ளை, வி. கந்தவனம், ச.வே. பஞ்ஞாட்சரம், சொக்கன், சீ. சிவசேகரம், அ. யோகராசா, சோ. பத்மநாதன், கருணையோகன், ஆகசி கந்தசாமி, சுபத்திரன், பா. சத்தியசீலன், பண்ணாமத்து கவிராயர், எம்.எச்.எம். கமல், வ.ஐ.ச ஜெயபாலன், பார்வதி நாதசிவம், மருதூார் கனி, அன்பு முகைதீன், சாருமதி, ஈழவாணன் என ஒரு பரந்த கவிஞர் வட்டத்தினை 60 இன் இறுதியில் 70 இன் தொடக்கத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்கூறியவர்களின் கவிதை ஆளுமைகள் தனித்தனியாக நோக்கப்பட வேண்டியன என்றாலும் ஒட்டு மொத்தமாக அவர்களின் நிலைப்பாடுகளை கவனத்தில் கொள்ளுவோமாயின் சாதியம் - சீதனம் - கல்வி - இளைஞர் நிலை வர்க்க முரண்பாடு முதலியன பல்வேறு கோணங்களில் அலசப்படுத்தும் கவிதை வார்ப்பில் பிரதேச சொல்லாட்சிகளும் பாட்டு அம்சங்களும் இயல்பாக அமைதலும் சமூக பலவீனங்களை எள்ளல் சுவையோடு கிண்டல் செய்தலும் வெகுவாக அவதானிக்கக்

கூடியதாக உள்ளது. இதுவே அவர்களுக்கென காத்திரமான விரிந்த வாசகர் வட்ட உருவாக்கத்திற்கும் காரணம் எனலாம்.

இவ்வாறு சென்று கொண்டிருந்த இலங்கை தமிழ் கவிதைத் துறை எழுபதுகளின் நடுப்பகுதியில் பிரிதொரு மாற்றத்தை காட்டுவதாக உள்ளது. பேராசிரியர் க. கைலாசபதி சொல்வதாக கவிதைக்குள் அரசியல் நுழையும் மூன்றாம் காலகட்டம் தொடர்பான மாற்றத்தை இங்கு அவதானிக்க கூடியதாக உள்ளது. இப்பகுதியில் அத்தகைய போக்கு தோன்றி எழுச்சி பெற்ற வானம்பாடி கவிதா இயக்கம் காரணம் ஆகின்றது. வானம்பாடிகளைப் போல் இலங்கையிலும் கவிதையை அடியோற்றி எழுந்த இயக்கங்களை தென்னிலங்கை பகுதிகளில் அவதானிக்க கூடியதாக இருந்தன. இவ்வகை இயக்கங்கள் ஊடாகவும், சுயாதீனமாகவும் கவிதை தாகமுற்ற இளைஞர்களும் யுவதிகளும் வெளித்தெரியலாயினர். ஏராளமான கவிஞர்கள் இக் காலகட்டத்தில் தோன்றினர் எனினும் அன்பு ஜவகர், ஜவாத் மரக்காயர், கலைவாதி கலீல், தில்லையடிச் செல்வன், திக்வலை கமால், மேமன்கவி, செந்தூரன், நல்லை அமிழ்தன் போன்றவர்கள் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களில் சிலர்.

சுவடுகள், போலிகள், அறுவடை, விடிவெள்ளி, எலிக்கூடு, சமுதாய வீதியிலே, காவிகளும் ஒட்டுண்ணிகளும், யுகராகங்கள், கனவுப்பூக்கள் முதலான கவிதைத் தொகுப்புகளும் மல்லிகை, குமரன், அக்கினி, தாயகம் போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகளும் இக்காலகட்டத்தினை தெளிவாக காட்டக்கூடியன. இவ்வகை கவிதைகள் மிக அழுத்தமான பதிவையும் உணர்வுகளையும் இலங்கைக் கவிதைத் துறையில் ஏற்படுத்தி இருப்பதால் ஒரு நீடித்த போக்காக இராமல் எழுபதுகளின் பிற்பகுதியிலே மலிந்த சுலோகத் தன்மை, எதிர்காலம் குறித்த நம்பிக்கை தொனி ஆகியவை அதிகமாக ஊடுருவி ஏற்படுத்திய சலிப்பு வடிவாக்கம் செய்கின்றதாகின்றது.

23.02.1975 தினகரனில் செ. யோகராசா கூறியது இவ்விடத்தில் ஞாபக மூட்டிக் கொள்வதற்கு பொருத்தமானதாகும்.

ஏதோ ஒரு விதத்தில் சமுதாய குறைப்பாடுகளைப் பரந்துப்பட்ட ரீதியில் பிரதிபலிக்கின்ற புதுகவிதைகளே மிகுதியாக வெளிவருகின்றன . ஆயினும் பெரும்பாலான புதுக்கவிதைகளை நோக்கும் போது இச்சமூதாய நோக்கு அவ்வளவு தூரம் ஆழமாகவும் பிரஞ்ஞை பூர்வமாகவும் புதுக்கவிதையில் கையாளப்படுகின்றதென்று கூறுவதற்கில்லை .

மேற்கூறிய வானம்பாடித்தனமாக கவிதைப் பெருக்க காலத்திலும் முருகையன் எம்.ஏ.நு∴மான் சண்முகம் சிவலிங்கம் வ.ஐ.ச. ஜெயபாலன் வில்வரட்ணம் சி. சிவசேகரம் முதலானோர் அவற்றுள் ஆட்படாமல் பொறுமையாகவும் நிதானமாகவும் இலங்கைக்கான கவிதைப்பாரம்பரியத்தை வளர்த்தெடுப்பதில் காட்டிய அக்கறையின் முக்கியத்துவம் எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் தொடக்கத்திலும் தெளிவான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றதெனலாம். சேரன் உள்ளீட்ட புதிய தலைமுறையினரிடம் இதனைக் காணலாம் . இத்தலை முறையினரோடு சமாந்திரமாக முன் கூறியவர்களும் இன்று வரை கவிஞர்களாக இயங்கி வருகின்றார்கள் என்பதும் குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

அவ்வாறான தொடர்ச்சியே தமிழகத்தை விட்டு தன்னடயாளங்களோடு வேறுபடும் இலங்கை கவிதைகள் சர்வதேச தரத்தை நோக்கி நகர்வை காட்டுவதற்கு அதன் வளர்ச்சி போக்கோடு தமிழ் தேசிய வாதத்தை மையப்படுத்திய விடுதலை நோக்கும் அனுசரணையாகின்றது. இங்கு தமிழ் முதலிய வாத சிந்தனை தொடர்பான தொனிகள் கவிஞர்களுக்கு கவிஞர்கள் கையாளப்படும் தன்மையில் தூய நிலை பிரச்சார நிலை மாக்சிய அணுகு நிலை விமர்சன நிலை என பன்மைப்படுகின்றது.

தமிழ் தேசிய வாதக் கண்ணோட்டம் நவீன கவிதைத் துறையில் 1974 ஆம் ஆண்டின் நிகழ்வையொட்டி அ. யோகராசா வடித்த கவிதையோடு நுழைகின்றது. 1977 -1983 ஆண்டு நிகழ்வுகளின் நிர்பந்தங்களால் பரவலான தமிழர் நிலை பற்றி கவிதைகள் பேசத் தொடங்கி இனவாதக் கவிதைகள் என புறந்தள்ள முடியாத நிலைக்குள்ளாகி விட்டது. இக்கட்டத்தில் எம்.ஏ. நுஃமானின் பாலஸ்தீன கவிதைகளின் மொழிப் பெயர்ப்பு முதலான பிறநாட்டு போராட்ட கவிதைகளின் முன்மாதிரி வெகுவாக ஆகர்ஷிக்கப் பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாம் சூர்யோதயம், மரணத்துள் வாழ்வோம் எண்பதுகளின் கவனத்தை இந்த வகையில் ஈர்த்தன. சேரன், இளவாலை விஜேந்திரன், சபேசன், ஹம்சத்வனி, புதுவை இரத்தினதுரை, வாசுதேவன் முதலானோர் இவ்வகையில் பெரிதும் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர்.

எண்பதுகளில் நவீன புதுக் கவிதைத் துறை வீறு கொண்டெழுந்து வளர்ச்சியடைந்தது உண்மையெனினும் மரபுக் கவிதைகளில் மாறாத காதல் கொண்டு இயங்கியவர்களும் உள்ளனர். செ. குணரத்தினம், அகளங்கன், ஜின்னா செறிபுதீன் போன்றோர்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

வடக்கு கிழக்கு தவிர்ந்து ஏனைய பிரதேசங்களில் உணரப்பட்டநிலை அல்லது நிலவிய நிலை வித்தியாசமானது. எனவே அங்கிருந்து தோன்றிய கவிஞர்களின் படைப்புகள் அவ்வகையில் நோக்கும் போது பிரதேசத் தனித்துவம் கொண்டவைகளாக இருப்பது அவதானிக்கப்படுகின்றது. இன்னும் சொல்லப் போனால் எண்பதுகளை அண்மித்த காலத்திலேயே பிரதேச தனித்துவத்துக்கான கவிதை வளர்ச்சிக்கு அத்திவாரமிடப்படுகின்றதெனலாம் கிழக்கிலங்கையில் சோலைக்கிளி, பாறூக் போன்றவர்களும் மலையகத்தில் வண்ணச்சிறகு சிவானந்தன், வீராபாலச்சந்திரன், இஸ்மாலிகா, அல் அசோமத் தொடர்ச்சியில் மல்லிகை சி. குமார், சு முரளீதரன்

முதலானோரும் இவ்வகையில் சற்று ஆழமாக மதிப்பீடு செய்யப்பட வேண்டியவர்களாகினர். தலைநகர்ப் பகுதியில் மேமன்கவி தனித்துப் பிரகாசிக்கும் ஒருவராக விளங்குகின்றார். இச்சந்தர்ப்பத்திலே பெண் எழுச்சி கவிதைகளில் உரத்து தெளிவாக ஒலிக்கும் கட்டமாகவும் எண்பதுகள் அமைவது குறிப்பிடப்பட வேண்டியதாகின்றது. பெண்கள் தொடர்பாக இயங்கும் அரசு சார்பற்ற நிறுவங்களினதும் இயக்கங்களினதும் அரவணைப்பு மழுங்கி போயிருந்த பெண்களுக்கு கிடைத்தது வர பிரசாதமாக கருதப்பட வேண்டியதாகின்றதா என்பதை உரசிப் பார்க்க வேண்டியதாக இருந்தாலும் சிவமணி, அருந்த்தி, வாசுகி, கலைமகள் ஹிதாயா ஆகிய முதலானோரின் வரவு இலங்கை கவிதை இலக்கியத்துக்கு வளமான வரவாக கருதப்படுகின்றது.

எண்பதுகளில் காணப்பட்ட மற்றுமொரு அம்சம் கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, பாணந்துறை, மாவனெல்ல, குருத்தலாவ, கண்டி, புத்தளம், கிண்ணியா முதலான பகுதிகளிருந்து சிறு சஞ்சிகைகள். ரோணியோ இதழ்கள் பெருக்கெடுத்து அதனூடாக கருத்தாளங்கொண்டவர்கள் கவிதை உலகில் பிரவேசித்தலாகும். இதழ்கள் உருவாகிய வேகத்தில் அமிழ்ந்து போனாலும் இவ்வழியிலும் இப்னு அஸ்மத், ஈழக்கணேஷ், உஸ்மான் மரிக்கார், நிதானிதாசன், தமீம், மைக்கல் கொலின் என குறிப்பிடக் கூடிய பலர் இன்றும் வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மேற்கூறப்பட்ட எண்பதுகளில் கவிதை இலக்கிய குணாம்சங்களை கூறினாலும் இவற்றையெல்லாம் மேவுவதாக ஒரு அலை வீசி கவிதைத் துறையில் ஒரு திருப்பத்தை உருவாக்கியது. அது புலம் பெயர்ந்து சென்று புகலிட இலக்கிய ஏடுகள் ஊடாக வெளிவந்த கவிதைகளாகும். இலங்கையில் பிரபல்யமான கவிஞர்கள் பலர் புலம் பெயர்ந்து சென்றதும், புலம் பெயர்ந்து சென்ற பின் கவிஞர்களானவர்களும் குறுகிய காலப் பகுதிக்குள் குறிப்பிட்டு சொல்லும் படி பாரிய மாறுதலேற்படுமளவிற்கு கவிதை துறைக்கு ஆற்றிய பங்களிப்பு

தமிழகத்து நவீன கவிதை துறையை விட இலங்கை நவீன கவிதை துறை பேசப்படலாயிற்று. தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் இலங்கைக் கவிதைகள் குறித்து கவனங்கொள்வதாகிறது.

எனவே தொண்ணூறுகளில் நுழையும் போது இலங்கை தமிழ் கவிதைக்கு ஒரு புது பாரம்பரியம் தென் பட்டு அதன் வழி செல்வதாகின்றது. நட்சத்திரன் செவ்விந்தியன், ஆத்மா, இளைய அப்துல்லா என தொண்ணூறுகளில் இவ்வம்சம் தென்படத் தொடங்குகின்றது. அத்தோடு விடுதலைப் போராட்ட களத்தின் கவிஞர்களும் களத்துக்கு வெளியே (கொழும்பு புலம் பெயர் நாடுகள்) உள்ள கவிஞர்களும் பிரதேச தனித்துவங்களுக் கேற்ப உருவான கவிஞர்களும் சங்கமிக்கும் காலமாக தொண்ணூறுகளின் முற்பகுதி விளங்குகின்றது. இதிலே குறிப்படக்கூடிய அம்சம் ஐம்பதுகளிருந்த கவிதை பணியை ஆரம்பித்தவர்களும் இன்றும் தொடர்ந்து கவிதை உலகில் செயற்பட்டிருக்க வளமான புதிய வரவுகளும் அவர்களோடு இணைந்து கொள்வதை காணமுடிகின்றது .

அடுத்து நூற்றாண்டுக்குள் நுழைவதற்கு இலங்கை தமிழ்க் கவிதை தன்னை தயார்படுத்திக் கொள்வதற்காக இருக்கும் கால இடைவெளி குறுகியது. அதனை சாதித்துக் கொள்வது சாத்தியமானது என்றாலும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

புதுமை இலக்கியம்
சிறப்பு மலர்
1997

# மலையக இலக்கியத்தின் இரு கூறுகள்

இன்று மலையக இலக்கியமென்பது தனித்துவமான அம்சங்களை தன்பால் கொண்டிருப்பதன் காரணமாக ஏனைய பிராந்திய இலக்கியங்களினின்று வேறுபட்டு நிற்கின்றது. ஆனால் மலையக தமிழ் இலக்கியமெனக் கொள்ளப்படும் போது அதில் பெருந்தோட்ட தொழிலாளர்களை முன்னிலைப்படுத்தும் படைப்புகளும் அதனோடு உள்ளடக்கப்பட வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பது அங்கிகரிக்கப்பட்டுவிட்டது.

தமிழ் இலக்கிய பரப்பில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மென்பது எவ்வாறு தனிப்படுத்தப்பட்டு ஒரு கூறாக நோக்கப்படுகின்றதோ அதைப் போல மலையகத்தமிழ் இலக்கியத்திலும் தோட்டப்புற, முஸ்லிம் மக்களின் இலக்கியங்களுக்கிடையில் வேறுபடும் சில அடிப்படை அம்சங்களை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

வடக்கு கிழக்கு மக்களின்று மலையக தமிழ் மக்கள் வேறு பட்ட பாரம்பரியத்தையும் வாழ்வியல் அம்சங்களையும் கொண்டிருப்பது இலக்கியத்தையும் தனிப்படுத்த காரணமாக இருப்பது போல மலையக தமிழ் முஸ்லீம் மக்களின் இலக்கியங்கள் வகைப்படுத்தப்படுவதற்கும் இவைகளே காரணமாகின்றதெனலாம். சிறுபான்மை இன மக்களாக சில பொது பிரச்சனைகளுக்கு

முகங்கொடுக்க நேர்ந்தாலும் தோட்ட தொழிலாளர்கள் குறைந்த கூலிக்காக கூடிய உழைப்பைக் கொடுத்து அறியாமை, வறுமை என்பனவற்றால் அல்லலுற்று சொந்த குடியிருப்புகளற்று பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் மட்டுமே தங்கியவர்களாக காணப்படுகின்றார்கள். இவர்களுக்கு சமமான ஒரு குழுவினரை இலங்கையில் எப்பகுதியிலும் காணமுடியாமலிருக்கின்றது. எனவே இவர்களை மையமாகக் கொண்ட சிருஷ்டிகள் மலையகத்தவர்களே படைக்கப்பட்டாலென்ன வேறு பிரதேசங்களை சார்ந்தவர்களால் படைக்கப்பட்டாலென்ன அவற்றின் தொனிப்பொருட்கள் கீழ் வருவனவாகவே பெரும்பாலும் இருக்கும்.

1. கூடிய உழைப்பும் வறுமையும்
2. அறியாமையால் தோன்றும் இழி நிலைகள்
3. தொழிலாளவர்க்கமாக கருதப்பட்டு முதலாளித்துவத்தின் சுரண்டல்
4. சிறுபான்மை இனமாக நோக்கப்பட்டு பேரினவாதிகளின் ஒடுக்கல்
5. இனம் பிரதேசம் பிரஜாவுரிமையற்றமை முதலான காரணங்களால் புறக்கனிக்கப்படுதல்
6. போலித் தலைமைகளால் பிழையாக வழிநடத்தப்படுதல்

இரு தசாப்தங்களுக்கு முன்னர் உலக தொழிலாளர்களே ஒன்றிணையுங்கள் என்ற கோஷத்தை முன்வைக்கும் எழுத்தாளர்களினால் மலையக இலக்கியம் புது மெருகு பெற்று வளர்ச்சி அடைந்து வந்தாலும், அடுத்தடுத்து நிகழ்ந்த இனக் கலவரங்கள் சில எழுத்தாளர்களிடம் மாற்றங்களை ஏற்படுத்தி இனக்கலவரத்தை நிரூபிக்கும் வகையில் வடபிரதேச சாயல் படிந்த பெருந்தோட்ட தமிழ் தொழிலாளர்களை மையமாகக் கொண்ட ஆக்க இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினார்கள்.

இன்று அனைத்து தொழிலாளர் ஒற்றுமைக்கு வழிவகுக்க இத்தொழிலாளர்களையும் தயார் செய்யும் படைப்புகள் எழாமல் இல்லை. இந்த இரு வகைக் கொள்கை கொண்டவைகளில்

ஆதிக்கம் பெறப்போவது எதுவென தீர்மானிப்பதில் அரசாங்கமும் பெரும்பான்மையின மக்களும் முக்கிய பங்கை எதிர்காலத்தில் வகிக்கப்போகின்றார்கள்.

மலையக முஸ்லீம் மக்களில் சிறு பகுதியினரே பெருந் தோட்டத் துறையில் தொழிலாளர்களாக பணிப்புரிகின்றார்கள். இவர்கள் இந்திய முஸ்லிம்களாக இருப்பதும் இங்கு கருத்தில் கொள்ளத்தக்கதாகும். என்றாலும் இப்போது இவர்கள் இலங்கை ஏனைய முஸ்லிம் மக்களோடு ஐக்கியப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

மலையக முஸ்லிம் மக்கள் சார்ந்த இலக்கியம் பெருமளவில் எழுந்துள்ளது கல்ஹின்னை, மாவனல்லை, குருணாகல், அக்குறனை, கம்பளை, வெலிமடை, மடவளை முதலான முஸ்லிம் மக்கள் பெருமளவு செறிந்து தனித்துவத்துடன் வாழும் பகுதிகளிலிருந்தாகும். இங்கு வாழும் முஸ்லிம் மக்கள் நகர்மயப்படுத்தப்பட்ட சூழலுக்கண்மையில் பெரும்பாலும் வர்த்தக துறையோடு சார்ந்து தமக்கென உரிய குடியிருப்புகளை கொண்டும் இஸ்லாமிய வாழ்க்கை நெறியை மேற்கொண்டும் வருபவர்களாக இருப்பதால் முகங்கொள்ளும் பிரச்சினைகள் மலையக பெருந்தோட்ட மக்கள் முகங்கொள்வதிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. அவர்களின் புனைகதைகளும் கவிதைகளும் பெரும்பாலும் காட்டி நிற்கும் பிரச்சினைகளாக பின்வருவன காட்டப்படலாம்.

1. வறுமை - முஸ்லிம் மக்களிடையே இருக்கும் ஒரு பணக்கார சாராருக்கும் ஏழை முஸ்லிம்களுக்கிடையிலான வேறுபாடுகள்.

2. இஸ்லாமிய வாழ்க்கை நெறியை மேற்கொள்ளாது போலித் தனமாக வாழும் பெரிய மனிதர்களை அம்பலப்படுத்துதல்.

3. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களால் தோன்றும் தனி மனித குடும்ப சமூக பிரச்சினைகள்.

4. முஸ்லிம் மகளீர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

5. முஸ்லீம்கள் கல்வித்துறையில் எதிர்நோக்கும் சவால்கள்.
மேலுள்ள பிரச்சினைகள் மலையக மக்களிலும் இருந்தாலும் இவர்களின் அணுகு முறையும் பெரும்பாலான இஸ்லாமிய எழுத்தாளர்கள் இஸ்லாமிய வரைமுறையை பேணிக் கொள்ள வேண்டியதும் மண்வாசனை அல்லது யதார்த்தத்தை பிரதிபலிப்பதற்காக மொழி வழக்கில் காணப்படும் அரபுச் சொற்கள் (பெருந்தோட்ட தமிழ் மக்களுக்கு பரிட்சயமில்லாதவை) பிரயோக மென்ன இவ்விரு சாரர்களினதும் இலக்கியங்களை தனித் தனியே இனம்காண்பதற்கு காரணமாகவுள்ளது.

மலையக முஸ்லிம் எழுத்தாளர் பலர் பெருந்தோட்ட அவலங்களை கருவாகக் கொண்டு வெற்றிகரமான படைப்புக்களைத் தந்துள்ளார்கள், தருகின்றார்கள். ஆனால் தமிழ் எழுத்தாளர்கள் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு சிருஷ்டிகளை தந்தது மிகக் குறைவு. அல்லது இல்லையெனலாம். ஆனால் இவ்விருசாராரின் பொது பிரச்சினைகளை முன்னெடுத்துச் சென்று இலக்கியத்தை இயக்கமாக்கும் தனிக் குழு தோன்றாமைக்கு முஸ்லிம் பிரதேசங்களுக்கும் தோட்டப்பிரதேசங்களுக்குமிடையில் புவியியல் ரீதியில் தனிப்படுத்தலாக சிங்கள மக்களின் பிரதேசங்கள் அமைந்துள்ளமை ஒரு பிரதான காரணமாகக் கொள்ளலாம். ஆயினும் மலையக தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து பணியாற்றின் மலையக தமிழ் இலக்கியமென்ற பொது வகை தோன்றுவது சாத்தியமாக்கப்படலாம்.

அதுவரை எவ்வாறு தமிழ் இலக்கியப்பரப்பில் இஸ்லாமிய இலக்கியம் எனும் பகுதி காணப்படுகின்றதோ அது போல மலையக இலக்கியத்திலும் கூறுகளாக இரண்டும் நிலைத்திருக்கும்.

எது ஆரோக்கியமானது என்பதை காலம் தீர்மானிக்கும்.

ப்ரியநிலா-1989

# சமூக மாற்றத்துக்கான ஆசிரியத்துவமும் மலையகமும்

ஒரு துறையில் மற்றவரை பயிற்றுவிக்கும் பணியில் இருந்தோரே முற்கால தமிழ் இலக்கியங்கள் தோன்றக் காரணமாக இருந்திருக்கின்றனர் என்பதை உணர்த்த பல ஆதாரங்களைக் காட்டலாம்.

அதனால் தானோ என்னவோ இன்றும் கதையாசிரியர், நாடக ஆசிரியர், நூலாசிரியரென அழைக்கும் மரபு தமிழுக்கு மாத்திரமுரியதாகவிருக்கின்றது. இலங்கையிலும் தமிழ் இலக்கிய பாரம்பரியம் தோன்ற 'பண்டிதர்கள்' என அழைக்கப்பட்ட போதனைப் பணியில் ஈடுபட்டோர் முக்கிய இடத்தை வகித்திருக்கின்றனர்.

விபுலானந்த அடிகள், சோமசுந்தரப் புலவர், புலவர்மணி பெரியதம்பி பிள்ளை, பேராசிரியர் கணபதிபிள்ளை, முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி என்போர் கடந்த நூற்றாண்டின் தமிழ்க்கவிதையிலக்கியம் உன்னத இடத்தைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்த ஆசிரிய மணிகளாவர். இவர்களின் செயற்பாடு ஐம்பதுகளை அண்மிக்கும் போது, மிக உச்சமாக இருந்திருக்கின்றது.

இதனைத் தொடர்ந்து முன்னெடுக்கக் காரணமாக

இருந்தவர்களில் ஆசிரியர்கள முக்கியத்துவம் பெற்றவர்களாக இருந்திருக்கின்றார்கள். அவ்வகையில் மலையகத்தே ஒரு புதிய இலக்கிய பாரம்பரியம் ஏற்படுவதற்கு எவ்வாறு ஆசிரியத்துறை சார்ந்தவர்களின் பங்களிப்பு இருந்திருக்கின்றது என்பதை சற்று நோக்குவது, இன்று ஆசிரியர்களாக செயலாற்றுபவர்களுக்கும் இனியும் ஆசிரியர்களாக வரவிருப்பவர்களுக்கும் இலக்கியத் துறையில் பங்களிக்க உற்சாகமூட்டுமெனலாம்.

1833 இல் ஆங்கிலேயர் மலைநாட்டில் கோப்பிப் பயிற்செய்கையை ஆரம்பித்த போது இந்தியத் தமிழர்கள் அழைத்து வரப்பட்டு தொழிலுக்கு அமர்த்தப்பட்டார்கள். பின் தேயிலை பயிரிடப்பட்டது. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதார அமைப்பு மாற்றமுற்று, தேயிலைத் தோட்டங்கள் தேசிய வருவாய்த் துறைக்கு 66% ஈட்டிக் கொடுப்பதாக திகழ்ந்தன. இக்காலத்தில் கங்காணிமார்களே தொழிலாளர்களை ஆட்டுவிக்கும் சக்திகளாக இருந்தனர் அவர்களின் கொடுங்கோன்மையிலிருந்து விடுதலை பெற நடேசய்யர் ஆற்றியபணி அவர்களுக்கு தொழிற்சங்க பலத்தை ஏற்படுத்தியதோடு, அதன் தொடர்ச்சி இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் ஏழு பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் வண்ணம் அரசியல் பலத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் இந்திய வம்சாவளித் தமிழர்களின் இத்தகைய அரசியல் பலம் ஏற்படுத்திய அச்சுறுத்தல் அவர்களின் குடியுரிமை பறிப்புக்கு 1948 இல் காரணமானபோது, அவர்களின் வீழ்ச்சி நிலையும் ஆரம்பமானது. அதற்கு அடுத்து ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி குடியுரிமையுள்ளோரில் கணிசமானோர் மீண்டும் இந்தியா செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது. நாடற்ற நிலை, இனத்துவேச வதைகள், துரைமார்களின் அதிகாரத்துவம், வறுமை, கல்வியறிவு பெற வாய்ப்புக்களின்மை, சுகாதார மேம்பாடின்மை என பற்பல காரணிகளால் ஒடுங்கிப் போயிருந்த அம்மக்கள் குறித்து இலக்கியப்படைப்புக்கள் தோன்றுவதற்கு நாட்டார் பாடல்களைப்பின்பற்றி இவர்களின் அவல நிலை சொல்ல கவிராயர்கள் பலரை அக்கால மலையகம் கண்டிருந்தது.

பெரியாம்பிள்ளை, கோவிந்தசாமி தேவர், கா.சி. ரெங்கநாதன், பி. ஆர். பெரியசாமி, தொண்டன் நாதன், சிதம்பர நாத பாவலர், ஜில் போன்றோர் பெருங் கல்வியறிவு பெறாமல் இயல்பாகவே கவிதை சொல்லும் ஆற்றல் பெற்றோராகவும் தொழிற் சங்கப் பணிகளுக்கு ஆதரவாக இருப்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

இதனையடுத்துத் தோன்றிய இலக்கியப் பாரம்பரியத்தின் முன்னோடிகளாக ஆய்வாளர் சாரல்நாடன் குறிப்பிடும் மூவர் சி.வி. வேலுப்பிள்ளை, சக்திபாலஐயா, கே. கணேஷ் ஆகியோராவர். இவர்களில் ஆங்கில எழுத்துமூலம் மலையகத் தொழிலாளர்களின் அவல நிலையை உலகுக்கு எடுத்துச் சொன்ன சி.வி. வேலுப்பிள்ளை கல்லூரி ஆசிரியராக தனது தொழிலைத் தொடங்கி, பின் தொழிற் சங்க இயக்கத்துக்குள் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்.

கதை எனும் இலக்கிய சஞ்சிகையை நடத்தியதோடு, 'In Ceylon Tea Garden' எனும் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டார். இது சக்தி பாலஐயாவினால் மொழி பெயர்க்கப்பட்டு 'தேயிலைத் தோட்டத்திலே.....' எனும் நூலாக வெளிவந்தது. நாளிதழ்களில் சி.வி. பல தொடர் கதைகளை எழுதியிருந்தார். அவற்றில் 'வீடற்றவன்', 'இனிப்பட மாட்டேன்' என்பன நூலுரு பெற்றதோடு, 'வீடற்றவன்' கல்வியியற் கல்லூரிகளில் அண்மைக்காலம் வரை பாடநூலாக வைக்கப்பட்டிருந்தது. சி.வி. தான் வகித்த ஆசிரியர் தொழிலும் தொழிற்சங்க அனுபவங்களும் இப்படைப்புக்கள் எழக் காரணமாக இருந்திருக்கின்றதெனலாம். அவரைப் போலவே சக்தி பாலஐயாவும் கலையாசிரியராக வாழ்ந்து கொண்டிருப்பவர். எனவே மலையக நவீன இலக்கிய முன்னோடிகளில் இருவர் ஆசிரியர் துறை சார்ந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

மேற்குறிப்பிட்டவர்களின் பங்களிப்பையடுத்து, அறுபதுகளில் மலையகத்தில் தோன்றிய கற்ற தலைமுறையினர் மலையக

எழுச்சிக்கு பங்களிப்பதை தமது வாழ்வின் ஒரு கூறாக கொண்டிருந்தனர். ஆத்திரப் பரம்பரையென அழைக்கப்பட்ட இவர்களில் கணிசமானோர் ஆசிரியர்கள். இவர்களுக்கு தலைமை கொடுத்த பெருந்தகையாக ஹைலண்ட்ஸ் கல்லூரி ஆசிரியரும் அதிபருமான இர.சிவலிங்கம் திகழ்ந்தார். அவருக்கு அனுசரணையாக ஆசிரியர் திருச்செந்தூரன் திகழ்ந்தார். இவ்விருவரும் அமரராகிவிட்ட சூழ்நிலையில் அவர்கள் ஆற்றிய பெரும்பணியை மீட்டுகையில் மலையக ஆசிரியன் ஒவ்வொருவனும் பெருமிதமடைய வேண்டியதாகின்றது.

இர.சிவலிங்கம் 1960ல் ஆசிரியர் பி.டி.ராஜன் உள்ளிட்ட சிலரால் ஸ்தாபிக்கப்பட்ட மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கத்தில் இணைந்து பின் அதற்கு தலைமையேற்றார். அவரோடு ஆசிரியர் பதுளை பாரதி ராமசாமியும் நெருங்கி செயற்பட்டிருந்தார். மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், எழுபதில் மலையக இளைஞர் முன்னணி எனப் பெயர் தாங்கி தீவிர சமூக எழுச்சிப் பணியில் ஈடுபட்டது. அதன் விளைவாக மலையகத்தின் படித்த இளைஞர்கள் தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் சந்தர்ப்பம் மாற்றப்பட்டு அரசாங்கப் பாடசாலைகளில் நியமனம் பெறும் நிலைமை தோன்றிற்று.

அறுபதுகளில் உருவான ஆத்திர பரம்பரை எனச் சொல்லப்படும் இளைஞர் அணியை நோக்கினால் அதிலே ஆசிரியர்களே பிரதானமானவர்களாக இருந்தமையை கண்நோக்கத் தக்கது. தெளிவத்தை ஜோசப், ஏ.பி.வி. கோமஸ், பூபாலன், வாமதேவன், மு. சிவலிங்கம், மரியதாஸ், வி.டி. தர்மலிங்கம், தனராஜ், நவரட்ண, ராமலிங்கம், வேதாந்தமூர்த்தி, மொழிவரதன், மெய்யநாதன், கனகமூர்த்தி, நாகலிங்கம், நேசமணி, சரவணப்பிரகாசம், மாத்தளை வடிவேலன், முத்துவேல் என நீளும் பட்டியலில் அனைவரும் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் ஆசிரியர்களாக வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள். இவர்களில் பலர் மலையக இலக்கிய உலகத்துக்கும் பண்பாட்டு உருவாக்கத்துக்கும் தோள் கொடுத்துள்ளனர்.

எழுபதுகளின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல், சமூக நிலைகள், காரணமாக ஆசிரியர்களின் உயிர்த்துடிப்பான செயற்பாடு மந்தநிலையை அடைந்தது. அது 1983ல் மேலும் மோசமான நிலையை அடைந்து விட்டிருந்தது. இர. சிவலிங்கம் தமிழ் நாட்டுக்கு சென்று விடுகின்றார். ஆசிரியர்களை அணி திரட்டி சமூக, இலக்கிய நெறியில் நடத்திச் செல்ல உரிய தலைமைத்துவம் இன்றிய நிலையில் 'மலையக மக்கள் இயக்கம்' தோன்றி இராகலை, கண்டி பகுதிகளில் ஆசிரியர்களை இணைத்ததாக கலை இலக்கிய சமூகப் பணியில் செயற் பட்டிருந்தது. அது மலையக இளைஞர் முன்னணி செயற்பட்டவாறு பிரபல்ய நிலையை எட்டவில்லை எனலாம்.

எண்பதுகளின் நடுப்பகுதியில் மீண்டும் துளிர்த்த கலையிலக்கிய முயற்சியில் மலையகக் கலை இலக்கியப் பேரவை பங்கு முக்கியமானது. இதற்குத் தலைவராக முதலில் செயற்பட்டவர் ஏ.வி.பி. கோமஸ் ஆவார். இவர் மாத்தளையில் அதிபராக இருந்தவர். தனது ஆசிரிய வாழ்க்கையில் கவிதை, நாடகம் எனப் பல துறைகளில் பங்களிப்புச் செய்தவர். மலையகக் கலை இலக்கியப் பேரவையில் இணைந்து செயலாற்றிய முரளிதரனும் மாத்தளை வடிவேலனும், ஆசிரியதுறை சார்ந்தவரே.

இக்காலத்தே கவிதைத் துறையில் குறிஞ்சி நாடன், இஸ்மாலிகா, பானா தங்கம், தேவசிகாமணி, புண்ணியமூர்த்தி, ராஜகோபாலன், நித்தியானந்தன், சந்திரலேகா, போன்ற ஆசிரியர்கள் கவிதை முயற்சிகளை மேற்கொண்டார்கள். எண்பதுகளின் பிற்பகுதியில் ஹட்டனில் மானுடம் கலை இலக்கிய வட்டம் தோற்றம் பெற்று பின் நந்தலாலா கலை இலக்கிய வட்டமாக தொண்ணூறுகளில் மாறிய போது அதன் செயற்பாட்டிற்குத் தூண்களாக இருந்து வருபவர்கள் ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அதிலே எஸ். சிவப்பிரகாசம், ஜேம்ஸ் விக்டர் முதலான கல்வித்துறை சார்ந்த செயற்பாட்டு உறுப்பினர்கள் முக்கியஸ்தர்களாக இருக்கின்றனர்.

அதே போல தேசிய கலையிலக்கிய பேரவையின் மலையக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் புதிய பரம்பரை ஆசிரியர்கள் இணைந்திருக்கின்றார்கள். சிவ. ராஜேந்திரன், சற்குருநாதன், பன்னீர் செல்வம் போன்றோர்கள் தொடர்ந்தும் கலை இலக்கிய பணியில் ஈடுபடுவது நோக்கத் தக்கது. அதேபோல ஹட்டனில் சிறிது காலம் ஆசிரியர்கள் உள்ளிட்ட புதிய சிந்தனைப் பேரவை செயற்பாட்டில் ஈடுபட்டது. அதில் லெனின் மதிவாணம், வரதராஜா போன்ற ஆசிரியர்கள் தீவிர செயற்பாடு காட்டியிருந்தனர்.

எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் மலையக நாடக வளர்ச்சியில் ஈடுபாடு காட்டி அதற்கு திருப்பு முனை சமைத்த வகையில் வ. செல்வராஜா, நிஸாம், ஹெலன், இ. நாகலிங்கம், ராஜகோபாலன், வாசுதேவன், சிவ. ராஜேந்திரன் முதலான கல்வித் துறை சார்ந்தவர்களின் பங்களிப்பு போற்றத் தக்கது.

இவ்வாறு பார்க்கும் போது, அறுபதுகளில் இருந்து கடந்த நூற்றாண்டு முடியுமட்டும் மலையக மக்களின் எழுச்சிபூர்வமான அம்சங்களில் தம்மைப் பிணைத்தவர்களாக பல ஆசிரியர்கள் இருந்திருக்கின்றார்கள். வெறுமனே பாடசாலை செயற்பாடுகள் மட்டுமே ஒரு நலிவுற்ற சமுதாய மக்களுக்காக செயலாற்றும் ஆசிரியனுக்கு போதாது. அவன் மாணவர்களுக்கு அறிவு புகட்டும் பணியில் ஈடுபடும் போது அதற்கு பக்கபலமாக அம்மாணவர் சமூகமும் செயற்பட வேண்டுமாயின் அச்சமூகத்தின் விருத்திக்கும் பங்களிக்க வேண்டும். அதற்கு கலை, இலக்கிய, நாடக முயற்சிகளுடன் முனைய வேண்டும். அப்போதே அவனது முயற்சி பலிதமாகும்.

இதை உணர்ந்த முதற் பரம்பரை மலையக ஆசிரியர்கள், தம்மை சமூக செயற்பாட்டாளனாக நிலை நிறுத்திக் கொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டியிருந்தார்கள். அவர்களின் முயற்சி வீண்போகவில்லை என்றே கூறவேண்டும். அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு சமூக உணர்வும்

ஊட்டப்பட்டிருந்தது. மேலும் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தோட்டத் தொழிலாளர்களோடு இணைந்து கொள்ள மலையக தொழிற் சங்கங்களைக் களமாகக் கொண்டிருந்தனர். எனவே தொழிலாளிகளோடு ஈடுபாடு கொண்ட ஒரு ஆசிரிய தலைமுறை கிடைத்தது மலையகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகளாக பரிணமித்து ஆட்சியமைப்பில் துணை போன பின் அவற்றுக்குக் கிடைத்த அதிகாரங்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் பதவியுயர்வுகளில் செல்வாக்குப் பெற்ற காலத்தில் ஆசிரியத்துவம் சார்ந்தவர்களின் செயற்பாடு சிலகாலம் மக்களைத் திருப்திப்படுத்தும் போக்கிலிருந்து மாறுபட்டுப் போனது. என்றாலும் அந்நிலை வெகுகாலம் நீடிக்காமல் மறுபடியும் இளைய ஆசிரியர்கள் வருகையோடு மாற்றமடைந்து வருகின்றது. இந்த மாற்ற முனைப்பில் ஆசிரியர்கள் இணையும் போது, அவர்கள் சிவலிங்கம், திருச்செந்தூரன் போன்றோரை முன்னுதாரணமாகவும் அதேவேளை அவர்களை விமர்சனக் கண்கொண்டும் நோக்கி, கலை, இலக்கிய சாதனங்களையும் தமக்குள் உள்வாங்கி சமூக மாற்ற சக்திகளாக அவற்றை செயற்படுத்த வேண்டும்.

முகடு - இதழ் 1

2001

## இந்நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

சமவெளி மலைகள்- கவிதைத் தொகுதி
(அகளங்கன்- சு.முரளிதரன்)

தியாக யந்திரங்கள் - புது கவிதை தொகுப்பு

கூடைக்குள் தேசம் - ஹைக்கூ கவிதைகள்

மலையக இலக்கிய தளங்கள்



Muralitharan is one of the most promising creative writers among the Indian Tamil community. Displaying his literary potential very early in life he started writing from the age of fifteen. He has won wide acclaim among Tamil literary circles. I am happy that despite his busy working schedule as an academic administrator, he finds time to devote to finer aspects of life like reading and writing. Creative literature mirrors life and Muralitharan's writings reflect the way of life of the people in the Up Country. He writes in a lucid style. His poetry, drama and other creative writings enable the readers to appreciate better the ways of life, customs and manners, joys and sorrows and longings and aspirations of his community. It is well known that pen is mightier than the sword and I am sure Muralitharan will continue to wield his pen for championing the welfare and articulating the needs of his community. *Malayaga Ilakya Thalangal* is a collection of essays centering round art and literature in the tea plantations. I am sure Muralitharan's new venture would receive critical appreciation from the discerning readers.

**Prof. V. Suryanarayan**
**Former Senior Professor and Director,**
**Centre for South and Southeast Asian Studies,**
**University of Madras,**
**Chennai - INDIA**

ISBN No: 955- 8589-01-2

சாரல் வெளியீட்டகம்

*New Green Leaf* ***Kandy.***